
சுவடி : 43
ஏடு : 9
மார்ச் 2019
*
ஆசிரியர்
**வே.ஆனைமுத்து**
*
ஆசிரியர் குழு
**க. முகிலன்**
**தமிழேந்தி**
**வாலாசா வல்லவன்**
**வையவன்**
**சி. பெரியசாமி**
**கோவிராமலிங்கம்**
**சி. நடராசன்**
**மங்கலம் அரசன்**
**தி.துரைசித்தார்த்தன்**
**ஆ. முத்தமிழ்ச்செல்வன்**
*
அனைத்துத் தொடர்புகளுக்கும்
**'சிந்தனையாளன்'**
மனை எண்.277/2
சென்னை-திருவள்ளூர் நெடுஞ்சாலை,
அம்பத்தூர், சென்னை - 600 050.

தொடர்புக்கு :
**94448 04980**
**95975 26990**

மின்னஞ்சல் :
sinthanaiyalantamilmonthly
@gmail.com
*
இதழ் வடிவமைப்பு :
**சன் நகலகம்,** சென்னை-5.
9840015179
*
இணையத்தில் படிக்க
**www.keetru.com**
*



# தமிழின் பெருமையைப் பேசிப் பயன் என்ன? தமிழ் வழியில் எல்லாக் கல்வியும் தரப்படவில்லை தமிழ் தமிழ்நாட்டின் ஆட்சிமொழியாக இல்லை



பிரிட்டிஷ் இந்தியா என்பது 1801இல் உருவானது. 1801 முதல் 1900 வரை மாகாண அளவில் பெரிய பதவிகள் மாவட்ட அளவில் பெரிய பதவிகள் இவற்றில் எல்லாம் பெரிதும் வெள்ளையர்களே அதிகாரிகளாக இருந்தார்கள்.

வட்டாட்சியர் போன்ற பதவிகளில் கையெழுத்துப் போடத் தெரிந்த, எழுதப்படிக்கத் தெரிந்த இந்தியர்கள் வரித்தண்டல் அதிகாரிகளாக அமர்த்தப்பட்டார்கள்.

1835இல்தான் பொதுப்பள்ளி என்பது நிறுவப் பட்டது. சென்னை மாகாணத்தில் 1835இல் பொதுப் பள்ளிகளில் 1 முதல் 5 வரை தமிழ்நாட்டில் தமிழ் வழியிலும் தெலுங்கு நாட்டில் தெலுங்கு வழியிலும் கர்நாடக நாட்டில் கன்னட வழியிலும் தொடக்கக்கல்விப் பாடங்கள் கற்பிக்கப்பட்டன.

சென்னை மாகாண எல்லைக்குள் 6ஆம் வகுப்புக்கு மேல் 10ஆம் வகுப்பு வரையிலும் அதற்கு மேலும் எல்லாப் பாடங்களும் ஆங்கில வழியிலேயே கற்பிக்கப் பட்டன. தாய்மொழிப் பாடம் மட்டும் அவரவர் தாய்மொழியில் கற்பிக்கப்பட்டது. அப்போது மேல்சாதிகளைச் சேர்ந்த இந்துக்கள், கிறித்தவர்கள், இசுலாமியர்கள் கல்வி கற்றார்கள்; இந்துக்களில் பெரும்பான்மையோர் பார்ப்பனர்களாக இருந்தார்கள். அரசாங்க வேலைகளில் ஆவணங்கள் ஆங்கில மொழியில் எழுதப்பட்டன. சென்னை மாகாணத்தில் 1865 முதல் ஆங்கிலம் ஆட்சிமொழி ஆயிற்று. அது வரையில் 10ஆம் வகுப்புப் படித்தவர்கள் எல்லோரும் கீழ் வகுப்பு (Lower grade) அரசுப் பணிகளில் அமர்த்தப்பட்டனர். அதாவது கீழ்நிலை அரசுப் பணிகளில் எல்லாம் மேல்சாதிக்காரர்களே இருக்கும் நிலை அப்போதுதான் ஏற்பட்டது. இது 1910ஆம் ஆண்டு வரை நீடித்தது. அபபோதுதான் சென்னை மாகாணத்தில் பெரும்பாலானவர்களாக இருக்கிற பார்ப்பனரல்லாத சூத்திர மக்கள் விழிப்படைந்தார்கள்.

1891இல் ஆதித்திராவிட மகாசன சபையைப் பண்டித அயோத்திதாசர் அமைத்தார். இரட்டைமலை சீனிவாசன் தீண்டப்படாத மக்களிடத்தில் விழிப்புணர்வை உண்டாக்கினார். சென்னை மாகாண வருவாய்த் துறையில் இருந்த சூத்திரச் சாதிகளைச் சேர்ந்த அலுவலர்கள் மெட்ராஸ் யுனைடெட் லீக் (Madras United League) என்பதை 1912இல் நிறுவினார்கள். அதனுடைய நோக்கம் அரசு அலுவலகங்களில் உள்ள பார்ப்பன ஆதிக்கத்தை எதிர்ப்பதே ஆகும். அவர்கள் டாக்டர் நடேச முதலியார் என்பவரிடம் ஆலோசனை பெற்றார்கள். ஆப்போதுதான் மெட்ராஸ் யுனைடெட் லீக் என்பது Dravidian Association எனப் பெயர் மாற்றம் செய்யப்பட்டது. அதன் சார்பில் சென்னையில் தங்கிப் படிக்க வரும் சூத்திர வகுப்பு மாணவர்கள் தங்கிப் படிக்க வசதியாக (Dravidian Students' Home) திராவிடர் மாணவர் விடுதி தொடங்கப்பட்டது.

அத்துடன், இங்கிலாந்தில் கல்வி பெற்ற டி.எம்.நாயர் அவர்களும், தேவாங்கர் வகுப்பைச் சேர்ந்த நெசவுப் பட்டறை உரிமையாளர் பி.ஏ. பட்டம் பெற்ற தியாகராயச் செட்டியாரும் பார்ப்பனரல்லாதார் நலன் பற்றி அக்கறையுள்ளவர்களாக இருந்தார்கள். இவர்கள் தனித்தனியே நகரவைத் தேர்தல் போன்றவற்றில்

ஈடுபட்டார்கள். இவர்களை ஒன்றாக இணைக்க எல்லா முயற்சிகளையும் செய்தார் டாக்டர் சி.நடேச முதலியார். அதற்காக சென்னையில் 1916இல் நவம்பரில் (South Indian Publishing House) தென்னிந்திய வெளியீட்டுச் சங்கம் தொடங்கப்பட்டது. அதையொட்டி தென்னிந்தியர் நல உரிமைச் சங்கம் (South Indian Liberal Federation) என்கிற அரசியல் அமைப்பு தொடங்கப்பட்டது.

அந்த அரசியல் அமைப்பின் நோக்கம் கல்வியிலும் அரசு வேலையிலும் பார்ப்பனரல்லாதார் எல்லோருக்கும் உரிய பங்கு பெறுவதே ஆகும்.

அப்போது இந்திய அளவில் இந்தியச் சட்டசபை என்று ஒன்று இருந்தது. படித்தவர்களுக்கு மட்டுமே வாக்குரிமை இருந்தது. சென்னை மாகாணச் சட்ட சபையிலும், இந்திய அளவிலான டில்லி சட்டசபையிலும் சென்னை மாகாணத்தின் சார்பில் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் பெரும்பாலோர் பார்ப்பனர்களாகவே இருந்தார்கள். இதை முறியடிக்க ஒரே வழி சென்னை மாகாணச் சட்டசபைக்குத் தேர்ந்தெடுக்கப்படுகிறவர்களில் பார்ப்பனரல்லாதாருக்கு, என்று தொகுதிகள் ஒதுக்கப்பட வேண்டும் என்று, இலண்டனில் மக்களவையில் பிரிட்டிஷ் அரசுக்கு டாக்டர் டி.எம்.நாயர் கோரிக்கை வைத்தார்.

1909க்குப் பிறகு இரண்டாவது அரசியல் சீர்திருத்தம் என்பதை வெள்ளையர்கள் 1919இல் செய்தார்கள். அந்தச் சட்டத்தில் சென்னை மாகாணச் சட்டசபைக்குத் தேர்ந்தெடுக்கப்பட வேண்டிய இடங்களில் 98 இடங்கள் பார்ப்பனரல்லாதார் மட்டுமே போட்டியிடுவதற்குரிய இடங்கள் என பிரிட்டிஷ் அரசாங்கம் ஒத்துக் கொண்டது. 1919ஆம் ஆண்டினுடைய இந்திய அரசாங்கச் சட்டம் என்பது அந்தச் சட்டத்தின் பெயர்.

1920 நவம்பரில் அந்தச் சட்டத்தின்படி பொதுத்தேர்தல் நடந்தது. அத்தேர்தலில் தென்னிந்தியர் நல உரிமைச் சங்கம், தேர்ந்தெடுக்கப்பட வேண்டிய இடங்களுள் பெரும்பான்மை இடங்களைக் கைப்பற்றியது.

அந்த உறுப்பினர்கள் சார்பில் 3 பேர் அமைச்சர்களாக இருந்தார்கள். அவர்கள் அதிகாரம் மாற்றப்பட்ட துறைகள் (Transferred subjects) என்கிற துறைகளை மட்டும் நிர்வகித்தார்கள். ஒதுக்கப்பட்ட துறைகள் (Reserved subjects) என்கிற மூன்றையும் பிரிட்டிஷ்காரர்கள் நிர்வகித்தார்கள். முதலாவது பார்ப்பனரல்லாதார் அமைச்சரவை 17.12.1920இல் பொறுப்பேற்றது. அவர்கள் கல்வியிலும் வேலையிலும் மொத்தம் உள்ள 100 இடங்களையும் பங்கு போட வேண்டும் என்று தீர்மானித்து அதற்கான ஆணைகளை 1921இல் வெளியிட்டார்கள். ஆனால் பார்ப்பனர்கள் அந்த ஏற்பாட்டைக் கட்டுப்பாடாக எதிர்த்தார்கள்.

1923ஆம் ஆண்டு இரண்டாவது பொதுத் தேர்தல் நடந்தது. அதுவரை அந்த ஆணையை நடப்புக்குக் கொண்டுவர முடியவில்லை. 1923ஆம் தேர்தலிலும் தென்னிந்தியர் நல உரிமைச் சங்கத்தார் வெற்றி பெற்றனர். அப்போதும் அந்த ஆணையைப் பார்ப்பனர் எதிர்த்தனர்.

இரண்டாவது அமைச்சரவையில் இந்துமத அறநிலையப் பாதுகாப்புச்சட்டம் என்பதை முதலமைச்சர் பனகல் அரசர் நிறைவேற்றினார். எனவே மூன்றாவதாக 1926இல் நடந்த தேர்தலில் பார்ப்பனர்கள் கட்டுப்பாடாக இருந்து தென்னிந்தியர் நல உரிமைச் சங்கத்தைத் தோற்கடித்தார்கள். எதிர்பாராதவிதமாக பார்ப்பனரல்லாதார் நலனில் அக்கறையுள்ள டாக்டர் ப.சுப்பராயன்- தோற்றுப்போன நீதிக்கட்சிக்காரர்களையும் சுயேச்சைகளையும் இணைத்துக் கொண்டு சுயேச்சை அமைச்சரவை ஒன்றை அமைத்தார். அந்த அமைச்சரவையில் பத்திரப்பதிவு அமைச்சராக இருந்த எஸ்.முத்தையா முதலியார் 100 இடங்களையும் அனைத்து வகுப்புகளுக்கும் பங்குபோடும் அந்த வகுப்புவாரி ஆணையை நடப்புக்குக் கொண்டு வர முயற்சித்தார்.

1919 முதல் 1925 நவம்பர் வரையில் தமிழ் மாகாணக் காங்கிரசின் எல்லாக் கூட்டங்களிலும் பார்ப்பனரல்லாதாருக்கு 50 விழுக்காடு இடங்கள் அளிக்கப்பட வேண்டும் என்று தீர்மானம் கொண்டுபோய் தோற்றுப்போன ஈ.வெ.ரா., 22.11.1925இல் காங்கிரசிலிருந்து வெளியேறினார்.

1926இல் நடைபெற்ற சென்னை மாகாணத் தேர்தலில் தென்னிந்தியர் நல உரிமைச் சங்கத்தின் வேட்பாளர்களை ஆதரித்துப் பெரியார் பரப்புரை செய்தார். அந்த அமைச்சரவைதான் 1927இல் 100 விழுக்காடு இடங்களையும் பங்கு போடுகிற வகுப்புவாரிப் பிரதிநிதித்துவ ஆணையை முதன்முதலாக நடப்புக்குக் கொண்டு வந்தது.

1925இல் சர்.பி.தியாகராயர் மறைந்தார். 1919இல் டாக்டர் நாயர் மறைந்தார். 1928இல் பனகல் அரசல் மறைந்தார். அதன் பிறகு முதல் அமைச்சராக வரக்கூடிய வாய்ப்பு பொப்பிலி அரசருக்குக் கிடைத்தது. நீதிக்கட்சி அமைச்சரவை 1937 வரையில் நீடித்தது.

1937 தேர்தலில் காங்கிரசு முதல் தடவையாக வெற்றி பெற்றது. சி.இராசகோபால ஆச்சாரியார் பொதுத்தேர்தலில் போட்டியிடவில்லையென்றாலும், பட்டதாரித் தொகுதியில் போட்டியிட்டு மேலவை உறுப்பினராகி முதலமைச்சராகப் பொறுப்பேற்றார். அவர் 21.4.1938இல் இந்தியை உயர்நிலைப் பள்ளிகளில் கட்டாயப் பாடமாக அறிமுகப்படுத்தினார். தமிழறிஞர்களும் தமிழ்ப் பேரறிஞர்களும் பெரியார் ஈ.வெ.ரா.வும் இணைந்து இந்தி கட்டாயப் பாடம் என்பதை எதிர்த்துப் போராடி னார்கள். ஆனாலும் இந்தி கட்டாயம் என்னும் ஆணையை நீக்காமலேயே ஆச்சாரியார் 1939இல் பதவி விலகினார்.

**எந்த ஆச்சாரியார் இந்தியைக் கட்டாயப்பாடமாகத் திணித்தாரோ, அவர்தான் 1939இல் 6ஆம்**

**வகுப்பு முதல் 10ஆம் வகுப்பு வரையிலும் ஆங்கிலம் வழியாகக் கல்வி அளிக்கப்பட்டதை நீக்கினார். அதாவது 6ஆம் வகுப்பு முதல் 10ஆம் வகுப்புவரை உயர்நிலைப் பள்ளியில் ஆங்கில வழியில் மட்டுமே கற்பிக்கப்பட்டதை அடியோடு நீக்கி, தமிழ்நாட்டில் தமிழ் வழியிலும் தெலுங்கு நாட்டில் தெலுங்கு வழியிலும் மலையாளத்தில் மலையாள வழியிலும் கர்நாடகத்தில் கன்னட வழியிலும் உயர் நிலைப் பள்ளியில் கல்வி கற்பிப்பதைத் தொடங்கி வைத்த பெருமை இராசகோபால ஆச்சாரியாரைச் சேரும். இதுவரையில் இது சரி.**

உயர்நிலைப் பள்ளிகளில் 1835இல் தொடங்கப்பட்ட ஆங்கிலம் வழிக் கற்பித்தல் ஒழிந்து, 1939 முதல் அவரவர் தாய்மொழியில் உயர்நிலைப் பள்ளிக் கல்வியைக் கற்பிக்கும் வாய்ப்பு சென்னை மாகாணத்தில் வந்தது.

1956இல் சென்னை மாகாணம் மொழிவழி மாநிலங்களாகப் பிரிக்கப்பட்ட பிறகும் தமிழ்நாட்டில் காங்கிரசுக் கட்சி ஆட்சி 1967 வரையில் நடைபெற்றது. காங்கிரசு ஆட்சி 1937 முதல் 1967 வரையில் தொடர்ந்து இருந்ததாக நாம் கொள்ளலாம். அந்த நெடிய காலத்தில் 11ஆம் வகுப்புக்கு மேற்பட்ட கல்லூரிக் கல்வியை எல்லாப் பாடங்களையும் தமிழில் கற்பிக்கிற கொள்கையை காங்கிரசு ஆட்சி நிறைவேற்றவில்லை. அதாவது தமிழ்நாட்டில் பட்ட வகுப்பு, பட்டமேல் வகுப்பு, மருத்துவம், பொறியியல், சட்டம், வேளாண்மை முதலான தொழில் படிப்புகள் தமிழ்வழியில் கற்பிக்க மாற்றப்பட்டிருக்க வேண்டும். அவர்கள் செய்யாதது மிகப்பெரிய வஞ்சகம் என்றுதான் சொல்ல வேண்டும்.

காங்கிரசு ஆட்சிக் காலத்தில் பட்ட வகுப்புகளில் வணிகவியல், வரலாறு, கணிதம், சமூகவியல் முதலான கலைப் பாடங்களை தமிழில் கற்பிக்கின்ற பணிகள் செய்யப்பட்டன. ஆனால், அறிவியல் துறையான மருத்துவப் படிப்பிலோ மற்ற தொழிற் படிப்புகளிலோ தமிழில் கற்பிக்கிற ஏற்பாட்டைச் செய்யவில்லை. இது உறுதி.

அடுத்து 6.3.1967 முதல் 28.2.2019 முடிய (52 ஆண்டுகளாக) ஆள்கிற திராவிடக் கட்சிகள் என்ன செய்தன. நீண்டநாள் கல்வி அமைச்சராக இருந்த பேராசிரியர் க.அன்பழகன் நலமாக நம்முடன் இருக்கிறார். கலைஞர் மு.கருணாநிதி 7.8.2018இல் மறைந்தார். இவர்கள் ஆட்சிப் பொறுப்பில் இருந்த காலத்தில் எல்லாத் துறைகளின் கல்வியையும் தமிழ்வழியில் கற்பிக்க ஏன் முயற்சிக்கவில்லை? இது தமிழர்களுக்குத் திராவிடக் கட்சிகள் இழைத்த அநீதி அல்லவா? இது மட்டுமல்ல.

**இந்தியாவில் எந்த மொழிக்காரரும் தன் சொந்தத் தாய்மொழியில் மருத்துவம், பொறியியல், சட்டம், வேளாண்மை முதலான உயர்படிப்புகளில் 2019 வரையில் கற்க வாய்ப்பு உண்டாக்கப்படவில்லை. அதனால்தான் இந்தியாவில் எந்த அறிவியல் துறையை எடுத்தாலும் வெளிநாட்டைச் சார்ந்தே நிற்க வேண்டியுள்ளது.**

ஒரு இந்தியன், ஆராய்ச்சிப் படிப்புக்காக அமெரிக்கா, செர்மனி, இரஷ்யா, சீனா முதலான அயல்நாடுகளுக்குச் செல்கிறான். மேலே சொன்ன எந்த அயல்நாட்டுக்குப் போனாலும் அந்தந்த நாட்டின் தாய்மொழியைத்தான் அவன் ஓராண்டுக்குக் கற்க வேண்டும். அதன் பிறகுதான் உரிய பாடங்களை அந்தந்த நாட்டுத் தாய்மொழி வழியில் படிக்க வேண்டும். இதன் பொருள் என்ன?

இந்தியாவை 1946 முதல் ஆட்சி செய்த மெத்தப் படித்த பண்டித நேரு, காசியில் படித்த லால் பகதூர் சாஸ்திரி, இங்கிலாந்தில் படித்த இந்திராகாந்தி, டூன் பள்ளியில் படித்த இராஜீவ் காந்தி, பன்மொழி கற்ற பி.வி.நரசிம்மராவ், பொருளாதார நிபுணர் டாக்டர் மன்மோகன் சிங் ஆகிய இத்தனை காங்கிரசுப் பிரதமர்களுக்கும் இது புரியாமல் போனது ஏன்?

ஜனதா கட்சியைச் சேர்ந்த மொரார்ஜி தேசாய், சரண்சிங், வி.பி.சிங், பா.ச.க.வைச் சேர்ந்த வாஜ்பாய், நரேந்திரமோடி ஆகிய பிரதமர்களுக்கும் இது புரியாமல் போனது ஏன்?

அதேபோல் தமிழகத்தை ஆண்ட கு.காமராசர், மு.பக்தவத்சலம், அறிஞர் சி.என்.அண்ணாதுரை, கலைஞர் மு.கருணாநிதி, நாவலர் இரா.நெடுஞ்செழியன், பேராசிரியர் க.அன்பழகன், எம்.ஜி.ஆர், ஜெயலலிதா ஆகிய திராவிடக் கட்சித் தலைவர்களுக்கு இதில் பொறுப்பில்லையா?

**நாம் இவர்களையும் கணக்கில் எடுத்துக் கொண்டு ஓரணியில் திரண்டு முதலில் ஆங்கில வழிக்கல்வியை எதிர்க்க வேண்டும். இரண்டாவதாக இந்தியை விருப்பப் பாடமாகவோ கட்டாயப் பாடமாகவோ ஆட்சிமொழியாகவோ வரப்போவதை எதிர்த்துப் போராட வேண்டும்.**

**மூன்றாவதாக பாலர் வகுப்பு முதல் பல்கலைக் கழகப் படிப்பு வரையில் தாய்மொழியான தமிழ் வழியில் மட்டுமே கற்பிக்கப்பட இந்தத் தலை முறையில் வழி காண வேண்டும்.**

**இந்தியாவிலும், தமிழகத்திலும் எல்லா மக்களும் 21.2.2019 வியாழன் அன்று ''உலகத் தாய் மொழிநாள்'' கொண்டாடினோம். இது வெறும் சடங்காக, இனியும் இருக்கக் கூடாது.**

**01.03.2018** **- வே.ஆனைமுத்து**

# காஷ்மீரில் தொடரும் பயங்கரவாதத் தாக்குதலும் தீர்வுக்கான வழிமுறையும்

க. முகிலன்

கடந்த முப்பது ஆண்டுகளாகக் காஷ்மீர் கலவர பூமியாக இருந்து வருகிறது. பாக்கித்தான் ஊடுருவல் காரர்களுக்கும் இந்தியப் படையினருக்கும் இடையிலான துப்பாக்கிச் சண்டைகள், உரிமைகோரும் காஷ்மீர் மக்களுக்கும் இந்திய ஆயுதப் படையினருக்கும் இடையே நடைபெறும் மோதல்கள் என்று காஷ்மீரில் குருதி சிந்திக் கொண்டே இருக்கிறது.

இந்நிலையில் 14.2.2019 அன்று ஜெய்ஷ்-இ-முகமது இயக்கத்தைச் சேர்ந்த 22 அகவையினரான அபுல் அகமது என்பவர் 350 கிலோ வெடி மருந்து களுடன் ஓட்டி வந்த மகிழுந்தை. ஜம்முவிலிருந்து ஸ்ரீநகர் நோக்கி 2500 மத்திய ரிசர்வ் படை வீரர்களுடன் 78 பேருந்துகள் புல்வாமா மாவட்டத்தில் தேசிய நெடுஞ்சாலையில் சென்று கொண்டிருந்த போது, பக்கவாட்டு இணைப்புச் சாலை வழியாக வந்து, வரிசையில் அய்ந்தாவது பேருந்து மீது மோதியதில் இரண்டு பேருந்துகள் பெரும் சேதத்திற்கு உள்ளானதில், அவற்றில் இருந்த 44 படை வீரர்கள் கொல்லப்பட்டனர்; 40க்கும் மேற்பட்டோர் படுகாயமடைந்தனர்,

இந்த தற்கொலைப்படைத் தாக்குதல் இந்தியா முழுவதும் பெரும் அதிர்வலைகளை ஏற்படுத்தியது. எதிர்க்கட்சிகள் இத்தாக்குதலை வன்மையாகக் கண்டித்தன. உயிரிழந்த படை வீரர்களுக்கு மக்கள் தங்கள் வீரவணக்கத்தைச் செலுத்தினர். இத்தாக்குதலில் கொல்லப்பட்ட நாற்பது பேரில் தமிழ்நாடு, கேரளம், உத்தரப்பிரதேசம், மகாராட்டிரம், பஞ்சாப், பீகார் எனப் பல்வேறு மாநிலங்களைச் சேர்ந்தவர்கள் இருந்தனர். தமிழ்நாட்டில் அரியலூர் மாவட்டத்தைச் சேர்ந்த 35 அகவையினரான சிவச்சந்திரன், தூத்துக்குடி மாவட்டம் சவலாப்பேரியைச் சேர்ந்த 28 அகவையினரான சுப்பிரமணியன் ஆகியோர் இத்தாக்குதலில் கொல்லப்பட்டனர். கொல்லப்பட்டவர்களின் குடும்பத்தினரும், உறவினர்களும் ஆறாத்துயரில் ஆழ்ந்துள்ளனர், அரசுகள் நிதி உதவியை அறிவித்துள்ளன. கொல்லப்பட்டவர்கள் பல்வேறு மாநிலங்களைச் சேர்ந்தவர்கள் என்பதால் இந்திய அளவில் உணர்வுபூர்வமான தாக்கத்தை இத்தாக்குதல் ஏற்படுத்தி உள்ளது.

**2016 சூலையில் ஹிஸ்புல் முஜாகித்தீன் இயக்கத்தின் தளபதி புர்கான் வாகினி ஆயுதப் படையினரால் கொல்லப்பட்டது முதல் காஷ்மீரில் பதற்றமான சூழ்நிலை நீடித்து வருகிறது. இந்தப் பின்னணியில் ஒரே சமயத்தில் 78 பேருந்துகளில் 2500 படை வீரர்கள் சென்றது சரியா என்கிற கேள்வி எழுகிறது. மேலும் இத்துணைப் பேர் செல்லும் போது உளவுத் துறையும், கண்காணிப்புப் பிரிவும் போதிய முன்னெச்சரிக்கை நடவடிக்கை எடுக்கத் தவறிவிட்டனர் என்கிற குற்றச்சாட்டும் எழுந்துள்ளது.**



*புல்வாமா மாவட்டத்தில் ரிசர்வ் படை வீரர்கள் மீது நடத்தப்பட்ட தாக்குதல்*

இந்தியப் படையினர் மீது இதுவரையில் நடத்தப்பட்ட தாக்குதல்கள் பாக்கித்தானிலிருந்து ஆயுதங்களுடன் ஊடுருவிய தீவிரவாதிகளால் நடத்தப்பட்டவையாகும். ஆனால் 14.2.19 அன்று தற்கொலைப் படைத் தாக்குதல் நடத்திய அபுல் அகமது காஷ்மீரின் புல்வாமா மாவட் டத்தைச் சேர்ந்தவர், இது கவலைக்குரிய செய்தியாகும். காஷ்மீரின் இளைஞர்களைக் கொண்டே எதிர்காலத்தில் இதுபோன்ற தற்கொலைப் படைத் தாக்குதல்கள் நடத்தப்படுமோ என்று எண்ண வேண்டியுள்ளது. நரேந்திர மோடி ஆட்சிக்கு வந்த பின் காஷ்மீர் மக்கள் மீது ஏகாதிபத்திய மனப்போக்குடன் நடவடிக்கைகள் எடுக்கப்படுவது அதிகமானதால், இந்திய அரசுக்கு எதிரான மனநிலை காஷ்மீரில் மேலோங்கி வருகிறது. எனவே 2013இல் பயங்கரவாத இயக்கத்தில் சேர்ந்த காஷ்மீர் இளைஞர் எண்ணிக்கை மூன்றாக இருந்தது என்பது 2018இல் 200ஆக உயர்ந்திருக்கிறது.

பிப்பிரவரி 14 அன்று தாக்குதல் நடத்திய காஷ்மீரி இளைஞர் அபுல் அகமது ஓராண்டுக்கு முன்புதான் ஜெய்ஷ்-இ-முகமது இயக்கத்தில் சேர்ந்துள்ளார், இத் தாக்குதலை நடத்தியது தாங்கள்தான் என்று ஜெய்ஷ்-இ-முகமது இயக்கம் அறிவித்ததுடன், தற்கொலைப் படைத் தாக்குதலை மேற்கொள்வதற்குமுன் அபுல் அகமது பேசிய காணொலியையும் வெளியிட்டது.

ஜெய்ஷ்-இ-முகமது இயக்கம் பாக்கித்தானிலிருந்து கொண்டு காஷ்மீர் மீது தாக்குதல்களைத் தொடுத்துக் கொண்டிருக்கிறது. இந்த இயக்கத்தின் தலைவர் மசூத் அசார் பாக்கித்தானில் உள்ள பஞ்சாப் மாநிலம் பகவல் பூரைச் சேர்ந்தவர். மசூத் அசார் 1994ஆம் ஆண்டு ஸ்ரீநகரில் கைது செய்யப்பட்டுச் சிறையில் அடைக்க ப்பட்டார்.

மசூத் அசாரின் தம்பியும் அவரின் கூட்டாளிகளும் சேர்ந்து 1999இல் 155 பயணிகளுடனான இந்திய வானூர்தியைக் கடத்தி ஆப்கானில் கந்தகார் வானூர்தி நிலையத்திற்குக் கொண்டு சென்றனர். அப்பயணிகளை மீட்பதற்காக இந்திய அரசு மசூத் அசாரை விடுதலை செய்து, கடத்தல்காரர்களிடம் ஒப்படைத்தது. அங்கிருந்து மசூத் அசார் பாக்கித்தான் சென்றார். 2000ஆம் ஆண்டில் ஜெய்ஷ்-இ-முகமது அமைப்பை உருவாக்கி காஷ்மீரில் தாக்குதல்களை நடத்தி வருகிறார்.

2001 அக்டோபர் முதல் நாள் காஷ்மீர் சட்டமன்றத் தின் மீது ஜெய்ஷ்-இ-முகமது இயக்கத்தினர் நடத்திய தாக்குதலில் 38 பேர் கொல்லப்பட்டனர். 2014 திசம்பர் 5 அன்று எல்லைக்கோட்டுக்கு அருகில் யூரியில் இந்தியப் படை முகாம் மீது நடத்திய தாக்குதலில் 11 பாதுகாப்புப் படையினர் உட்பட 17 பேர் கொல்லப்பட்டனர். 2016 சூன் 2 அன்று பதான்கோட் விமான தளத்தின் மீது நடத்திய தாக்குதலில் மூன்று படை வீரர்கள் கொல்லப் பட்டனர். 2016 நவம்பர் 29 அன்று நக்ரோட்டா படை முகாம் மீது நடத்திய தாக்குதலில் 10 படைவீரர்கள் கொல்லப்பட்டனர். 2018 பிப்ரவரி 10 அன்று ஜம்முவில் சுன்ஜுவான் படை முகாம் மீது நடத்திய தாக்குதலில் 11 படை வீரர்கள் கொல்லப்பட்டனர்.

ஜெய்ஷ்-இ-முகமது இயக்கம் இத்தாக்குதல்களை பாக்கித்தான் அரசின் உளவுத் துறை மற்றும் இராணு வத்தின் துணையுடன் செய்து வருகிறது. இந்திய அரசின் முயற்சியால், ஜெய்ஷ்-இ-முகமது அமைப்பை ஐ.நா.வின் பாதுகாப்பு அவை தடை செய்யப்பட்ட இயக்கமாகப் பட்டியலிட்டுள்ளது. எனவே மசூத் அசாரை சர்வதேச பயங்கரவாதி என்று ஐ.நா. பாதுகாப்பு அவை அறிவிக்க வேண்டும் என்று இந்தியா வலியுறுத்தி வருகிறது. இதற்கு சீனா தொடர்ந்து முட்டுக்கட்டை போட்டு வருகிறது.

ஜெய்ஷ்-இ-முகமது இயக்கம் போன்று பல தீவிரவாத அமைப்புகள் காஷ்மீரில் ஊடுருவித் தாக்கு தல்களை நடத்தி வருகின்றன. இத்தீவிரவாத அமைப்பு களுக்குப் பாக்கித்தான் அரசும், படையும் பலவகை யிலும் துணையாக இருந்து வருகின்றன. இவற்றின் நோக்கம் காஷ்மீரில் அமைதியற்ற - பதற்றமான சூழ் நிலையை நீடிக்கச் செய்வதன் மூலம் இந்திய அரசை அச்சுறுத்துவதே ஆகும். பாக்கித்தானில் மக்களால் தேர்ந் தெடுக்கப்பட்ட அரசுகள் ஆட்சியில் இருந்தாலும் உண் மையான அதிகாரம் பாக்கித்தான் இராணுவத் தலைமை யிடம்தான் இருக்கிறது. உலக வரைபடத்தில் பாக்கித்தான்




*இறந்த ராணுவ வீரரின் உடலை சுமந்து வரும் உள்துறை அமைச்சர் ராஜ்நாத்சிங்*


அமைந்துள்ள நிலப்பகுதி நிலவியல்சார் அரசியல் (Geo-Political) முதன்மை வாய்ந்ததாக இருக்கிறது. அதனால்தான் பல ஆண்டுகளாக அமெரிக்கா இந்தியா வையும் சீனாவையும் கட்டுப்படுத்துவதற்குப் பாக்கித் தானைப் பயன்படுத்தி வருகிறது. சீனாவும் இந்தியாவை மிரட்ட பாக்கித்தானைப் பயன்படுத்தி வருகிறது.

2019 பிப்பிரவரி 14 அன்று நடத்தப்பட்ட கொடிய தாக்குதலுக்குப் பதிலடியாகப் பாக்கித்தான் மீது தாக்குதல் நடத்த வேண்டும் என்று உணர்ச்சிவயப்பட்ட நிலை யில் பல தரப்பினரும் கூறி வருகின்றனர். குறிப்பாக சங் பரிவாரங்கள் இதை அழுத்தமாக வலியுறுத்தின. இந்திய அரசு பாக்கித்தான் நாட்டுத் தூதுவரை அழைத்துக் கண்டித்துள்ளது. "வேண்டப்பட்ட நாடு" என்கிற பட்டிய லிலிருந்து பாக்கித்தானை நீக்கியுள்ளது. பாக்கித்தானி லிருந்து இறக்குமதியாகும் பண்டங்கள் மீது 200 விழுக்காடு வரி விதித்துள்ளது. காஷ்மீரில் பிரிவினை வாதத் தலைவர்கள் ஆறு பேருக்கு அரசு அளித்துவந்த பாதுகாப்பு விலக்கிக் கொள்ளப்பட்டுள்ளது. தீவிரவாதிகள் மீது எங்கு, எப்போது, எப்படிப்பட்ட தாக்குதலை நடத்து வது என்று முடிவு செய்யும் அதிகாரம் இந்திய இராணுவத் தலைமைக்கு அளிக்கப்பட்டிருப்பதாகப் பிரதமர் மோடி கூறுகிறார்.

அமெரிக்காவின் அதிபர் டொனால்டு டிரம்ப், புல்வாமா தாக்குதலைக் கண்டித்துள்ளார். பயங்கரவாதத்துக்கு எதிராக இந்தியா மேற்கொள்ளும் எல்லா நடவடிக்கை களுக்கும் அமெரிக்கா துணை நிற்கும் என்று கூறியுள்ளார். ஆனால் ஜெய்ஷ்-இ-முகமது இயக்கத்தை ஒடுக்குமாறு பாக்கித்தானுக்கு டிரம்பால் நெருக்கடி தரமுடியாது. ஏனெனில், ஆப்கானிஸ்தானிலிருந்து அமெரிக்கப் படை களை திரும்பப் பெறுவது தொடர்பாக தாலிபான்களுடன் பேச்சுவார்த்தை நடத்த அமெரிக்கா பாக்கித்தானின் உதவியை நாடியுள்ளது. சீனாவும் புல்வாமா தாக்கு



சிவச்சந்திரன்



சுப்பிரமணியன்

தலைக் கண்டித்துள்ள போதிலும், மசூத் அசார் விட யத்தில் தங்கள் நிலையில் மாற்றம் இல்லை என்றும் அறிவித்துள்ளது. உலகில் பல நாடுகளின் அரசுகளும் புல்வாமா தாக்குதலைக் கண்டித்திருப்பது அரசு முறையிலான வெறும் சடங்கு மட்டுமே ஆகும். இந் நாடுகளை நம்பி இந்திய அரசு பாக்கித்தான்மீது தாக்குதல் தொடுக்க முடியாது.

நிலவியல்சார் அரசியல் சூழலில் பாக்கித்தானைத் தனிமைப்படுத்துவது எளிதானதல்ல. ஆயினும் இந்திய அரசு, எல்லை தாண்டி இந்தியாவுக்குள் நுழையும் பயங்கரவாதிகள் கடந்த முப்பது ஆண்டுகளாக நடத்தி வரும் தாக்குதல்களுக்குப் பாக்கித்தான் அரசும், இராணு வமும் துணைபுரிவதற்கான சான்றுகளை உலக நாடு களிடம் எடுத்துரைக்க வேண்டும். குறிப்பாக, பாக்கித் தானுக்கு அரணாக உள்ள அமெரிக்காவிடமும் சீனா விடமும் தேர்ந்த அயலுறவு மதிநுட்பத்தைப் பயன்படுத்தி, காஷ்மீரில் பயங்கரவாதத் தாக்குதல்களுக்குக் காரண மாக உள்ள தீவிரவாத இயக்கங்களைப் பாக்கித்தான் அரசு முடக்குமாறு செய்ய முடியும்.

புல்வாமா தாக்குதலுக்குப்பின் இந்தியப் படைகள் பாக்கித்தான் எல்லைக்கோட்டுக்கு அருகில் இராணுவ ஒத்திகைகளை நடத்தின. வரும் நாடாளுமன்றத் தேர் தலுக்கு முன்னர் நரேந்திர மோடி புல்வாமா தாக்கு தலுக்குப் பழிதீர்க்கும் வகையில் பாக்கித்தான் மீது தாக்குதல் நடத்தி, அதன்மூலம் தன் தேசபக்தியைக் காட்டி, தேர்தலில் வாக்குகளைப் பெற முயல்வார் என்கிற ஒரு கருத்தும் நிலவுகிறது. இந்திய அரசு இதற்குமுன் பாக்கித்தான் மீது நடத்திய தாக்குதல்களால் என்ன பயன் விளைந்தது என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும்.

2016 செப்டம்பரில் காஷ்மீரில் யுரியில் இராணுவ முகாம் மீது ஜெய்ஷ்-இ-முகமது பயங்கரவாதிகள் தாக்கியதில் 19 படை வீரர்கள் மாண்டனர். இதற்கு எதிர்வினையாக, துல்லியத் தாக்குதல் என்ற பெயரில், பாக்கித்தான் எல்லையை ஒட்டிய பகுதிகளில் இருந்த தீவிரவாத முகாம்களை இந்தியப் படைகள் அழித்தன. மீண்டும் அதுபோன்ற துல்லிய தாக்குதல் நடத்தலாம் என்று சிலர் கூறுகின்றனர். 2016இல் இந்தியப் படைகள் துல்லிய தாக்குதல் நடத்திய போது பாக்கித்தான் எதிர்த் தாக்குதல் நடத்தாமல் இருந்தது போல், இம்முறையும் இருக்கும் என்று கூறமுடியாது. அணு ஆயுதங்களை இந்தியாவும் பாக்கித்தானும் வைத்துள்ள நிலையில் முழு வீச்சிலான போர் மூளாமல் தவிர்ப்பதே இரண்டு நாடுகளுக்கும் நல்லதாகும். பயங்கரவாதிகள் நடத்திய இத்தாக்குதலுக்கு அவர்கள் எதிர்பார்க்கும் தன்மையில் எதிர்வினை ஆற்றக்கூடாது.

பாக்கித்தான் பிரதமர் இம்ரான்கான் புல்வாமா தாக்குதலுக்கும் பாக்கித்தானுக்கும் தொடர்பு இருப்பதற் கான ஆதாரத்தைக் கேட்டிருக்கிறார். 2008 நவம்பர் 26 அன்று மும்பையில் நடந்த கொடிய தாக்குதலுக்குப் பாக்கித்தானிடம் உரிய ஆதாரங்கள் அளிக்கப்பட்டன. 2016 சனவரியில் பதான்கோட் வானூர்தி தளத்தின் மீது நடத்திய தாக்குதல் தொடர்பாக பாக்கித்தான் குழு நேரில் பார்வையிட அனுமதிக்கப்பட்டு, ஆதாரங்கள் அளிக்கப்பட்டன. இவற்றின் மீது பாக்கித்தான் அரசு உருப்படியான நடவடிக்கை எதுவும் எடுக்கவில்லை. இம்ரான்கான் இராணுவத்தின் குரலை எதிரொலிக்கிறார்.

**காஷ்மீரில் பயங்கரவாதத்தை ஒழிப்பதற்கும் அமைதியை நிலைநாட்டுவதற்கும் உள்ள ஒரே வழி காஷ்மீரிகளிடமிருந்து இந்திய அரசு பறித்த உரிமைகளை மீண்டும் அவர்களுக்கு வழங்கு வதே ஆகும். புல்வாமா தாக்குதல் பற்றி பக்கம் பக்கமாக எழுதும் செய்தி ஏடுகளும், மணிக்கணக் கில் விவாதங்கள் நடத்தும் காட்சி ஊடகங்களும் காஷ்மீரிகளின் பறிக்கப்பட்ட உரிமைகள் குறித்து எதுவும் கூறாமல் உண்மை நிலையை மறைக்கப் பார்க்கின்றன.**

2016 ஆகத்து 9 அன்று மத்தியப்பிரதேசத்தில் ஒரு பொதுக் கூட்டத்தில் பேசிய போது, பிரதமர் நரேந்திர மோடி, ''தவறாக வழிநடத்தப்படும் இளைஞர்கள் சிலர் போராட்டம் நடத்துகின்றனர்; ஒவ்வொரு இந்தியனுக் கும் இருக்கும் சுதந்தரம் காஷ்மீரிக்கும் இருக்கிறது'' என்று கூறினார். வரலாற்று உண்மையை மூடி மறைக்கும் பேச்சு இது! இந்தியாவில் ஜம்மு காஷ்மீர் மாநிலம் பிற தனித்துவமான தன்னாட்சி உரிமைகளை இந்திய அரசமைப்புச் சட்டப்படி பெற்றிருந்தனர். இந்த உரிமைகள் பறிக்கப்பட்டதால்தான் காஷ்மீர் மக்கள் போராடி வருகின்றனர். இவர்களை இந்தியத் தேசிய நீரோட்டத்தில் முற்றிலுமாகக் கரைத்து விடவேண்டு மென்பதற்காக ஆறு காஷ்மீரிகளுக்கு ஒரு இந்திய இராணுவ வீரர் துப்பாக்கியுடன் அச்சுறுத்திக் கொண்டி ருக்கிறார்.

**1947 அக்டோபர் 27 அன்று காஷ்மீர் மன்னர் அரிசிங் இந்தியாவுடன் இணைவதற்கான ஓர்**



*கோவில்பட்டி அருகே சவலாப்பேரியில் நடந்த சி.பி.ஆர்.எப். படை வீரர் சுப்பிரமணியன் உடல் அடக்க நிகழ்ச்சியில் துணை முதல்வர் ஓ.பன்னீர்செல்வம், மத்திய அமைச்சர் பொன்.ராதாகிருஷ்ணன் மற்றும் அமைச்சர்கள் இறுதி மரியாதை செலுத்தினர்.*

**ஒப்பந்தத்தில் கையொப்பம் இட்டார். அதன்படி, பாதுகாப்பு, அயலுறவு, நாணயம், தொலைத் தொடர்பு தவிர்த்த மற்ற விடயங்கள் குறித்து சட்டம் இயற்றும் அதிகாரம் காஷ்மீருக்கு உண்டு. இந்திய அரசமைப்புச் சட்டம் விதி 370இல் இந்தப் பாதுகாப்பு 1949 அக்டோபரில் உறுதி செய்யப் பட்டது.**

1952இல் ஜம்மு-காஷ்மீர் பிரதமர் ஷேக் அப்துல்லா வுக்கும் இந்தியப் பிரதமர் நேருவுக்கும் இடையில் தில்லியில் ஓர் ஒப்பந்தம் கையெழுத்தானது. இதன்படி ஜம்மு-காஷ்மீருக்குத் தனிக்கொடி உண்டு; ஆளுநர் ஜம்மு-காஷ்மீர் சட்டமன்றத்தால் தேர்ந்தெடுக்கப்படு வார்; எஞ்சிய அதிகாரங்கள் ஜம்மு-காஷ்மீருக்கே உரியது; உச்சநீதிமன்றம் மாநிலங்களுக்கு இடையிலான சிக்கல் கள் தவிர, பிறவற்றில் தலையிட முடியாது; தன்னாட்சி கொண்ட தேர்தல் ஆணையம் முதலான அதிகாரங்கள் தில்லி ஒப்பந்தத்தில் உறுதி செய்யப்பட்டன. தில்லி ஒப்பந்தத்தின் அடிப்படையில் 1954இல் நாடாளு மன்றத்தில் விதி 35-ஏ இயற்றப்பட்டது. இதன்படி ஜம்மு-காஷ்மீர் நிரந்தரக் குடிமக்களுக்கான சிறப்பு உரிமைகள், சலுகைகள் தொடர்பான சட்டங்களை இயற்றும் அதிகாரம் உண்டு. 1951இல் ஜம்மு-காஷ்மீரில் நடந்த தேர்தல் மூலம் அமைக்கப்பட்ட சட்டமன்றத்தின் மூலம் ஜம்மு-காஷ்மீருக்கு என்று தனியாக ஒரு அரசியல் சட்டம் 1956 நவம்பரில் இயற்றப்பட்டு, 1957 சனவரி 26இல் நடப்புக்கு வந்தது. அதில் மேற்குறித் துள்ள உரிமைகள் உறுதி செய்யப்பட்டன. **இந்த விதி 35-ஏ, விதி 370 ஆகியவற்றை நீக்க வேண்டுமென்று சங்பரிவாரங்கள் நீண்டகாலமாகக் கோரி வரு கின்றன.**

நேருவின் மறைவுக்குப்பின் 1964 முதல் ஜம்மு-காஷ்மீர் மாநிலத்திற்குச் சட்டப்படி வழங்கப்பட்டிருந்த தன்னாட்சி அதிகாரங்கள் இந்திய அரசால் படிப்படியாகப் பறிக்கப்பட்டன. குறிப்பாக, இந்திரா காந்தி பிரதமராக இருந்தபோது காஷ்மீர் அரசியலில் போட்டி அதிகார மய்யங்களை உருவாக்கி, அவர்களிடையே பிளவுகளை ஏற்படுத்தி, பற்பல ஆட்சிக்கவிழ்ப்புச் சூழ்ச்சிகள் செய்து, ஜம்மு-காஷ்மீருக்கு வழங்கப்பட்டிருந்த தன்னாட்சி உரிமைகளை முடமாக்கினார். 1954 முதல் 1994 வரையிலான காலத்தில் இந்திய அரசின் ஏகாதிபத்திய மனப்போக்கின் காரணமாக, குடியரசுத் தலைவர் பிறப்பித்த 47 ஆணைகள் மூலம் காஷ்மீரின் தன்னாட்சி உரிமைகள் பறிக்கப்பட்டன.

தில்லி ஆட்சியாளர்களால் ஜம்மு-காஷ்மீரின் அரசியல் வாதிகள் பகடைக் காய்களாகத் தொடர்ந்து பயன்படுத்தப் படுவதை எதிர்த்தே காஷ்மீர் இளைஞர்கள் ஜம்மு-காஷ்மீர் விடுதலை முன்னணி என்பதை அமைத்து தில்லி ஏகாதிபத்தியத்திற்கு எதிராக ஆயுதப் போராட்டத் தைத் தொடங்கினார்கள். காஷ்மீர் தனிநாடாக வேண்டும் என்ற பிரிவினை கோரும் பல அமைப்புகள் இயங்கிக் கொண்டிருக்கின்றன. இந்திய அரசு இதைச் சட்டம் - ஒழுங்கு பிரச்சனையாகக் கருதி, படை வலிமையைக் கொண்டு அடக்கிட மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் தோல்வியிலேயே முடிந்துள்ளன. காஷ்மீரின் கொந்தளிப் பான சூழ்நிலையைப் பாக்கித்தான் பயன்படுத்தி, தீவிரவாதிகளுக்குப் பயிற்சி அளித்து, தாக்குதல்களை நடத்தி வருகிறது.



*சுப்பிரமணியனின் மனைவி கிருஷ்ணவேணியிடம் தமிழக அரசு சார்பில் ரூ.20 லட்சத்தை வழங்கிய துணை முதல்வர் ஓ.பன்னீர்செல்வம்*

**எனவே ஜம்மு-காஷ்மீரில் தீவிரவாதத்திற்கு முற்றுப்புள்ளி வைப்பதற்கான ஒரே வழி முன்பு வழங்கப்பட்டிருந்த தன்னாட்சி உரிமைகளை மீண்டும் அளிப்பதே ஆகும். 2010ஆம் ஆண்டில் மன்மோகன் சிங் பிரதமராக இருந்தபோது ஜம்மு-காஷ்மீரில் பெரும் கலவரம் நடந்தது. 130 பேர் கொல்லப்பட்டனர். அப்போது இது குறித்து ஆராய நடுவண் அரசு ஒரு தூதுக் குழுவை அமைத்தது. 2011இல் அக்குழு அளித்த அறிக்கையில், 1952க்குப் பிறகு ஜம்மு-காஷ்மீருக்கு விரிவாக்கம் செய்யப்பட்ட நடுவண் அரசின் சட்டங்களை மறு ஆய்வு செய்ய வேண்டும்; அரசமைப்புச் சட்டத்தில் விதி 370 தற்காலிகமானது என்று இருப்பதைச் சிறப்பு ஏற்பாடு என்று மாற்ற வேண்டும் என்று பரிந்துரைக்கப் பட்டிருந்தது.**

எனவே இந்திய அரசு காஷ்மீரின் பிரிவினை கோரும் தலைவர்கள் உட்பட அனைத்துத் தரப்புத் தலைவர்களுடனும் பேச்சுவார்த்தை நடத்தி பறிக்கப் பட்ட தன்னாட்சி உரிமைகளை மீண்டும் ஜம்மு-காஷ்மீர் மக்களுக்கு அளிப்பதே ஜம்மு-காஷ்மீர் மாநிலத்தில் பயங்கரவாதத்திற்கு முற்றுப்புள்ளி வைப்பதாக அமையும்.

மொழிவழித் தேசிய இனங்களின் அடிப்படையில் அமைந்துள்ள எல்லா மாநிலங்களுக்கும் இத்தகைய தன்னாட்சி உரிமைகள் அளிக்கப்பட வேண்டும். மய்யப் படுத்தப்பட்ட ஒற்றை அதிகார நடுவண் ஆட்சி எல்லா வகையிலும் மக்களுக்கு எதிரான ஆட்சியாகவே இருந்து வருகிறது. உண்மையான சனநாயகம் தன்னாட்சி பெற்ற மாநிலங்கள் மூலமே இந்தியாவில் மலரும்.

**குறிப்பு :** பிப்ரவரி 26 அன்று பாக்கித்தானில் பாலக்கோட்டில் ஜெய்சிஸ்-இ-முகமது பயங்கரவாதிகள் முகாம்கள் மீது இந்திய வான்படை தாக்குதல் நடத்தியற்கு முன்பு எழுத்தப்பட்ட கட்டுரை.

# ஆனை. பன்னீர்செல்வம் 63ஆம் பிறந்த நாள் ஆசைமகள் ‘ஆசுபள்’ விரும்பியபடி!



வே. ஆனைமுத்து - ஆ. சுசீலா இணையரின் மூத்த மகன் ஆனை. பன்னீர்செல்வம்; அவருடைய அன்புத் துணைவியார் ப.போதம்மாள். இவ்விணையரின் ஆசை மகள் ஆசுபள்.

ஆசுபள் சென்னை கிறித்துவக் கல்லூரியில் அரசியல் - அறிவியல் பட்ட வகுப்பில் பயிலுகிறார்; இது இறுதி ஆண்டு.

படிப்பில் சுட்டி; பேராசிரியர்களாலும் உடன் பயிலும் தோழர்களாலும், தோழியர்களாலும் நன்கு மதிக்கப் படுகிறவர். 17.2.19இல், ஆசுபள், தன் தந்தையின் 63ஆம் பிறந்த நாள் அன்று, தன்னுடன் பயிலும் தோழர்கள், தோழியர்கள் - 20 பேர்களைத் தம் இல்லத்துக்கு அழைத்தார்.

தம் தந்தை 63ஆம் பிறந்த நாளை ஒட்டி, 17.2.2019 ஞாயிறு மதியம் 1 மணிக்கு இனிப்புக் கட்டியை (Cake) வெட்டினார். இனிப்புத் துண்டுகளை மகிழ்ச்சியுடன் தோழர்கள், தோழியர்களுக்கு ஆசுபள் அளித்தார். பகல் 1.30 மணிக்கு, வந்திருந்த அனைத்து மாணவ-மாணவியர் மற்றும் பெரியவர்களுக்குப் புலால் (Briyani) உணவை மகிழ்ச்சியுடன் படைத்தனர்.

நான், வருகை தந்த மாணவ-மாணவியரை கையைக் குலுக்கி வரவேற்றேன்.

என் பெயர்த்தி வீடு, 17.2.2019 அன்று மகிழ்ச்சியில் திளைத்தது.

நீடு வாழ்க ஆனை. பன்னீர்செல்வம்!

**- வே. ஆனைமுத்து**

# இராஜீவ் காந்தி கொலைக் குற்றம் சுமத்தப்பட்டவர்கள் சாகும் வரை சிறையிலிருக்க வேண்டுமா?

## 2019 மார்ச்சு 9 தமிழகம் எங்கும் மனிதச் சங்கிலி, ஊரே திரண்டு குரல் எழுப்புங்கள்!

* இராஜீவ் காந்தி கொலைக் குற்றம் சாற்றப் பெற்றவர்கள் ஏழு பேரையும், அரசமைப்புச் சட்டப்படித் தமிழக ஆளுநர் விடுவிக்க அதிகாரம் உண்டு என, உச்சநீதிமன்றம் தீர்ப்பு வழங்கிவிட்டது.

* தமிழக அரசினர் - கொலைக்குற்றம் சாற்றப் பெற்ற ஏழு பேரையும் உடனே விடுதலை செய்ய வேண்டும் எனத் தமிழக ஆளுநருக்குப் பரிந்துரை செய்துவிட்டனர்.

* தமிழக ஆளுநர் அவர்களை நேரில் பார்த்தும், தமிழகத்தின் பல மாவட்ட மக்களை நேரில் பார்த்தும் பேரறிவாளன் தாயார் அற்புதம் அம்மாள், ஏழு பேரையும் விடுதலை செய்ய முன்வாருங்கள் என வேண்டிக் கொண்டார்.

தமிழ்ப் பெருமக்களே!

**2019 மார்ச்சு 9 சனிக்கிழமை மாலை 4 மணிமுதல் 6 மணிவரையில் – சென்னை, கோவை, மதுரை, திருச்சி, நெல்லை, சேலம், புதுவை ஆகிய பெருநகரங்களில் மனிதச் சங்கிலி அறப்போராட்டம் நடைபெறும்.**

ஒவ்வொரு பெருநகரத்திலும் பெருந்திரளாகக் கூடி

**தமிழக ஆளுநர் அவர்களே!**
**ஏழு அப்பாவித் தமிழர்களை,**
**உடனே விடுதலை செய்யுங்கள்**

என முழக்குங்கள்!

**- மார்க்சியப் பெரியாரியப் பொதுவுடைமைக் கட்சி**

# தேசிய குடிமக்கள் பதிவேடு (National Register of Citizens of India) தேவையா?

குட்டுவன்

ஒன்றிய அரசு தேவையற்ற துறைகளில் பொதுச் செலவினைப் பெருக்கி மேலும் அரசுக்கடனை உயர்த்தி வருகிறது. அதிக கடன் பெறும் நாடுகளில் இந்தியா ஒன்றாகத் திகழ்கிறது. அண்மையில் வந்த அரசுப் புள்ளிவிவரங்களின்படி 2014இல் ரூ.55 இலட்சம் கோடியாக இருந்த ஒன்றிய அரசின் கடன் ஜனவரி 2019இல் ரூ.83 இலட்சம் கோடி அளவிற்கு உயர்ந்துள்ளது.

இந்தியாவினுடைய குடிமக்கள் அனைவருக்கும் ஒரே சீரான அடையாள அட்டையை (ஆதார்) வழங்கி அதற்கென ஒரு தனி அமைப்பைத் தொடங்கிச் செலவிட்ட தொகை ரூ.9 ஆயிரத்து 55 கோடி ஆகும். அதிக அளவில் செலவிட்ட பிறகும் உச்சநீதிமன்றத் தலைமை நீதிபதி தீபக் மிஸ்ரா உட்பட 5 நீதிபதிகள் கொண்ட அமர்வு ஆதார் தொடர்பான தீர்ப்பினை (2018 செப்டம்பர்) திங்களில் வெளியிட்டது. இத்தீர்ப்பு ஆதார் அட்டையை அறிமுகப்படுத்துவதற்கான காரணங்கள் பலவற்றைச் செயலிழக்கச் செய்துவிட்டது. இத்தீர்ப்பினைச் சில புள்ளிவிவரங்கள் அடிப்படையில் ஆய்வு செய்தால் இன்னும் புதிய சிக்கல்கள்தான் எழுந்து நிற்கின்றன என்பது புலனாகும்.

இந்தியாவில் 50 விழுக்காட்டு மக்கள் வறுமைக் கோட்டிற்குக் கீழ் வாழ்கின்றனர். தமிழ்நாடு, கேரளா மற்றும் சில மாநிலங்களைத் தவிர்த்துப்பெரும்பாலான மாநிலங்களில் முழுமையான பொது விநியோகத் திட்டம் இன்றளவும் நடைமுறைப்படுத்தப்படவில்லை. அதற்குரிய புள்ளிவிவரங்கள் உரிய முறையில் இதுவரை சேகரிக்கப்படவில்லை.

இந்தியாவில் ஒட்டுமொத்த மக்கள் தொகையில் வருமானவரி செலுத்துவோர் 2.2 விழுக்காட்டு அளவே உள்ளனர். உச்சநீதிமன்றத் தீர்ப்பில் வருமான வரி செலுத்துவோர் ஆதார் எண்ணை நிரந்தர வருமான கணக்கு எண்ணுடன் (யு) இணைக்க வேண்டும் என்று வலியுறுத்தியது. 2.2 விழுக்காடு மக்கள் தொகையினருக்காக ஆதார் எண்ணை கட்டாயப்படுத்துவது எவ்வகையில் வருமான வரித்துறையினருக்குப் பயனளிக்கும் என்பது இன்றுவரை புதிராகவே உள்ளது.

வணிக வங்கிகள் இணைய பணப்பரிமாற்றத்தில் ஈடுபடும் வங்கிகளுக்கு இனிமேல் ஆதார் அட்டை கட்டாயமில்லை என்று அறிவித்துள்ளது. இது ஒரு வகையில் கறுப்புப் பணத்தை வைத்திருப்பவர்களுக்குச் சாதகமாக அமையும். ஏனென்றால் ஆதார் அட்டையை ஆதாரமாக வைத்து வங்கிக்கணக்கை இணையதளம் வழியாக வருமான வரித்துறையினர் வரி ஏய்ப்பாளர்கள் வரி தவிர்ப்பாளர்களை இனம் காண முடியாது.

இந்தியாவில் கைப்பேசியைப் பயன்படுத்துவோர் எண்ணிக்கை 82 கோடியாகும். கைப்பேசிகளைப் பயன்படுத்துவதற்குத் தேவையான தொகுப்பியைப் (சிம் அட்டை) பெற ஆதார் எண் அவசியமில்லை என்றும் இத்தீர்ப்பில் கூறப்பட்டுள்ளது. ஆதார் எண்ணை வைத்துக் கைப்பேசி எண்ணைக் கண்டுபிடிப்பதற்கு காவல் துறையினர் மற்றும் பாதுகாப்புத் துறையினருக்குக் கைப்பேசி எண்ணை ஆதார் எண்ணோடு இணைத்திருந்தால் குற்றவாளிகளை எளிதில் கண்டுபிடிக்கலாம் என்று சொல்லப்பட்ட ஒரு காரணமும் அடிபட்டுவிட்டது.

ஒன்றிய அரசின் பல்வேறு நுழைவுத்தேர்வுகளை எழுதும் மாணவர்களுக்கும் ஆதார் அவசியமில்லை என்றும், பள்ளிகளில் மாணவர்கள் சேர்க்கைக்கும் ஆதார் தேவையில்லை என்றும் தீர்ப்பில் சுட்டப்பட்டுள்ளது. இவ்வாறு இந்த ஆதார் அட்டையின் பயன்பாடு பெருமளவில் பயனற்றதாகித் தோற்றுப் போனது.

அரசின் நலத் திட்டங்களைப் பெறும் பெரும்பாலான ஏழை மக்கள் குடிசைகளிலும் பாதுகாப்பற்ற குடியிருப்புகளிலும் வாழ்ந்து வருகின்றனர். பெரும் மழை புயல் மற்றும் தீ விபத்துகளால் ஏழைகளின் வாழ்விடங்கள் அடிக்கடி பாதிப்புக்குள்ளாகின்றன.

அண்மையில் தமிழ்நாட்டில் தஞ்சை புதுக்கோட்டை திருவாரூர் ஆகிய மாவட்டங்களில் கஜா புயல் தாக்கிய போது மக்களின் வீடுகள் பெருமளவில் பாதிப்புக்குள்ளாயின. ஆதார் அட்டைகளும் காணாமல் போயின. எனவே பாதுகாப்பான குடியிருப்புகளில் வாழும் வருமானப் பிரிவினருக்கு ஆதார் அட்டை தேவையில்லை. அதே நேரத்தில் பாதுகாப்பாற்ற குடியிருப்புகளில் வாழும் மக்களுக்கு அரசின் நலத் திட்டங்களைப் பெற ஆதார் அட்டை அவசியம் என்பது பல நிர்வாக நடைமுறைச் சிக்கல்களையும் முரண்பாடுகளையும் மாநில அரசுகளுக்கு ஏற்படுத்துகிறது. மாநிலங்களின் உரிமையைப் பறிக்கும் இந்த அட்டையால் ஏற்பட்ட பலன்களைவிட பாதிப்புகளே அதிகம் என்பதை நடைமுறையில் நாம் காண்கிறோம்.

இத்தகைய சிக்கல்களுக்கு இடையே தற்போது ஒன்றிய அரசு தேசிய குடிமக்கள் பதிவேடு என்கிற

திட்டத்தை அசாம் மாநிலத்திற்கு மட்டும் தற்போது நடைமுறைப்படுத்த முயலுகிறது. இந்தத் திட்டத்தால் பெரும் எதிர்ப்பு வடகிழக்கு மாநிலங்களில் எழுந்துள்ளது. குறிப்பாக அசாம் மாநிலத்தில் ஜனநாயக முறையில் இயங்கி வரும் அசாம் கணபரிசத் பாஜகவின் கூட்டணியிலிருந்து விலகி உள்ளது. இந்தச் சட்டத்தால் மண்ணின் மைந்தர்களின் நில உரிமையும் மற்ற உரிமைகளும் பெருமளவில் பாதிப்படையும் என்று அனைவரும் குறிப்பிடுகின்றனர்.

இந்தியாவில் பாகிஸ்தான் பிரிவினைக்குப் பிறகும் வங்க தேசம் உருவான பிறகும் அந்த நாடுகளிலிருந்து பல இலட்சம் பேர் அகதிகளாக மேற்குவங்கத்திற்கும் அசாமிற்கும் குடியேறினர். வந்தேறிய அகதிகளால் அசாம் மாநிலத்தில் பெரும் தொடர் போராட்டம் 1980 இல் வெடித்தது. அசாம் மாநில மக்கள் தொகையைவிட வெளியிலிருந்து வந்து குடியேறிய மக்களின் எண்ணிக்கை அதிகமாகும் என்ற சூழ்நிலையில் இந்தப் போராட்டம் மாணவர்களால் நடத்தப்பட்டது. இந்தப் போராட்டத்தை நடத்திய மாணவர்கள்தான் பின்பு அசாம் கணபரிசத் என்ற கட்சியை அமைத்து அசாம் மாநிலத்தில் ஆட்சியைக் கைப்பற்றினர். இந்திய விடுதலைக்குப்பின் தமிழ்நாட்டில் நடந்த இந்தி எதிர்ப்புப் போராட்டம் போல் மற்றொரு மாணவர் புரட்சி என்று உலக அளவில் உள்ள ஏடுகள் அசாம் மாணவர்களைப் பாராட்டின.

இருப்பினும் உல்பா என்கிற தீவிரவாத அமைப்பு தனிநாடு கோரிக்கையை முன்வைத்து நாகாலாந்து போன்று தனி இராணுவத்தை வைத்துக் கொண்டு இந்திய இராணுவத்தையும் பாதுபாப்புப் பணியில் இருந்த காவல் துறையினரையும் தொடர்ந்து தாக்கி வந்தது. அசாம் பிரச்சினை சுமூகமாக தீர்க்கப்பட்டதால் இவர்களது செல்வாக்குக் குறையத் தொடங்கியது.

தற்போது தேசிய குடிமக்கள் பதிவேற்றச் சட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட திருத்தத்தால் மீண்டும் அசாம் மக்கள் தீவரவாத உல்பா இயக்கத்தை ஆதரிக்கின்ற நிலைமைக்குத் தள்ளப்பட்டுள்ளனர் என்று பல ஊடகச் செய்திகள் தெரிவிக்கின்றன. இந்தச் சட்டத்திருத்தத்தை எதிர்த்து வடகிழக்கு மாநிலங்களில் கடும் எதிர்ப்பினைத் தற்போது பாஜக ஒன்றிய அரசு சந்தித்து வருகிறது. இந்தச் சட்டத்திருத்தத்தில் பாகிஸ்தான் ஆப்கானிஸ்தான் போன்ற நாடுகளில் இருந்து வெளியேறிய இந்து மக்களுக்கு மட்டும்தான் இந்த தேசிய குடிமக்கள் பதிவேட்டில் இடம் பெறுகிறார்கள் என்று அறிவித்தவுடன் பெரும் கொதிப்பு மக்களிடையே ஏற்பட்டுள்ளது. இதற்குக் காரணம் இசுலாமியர்களைத் தவிர்த்து இந்துக்களுக்கு மட்டும் குடியேற்ற உரிமைகள் அளிப்பதனால் இந்து-இசுலாமியர் பிரிவினையை விரிவாக்கி வாக்குவங்கி அரசியல் நடத்தலாம் என்று பாஜகவினர் கனவு கண்டனர்.

ஆனால் வடகிழக்கு மாநிலங்களில் உள்ள பழங்குடியின மக்கள் தங்களின் பொருளாதார நிலை பெரும் பாதிப்புக்கு உள்ளாகும் என்று எதிர்க்கத் தொடங்கி விட்டனர். இந்நிலையில் அசாம் மாநிலத்திற்கு மட்டும் இத்திட்டத்திற்காகச் செலவிடப்பட்ட தொகை 1221 கோடி ஆகும்.

இந்தியாவின் பன்முகத் தன்மையைச் சிதைத்து இந்துக்கள் என்ற ஓர் அடையாளத்தைக் காட்டி அரசியலில் வெற்றி பெறலாம் என நினைக்கும் பாஜக அரசிற்கு இது ஒரு பெருத்த அடியாகும். மேலும் ஆந்திரா தெலங்கானா உட்பட பல மாநிலங்கள் தங்களுக்குச் சிறப்புத் தகுதி வேண்டும் எனத் தற்போது போராடி வருகின்றன.

இதுபோன்ற பல மாநில மக்களின் பிரச்சினைகளுக்கு அந்தந்த மாநிலங்களில் உள்ள பண்பாடு மொழி சமூக அடையாளங்களின் அடிப்படையில் சுமூகத் தீர்வு காண்பதற்கு பதிலாக ஒரே நாடு ஒரே மதம் ஒரே மொழி என்று பாஜக வெற்று முழக்கம் செய்து இந்தியாவைச் சீர்குலைவுப் பாதையில் எடுத்துச் செல்கிறது.

2019 பிப்ரவரி 18இல் சென்னைப் பெருநகரில் அமைந்துள்ள பஷீர் அகமது பெண்கள் கல்லூரியில் அமெரிக்க மனித உரிமைப் போராளி மார்டின் லூதர் கிங் அறக்கட்டளைச் சொற்பொழிவு நடைபெற்றது. இச்சொற்பொழிவை நிகழ்த்தியவர் ஜம்மு காஷ்மீர் மாநிலத்தின் முன்னாள் தலைமைச் செயலாளர் மூசா ரசா காஷ்மீர் மாநிலத்தின் சிறப்புத் தகுதியை உறுதிப்படுத்தும் அரசமைப்புச் சட்ட பிரிவுகளான 370, 35 (ஏ) ஆகியவற்றை மாற்றக்கூடாது என்று வாதிட்டுள்ளார். மூசா ரசா கூறும் காரணங்கள் புதியன. இந்தச் சட்டப் பிரிவுகளை நீக்கிவிட்டால் காஷ்மீர் நிலப்பகுதிகளை அமெரிக்க சவுதி நாட்டின் முதலாளிகளும் இந்தியப் பெரு முதலாளிகளும் விலைக்கு வாங்குவார்கள். 5 நட்சத்திர விடுதிகளையும் அடுக்குமாடிக் குடியிருப்பு களையும் பயணிகள் விடுதிகளையும் சொகுசு வீடு களையும் உல்லாச இருப்பிடங்களையும் தங்கள் இலாப நோக்கிற்காகக் கட்டி இயற்கைச் சூழலையும் சுற்றுச்சூழல் பாதுகாப்பையும் முற்றிலுமாக அழித்துவிடுவார்கள் என்று கூறுகிறார்.

இந்திய ஆட்சிப் பணியில் தேர்வாகி ஜம்மு-காஷ்மீர் மாநிலத் தலைமைச் செயலாளராக பணிபுரிந்து ஓய்வு பெற்றவர் மூசா ரசா. எல்லாக் கட்சியினராலும் சிறந்த நிர்வாகி என்று பாராட்டப்பட்டவர். அவர் கூறியதற்குப் பல காரணங்களும் உள்ளன. காஷ்மீரில் இந்திய இராணுவம் குவிக்கப்பட்டுள்ள சூழ்நிலையில் கடந்த காலங்களில் பல உயர் இராணுவ அதிகாரிகள் நில மோசடிகளில் ஈடுபட்டார்கள் என்று ஒன்றிய அரசே பல வழக்குகளைப் பதிவு செய்துள்ளது என்பதைப்பல செய்திகள் தெரிவிக்கின்றன.

பிப்ரவரித் திங்கள் 2019இல் கட்டுரையாசிரியர் தெலங்கானா மாநிலத்திற்கு மாநில சுயாட்சி பற்றிய ஆங்கில நூலை வெளியிடச் சென்றிருந்தார். இந்நூல் வெளியீட்டு விழாவிற்கு, காங்கிரசு, பாஜக தவிர அனைத்துக் கட்சியினரும் வந்திருந்தனர். ஒரே குரலில் தெலங்கானா மாநிலத்திற்கு சிறப்பு அந்தஸ்து வழங்க வேண்டியது காலத்தின் கட்டாயம் என்று வலியுறுத்தினர். இந்நூலாசிரியர் வல்லால நாகராஜ் 23 வயது நிரம்பியவர். சட்ட இயலில் பட்டம் பெற்று காக்காத்தியா பல்கலைக்கழகத்தில் உயர் ஆய்வினை மேற்கொண்டு வருகின்றார். பெருமளவில் மாணவர்கள் இவ்விழாவில் கலந்து கொண்டனர். விழா முடியும் வரை மிகவும் கட்டுப்பாடாகச் செயல்பட்டனர். ஐதராபாத் மற்றும் முக்கிய மாவட்டங்களில் வடநாட்டு முதலாளிகள் வட்டித் தொழிலில் ஈடுபட்டும் வணிகத்தில் ஈடுபட்டும் ரூபாய் கோடி கோடியாகக் கொட்டுகிற பணத்தில் நிலத்தை வாங்குவதில் அக்கறைக் காட்டுகின்றனர். ஏழை மக்களின் வாழ்வாதாரங்களைச் சிதைக்கின்றனர். இதை உள்ளூர் மக்கள் எதிர்க்கத் தொடங்கியுள்ளார்கள். இந்நிலை தொடர்ந்தால் தெலங்கானா மாநிலத்தில் மராட்டிய மாநிலத்தில் செயல்படும் சிவசேனா போன்று உள்ளூர் மக்கள் ஓர் இயக்கம் தொடங்கி வடநாட்ட வர்களுக்கு எதிராகக் களங்கள் அமைத்துவிடுவார்கள். இது பெரும் ஆபத்தினையும் சமூக அமைதியையும் கெடுத்துவிடும் என்று ஆய்வாளர்களும் மாணவர் களும் குறிப்பிட்டனர்.

வடநாட்டவர்கள் பெரும்பாலானோர் இந்துத்துவா சங்க பரிவார அமைப்புகளுக்கு நிதியை அளித்து மக்களைப் பிளவுப் படுத்திவருகின்றனர் என்றும் குறிப்பிட்டனர். இதே நிலைதான் தமிழ்நாட்டிலும் உள்ளது. ஊக வணிகத்திற்காக வடநாட்டு முதலாளிகள் நிலங்களை வாங்குகிறார்கள் என்று நான் குறிப்பிட் டேன். இவ்விதமான மக்கள் விரோத எதிர்மறைப் போக்குகளைக் கட்டுப்படுத்தி, மூசா ரசா தனது உரையில் குறிப்பிட்டது போன்று சுற்றுச்சூழல் இயற்கை வளங் களைப் பாதுகாக்க ஒவ்வொரு மாநிலத்திற்கும் காஷ்மீர் போன்று சிறப்பு அந்தஸ்தை அளித்தால் மட்டுமே இப்பிரச்சினைக்கு நிரந்தர தீர்வு காண முடியும். மண்ணின் மைந்தர்கள் அந்தந்த மாநிலங்களிலேயே ஏழைகளாக மாற்றப்படுவதைத் தவிர்க்கலாம். இதன் காரணமாக ஏற்றத்தாழ்வுகள் பெருகி பிரச்சினைகள் பெருமளவில் உருவெடுத்து இந்திய ஒற்றுமையைச் சீர்குலைத்துவிடும் வாய்ப்புள்ளது. இதுபோன்ற முதன் மையான பிரச்சினைகளைப் புறந்தள்ளி பாஜக ஒன்றிய அரசு தேசிய குடிமக்கள் பதிவேடு என்ற பெயரில் பாகிஸ்தான், ஆப்கானிஸ்தான் ஆகிய நாடுகளில் இருந்து வெளியேறும் இந்துக்களை மட்டும் குடிமக்க ளாக ஏற்றுக்கொள்வது ஓர் அப்பட்டமான ஒரு அநீதியான செயலாகும்.

1980க்குப் பிறகு ஈழத்தில் சிங்களர்களால் தொடர்ந்து தாக்கப்பட்டு தமிழ் நாட்டில் குடியேறியவர்கள் இன்னும் அகதிகள் முகாமில் தங்க வைக்கப்பட்டுப் பல இன்னல்களைச் சந்தித்து வருகின்றனர். ஒன்றிய அரசின் இரகசியப் புலனாய்வுத் துறை தொடர்ந்து தமிழர்களைக் கண் காணித்துப் பல நடவடிக்கைகளை மேற்கொண்டு அவர்களின் உரிமைகளைப் பறித்து வருவது எவ்வகை யில் நீதியாகும். ஈழத்திலிருந்து வந்த மக்கள் எல் லோரும் இசுலாமியர்களா? கிறித்தவர்களா? தமிழர்கள் இந்துக்கள் இல்லையா? அசாமில் குடிபெயர்வதற்காக இந்துக்கள் என்ற பெயரில் ஒரு சட்டத்திருத்தத்தின் வழியாகத் தீர்வுகாண முற்படுவது அவசர அவசரமாக ரூ.1221 கோடி தாரை வார்ப்பது இந்திய ஒற்றுமைக்கு வழிவகுக்குமா?

ஈழத் தமிழர்களுக்கு இந்த தேசிய குடிமக்கள் பதிவேட்டுத் திட்டத்தின்படி ஏன் குடியுரிமை இன்றுவரை வழங்கப்படவில்லை? தமிழ்நாட்டுத் தமிழர்களும் ஈழத் தமிழர்களும் ஒன்றிய அரசால் தொடர்ந்து புறந்தள்ளப் படுவதுதான் இந்தியத் தேசிய ஒருமைப்பாடா? ●

## பரந்த இடதுசாரி அணி அமைய என்ன செய்ய வேண்டும்? கருத்தரங்கம்



"பரந்த இடதுசாரி அணி அமைய என்ன செய்ய வேண்டும்" என்ற தலைப்பில் பொதுமையர் பரப்புரை மய்யம் ஏற்பாடு செய்த கருத்தரங்கம் 2.2.19 அன்று மாலை 2 மணிக்குச் சென்னை நிருபர்கள் சங்கத்தில் நடைபெற்றது.

தோழர் கருணாநிதி வரவேற்புரையாற்றினார். தோழர் பாஸ்கர் தலைமை தாங்கினார். தோழர்கள் சி. மகேந்திரன், துரை. சிங்கவேல், வே.ஆனைமுத்து, என். குணசேகரன், இரா. ஜவஹர், தியாகு, அரங்க. குணசேகரன், ஏ.எஸ். குமார், சிதம்பரநாதன், குணாளன், பாஸ்கர், கங்காதரன், சாமிநாதன், பொழிலன், தமிழ்நேயன், பிரபாகரன், இளையராஜா, சுஜித், வசந்த், குமணன், பழனி ஆகியோர் கருத்துரை வழங்கினர். தோழர் முகிலன் நன்றியுரை யாற்றினார்.

# முற்பட்டோருள் நலிந்த பிரிவினர்களுக்கு 10% இடஒதுக்கீட்டுச் சட்டம் - ஒரு அரசமைப்புச் சட்ட மோசடி - முற்றிலும் செல்லாததாக்கு

## (ACT TO PROVIDE 10% RESERVATION TO WEAKER SECTIONS OF FORWARD CASTE A FRAUD ON CONSTITUTION-DECLARE IT VOID)

இரா. பச்சமலை

உலகின் எப்பகுதியிலும், எச்சமயத்திலும் இல்லாத தன்மையில் இந்தியாவில் பார்ப்பன இந்துச் சட்டம் தன் சமய மக்களையே சமயத்தின் பேராலேயும், கடவுள் பேராலேயும் வஞ்சகமாய் வகுத்தளித்த வருணாசிரம சாதிப் பிரிவுகளின் அடிப்படையில், மிகப்பெரும் தொகுப்பு மக்கள் இரண்டாயிரம் ஆண்டுகளாக சமூக சம உரிமைகள், கல்வி மறுக்கப்பட்டவர்களாக நாலாஞ் சாதி இழிமக்களாக வைக்கப்பட்டு வந்துள்ளனர் என்பதை இந்த 21ஆம் நூற்றாண்டிலேயும் உணராதவர்களாக, இதுகாறும் அந்த இழிநிலையை உடைத்தெறியாமல் இருப்பது உலக மானுட குலத்திற்கே விடப்பட்ட சவால் என்றுதான் எண்ணத் தோன்றுகின்றது,

இருப்பினும் இந்திய நாடு விடுதலையடைந்த பின் இவ்வொடுக்கு முறைகளிலிருந்து விடுவிக்கப்பட்டு இச்சமூக மக்கள் சற்றேனும் மேம்பாடடைய வழிகாணும் வகையில் அரசமைப்புச் சட்ட அவை (Constituent Assembly), அம்பேத்கரின் உயர் நுண் அறிவுசார் கருத்துக்களின் அடிப்படையில் இந்திய அரசமைப்புச் சட்டத்தில், சமூக நீதிக் கோட்பாட்டை வகுத்தது. ஆனால் அதே நேரத்தில் பொருளாதார அடிப்படையைக் கணக்கில் கொண்டு இடஒதுக்கீடு வழங்குவது பற்றி நெடிதும் விவாதித்து அது அனைவருக்கும் பொதுவான கூறு (Universal) என்றும், மாறும் தன் மையது என்றும் கருதப்பட்டு கைவிடப்பட்டது.

அவற்றுள் முதன்மையானதாக ஒடுக்கப்பட்ட மக்களான மக்கள் தொகுப்பைக் கீழ்காணும் அளவுகோல்களின் அடிப்படையில் பிற்படுத்தப்பட்ட மக்களென ஒரு பெரும் தொகுப்பாக இனம் கண்டு, இவர்கள் ஆட்சி, நிருவாகம், கல்வியில் பங்குபெறும் வகையில் இவர்களுக்கு இடஒதுக்கீடு அளித்து இவர்களை மேம்பாடு அடையச் செய்வது.

1. சமூக ஒடுக்குமுறைக்கு உள்ளாக்கப்பட்டவர்கள்.
2. கல்வி மறுக்கப்பட்டு ஒடுக்குமுறைக்கு உள்ளாக்கப் பட்டவர்கள்.

இவற்றை உள்ளடக்கிய தன்மையில்தான் அரசமைப்புச் சட்ட விதிகள் 15(4) மற்றும் 16(4) வடித்தெடுக்கப்பட்டுள்ளன. 1950இல் நடைமுறைக்கு வந்த அரசமைப்புச் சட்டத்தில் பிற்படுத்தப்பட்டோர் கல்விக்கான இடஒதுக்கீடு இல்லாமையை இட்டு நிரப்பும் வகையில் பெரியாரின் அரும் போராட்டத்தின் விளைவால் அரசமைப்புச் சட்ட முதல் திருத்தம் செய்யப்பட்டு விதி 15(4) சேர்க்கப்பட்டது.

மேற்சொன்ன ஒடுக்கப்பட்ட பிற்படுத்தப்பட்டோர்/ பெருந் தொகுப்பின் கீழ் அப்போது ஏற்கெனவே தொகுக்கப்பட்டிருந்த சாதிகளைக் கொண்ட இரு பட்டியல்கள் இருந்தன. அவை :

1. பட்டியல் வகுப்பினர் (Scheduled Castes)
2. பட்டியல் பழங்குடிகள் (Scheduled Tribes)

இவ்விரு பட்டியல்களுக்கு அப்பால் மேலும் பல வகுப்பு மக்கள் ஒடுக்கப்பட்டவர்களாக இருந்து வந்த போது அவர்களைக் கொண்ட முறையான முழுமையான பட்டியல் இல்லாததைச் சுட்டிக்காட்டி, அவர்களை அடையாளம் கண்டு மேற்சொன்ன பிற்படுத்தப்பட்டோரின் இரு பட்டியல்களுடன், இதர பிற்படுத்தப்பட்டோர் பட்டியல் தயாரிப்பதற்கென இந்திய பிற்படுத்தப்பட்டோர் நல ஆணையம் அமைத்திட அம்பேத்கர் கோரினார். அதில் காலத் தாழ்வு ஏற்பட்டதைக் கடிந்து தன் எதிர்ப்பைத் தெரிவிக்கும் வகையில் அம்பேத்கர் தம் சட்ட அமைச்சர் பதவியைத் தூக்கி எறிந்துவிட்டு ஒன்றிய அமைச்சரவையிலிருந்து வெளியேறினார்.

அதன்பின் காக்கா கலேல்கர் தலைமையில் ஒன்றிய பிற்படுத்தப்பட்டோர் ஆணையம் அமைக்கப்பட்டு, அவ்வாணையம் விடுபட்ட பிற்படுத்தப்பட்ட தன்மைக்கு ஆட்பட்ட இதர பிற்படுத்தப்பட்டோர் பட்டியல் (OBC) என்ற பெயரில் 1955இல் ஒன்றிய அரசிடம் வழங்கியது.

பட்டியல் வகுப்பினர், பழங்குடியினர் இதர பிற்படுத்தப்பட்டோர் ஆகிய இம்மூன்று வகுப்பு மக்கள் சமூக, கல்வி ஒடுக்குமுறைகளிலிருந்து விடுபட்டு மேம்பாடு அடையும் வகையில் அரசமைப்புச் சட்ட அடிப்படை உரிமைகள் பகுதியில் விதிகள் 15(4)லும், 16(4)லும் கல்வியிலும் அரசுப் பணிகளிலும் வேலைகளிலும் இடஒதுக்கீட் டுக்கு வழிவகை செய்யப்பட்டது. பட்டியல் பிரிவினர் வகுப்புகள் ஏற்கெனவே தொகுக்கப்பட்டிருந்ததால் 1943-லிருந்து பட்டியல் வகுப்பு மக்கள் (SC) பெற்று வந்த இடஒதுக்கீடு தொடர்ந்தது; பட்டியல் பழங்குடியினருக்கு (ST) இடஒதுக்கீடு அரசமைப்புச் சட்டம் 1950 சனவரி 26 அன்று நடைமுறைக்கு வந்த பின் வழங்கப் பட்டது.

இந்த இடத்தில் தலைப்புக்குள் நுழையும் முன் மேலும் சில விவரங்களை முன்வைக்க விழைகிறேன். அரசமைப்புச் சட்டம் நடைமுறைக்கு வந்த 1950 சனவரி 26-லிருந்து விதி 16(4)இலிருந்தே அடிப்படை

உரிமையாக அளிக்கப்பட்டிருந்த இதர பிற்படுத்தப்பட் டோருக்கு 40 ஆண்டுகள் நயவஞ்சகமாக அரசு அலகுகள் காலம் தாழ்த்தி, மார்க்சியப் பெரியாரியப் பொதுவு டைமைக் கட்சியின் பொதுச் செயலாளர் தோழர் வே. ஆனைமுத்துவின் நுண்மான் மதிநுட்ப ஆழ் ஆய்வுடன் பெரியாரின் ஒப்பற்ற மானுட பற்றை மனம் கொண்டு மாபெரும் நெடும் போராடடத்தை 1978-இல் தமிழகத்தில் தொடங்கி, ஒன்றிய மாநிலங்களுக்கெல்லாம் குறிப்பாக வடபுலத்திற்கு எடுத்துச் சென்று, ஒன்றியத் தலைநகர் தில்லியில் பல மாநாடுகளை நிகழ்த்தி, ஒன்றிய அரசின் உயர்நிலை குடியரசுத் தலைவர், முதன்மை அமைச்சர், பிற அமைச்சர்கள், ஒன்றிய உயர்நிலைச் செயலாளர்கள் என மண்டல் தலைமையில் பிற்படுத்தப் பட்டோர் ஆணையம் அமைத்திடச் செய்து அவர்களுடன் சட்ட நுணுக்கங்கள், தருக்கங்கள் அடிப்படையில் விவா தித்து, பின் ஓய்வறியா ஒப்பற்ற தொடர் நடவடிக்கை மேற்கொண்டு ஆணையத்தின் பரிந்துரைகள் ஏற்கப்பட வைத்து (நேரு ஆட்சிக் காலம், இந்திரா ஆட்சி காலம், இராசிவ் காந்தி ஆட்சி காலம் எனக் கடந்து) 1990இல் முதன்மை அமைச்சர் விசுவநாத் பிரதாப் சிங் அரசு இதர பிற்படுத்தப்பட்டோருக்கு ஒன்றிய அரசுப் பணிகள், வேலைகள் மட்டிலும் 27 விழுக்காடு இடஒதுக்கீடு அளித்திட வழிகண்டார். இவ்வகையில் பல அமைப்புகள் அரசியல் கட்சிகள் பாங்காற்றின. ஆனால் இது நடை முறைக்கு வருவதற்கு மேலும் நான்காண்டுகள் ஆயின. 1950லிருந்து 44 ஆண்டுகள் கழித்துத்தான் 1994இல் இதர பிற்படுத்தப்பட்டோருக்கு ஒன்றிய அரசுப் பணிகளில் ஒதுக்கீடு நடைமுறைக்கு கொண்டு வர முடிந்தது. அரசமைப்புச் சட்ட அடிப்படை உரிமைகள் பகுதியில் அளிக்கப்பட்டுள்ள உரிமை எவ்வளவு வஞ்சக மாக நாட்டிலுள்ள ஒடுக்கப்பட்டுள்ள மக்களுக்கெதிராக சில விலக்கின்றி அனைத்து தேசியக் கட்சிகளும் பல தளங்களில் செயல்பட்டு எவ்வளவு நெடுங்காலத்திற்கு சற்றொப்ப அரை நூற்றாண்டுக்கு மறுக்கப்பட்டு வந்துள்ளதை மனம் கொள்ள வேண்டும்.

அதன்பின் மேலும் பல போராட்டங்களுக்குப்பின் தான் மேலும் 12 ஆண்டுகள் கழித்து 2006இல் தான் விதி 15(4) வழங்கப்பட்ட உரிமையான ஒன்றிய அரசின் கல்வியிலும் இதர பிற்படுத்தப்பட்டோருக்கு சட்டப்படி இடஒதுக்கீடு அறிவிக்கப்பட்டு அதன் பின்னும் பல ஆண்டுகள் கழித்துத்தான் பகுதி பகுதியாக முதலில் 9 விழுக்காடும், அதன்பின் மூன்றாண்டுகளுக்கும் மேலாகக் காலம் தாழ்த்தி 27 விழுக்காடு அளிக்கப்படுவதாக அறிவிக்கப்பட்டது. உண்மையில் இதன் செயல் வடிவம் இரங்கத்தக்க நிலையில்தான் மிகவும் குறைவான அளவில் நிறைவேற்றப்படுகிறது.

அடிப்படை உரிமையாக அரசமைப்புச் சட்டத்தில் வழங்கப்பட்டுள்ள சமூகநீதிக் கூறான இடஒதுக்கீட்டைப் பலப்பல போராட்டங்களுக்குப் பின் ஒன்றிய வேலையில் 44 ஆண்டுகள், கல்வியில் 57 ஆண்டுகள் காத்திருந்து பெற்றிட முடிந்தது. நடப்புக்கு வந்து இவ்வளவு காலத் தில் ஒடுக்கப்பட்டோரின் பங்கு 20 விழுக்காட்டுக்கும் குறைவுதான், இதற்கிடையில் உச்ச நீதிமன்ற கூடங் களில் பல உயர்நீதிமன்றங்களில் (பொது வெளியில் அல்ல) நீதியரசர்கள், நாட்டின் பெருங்கேடுகளில் கையூட்டை ஒப்ப இடஒதுக்கீட்டுக் கொள்கை என்றும், ஏன் இது தொடரப்பட வேண்டும், இது எவ்வளவு காலங்களுக்கு நீட்டிக்கப்பட வேண்டும், ஆனால் இட ஒதுக்கீடு எந்த அளவிலும் என்றும், இவர்களுக்குப் போதுமான பங்கீடு இல்லை என்ற நிலை உள்ளது என அரசு உணரும் வரையிலும் இடஒதுக்கீடு தொடர லாம் எனச் சொல்வதைக் கண்ணுரலாம் எனினும் எவ்வளவு கரிசனத்தோடும் கவலையோடும் மனம் வெதும்பி நாட்டின் நலன் கருதுபவர்களாகக் குரல் எழுப்புகிறார்கள் என்பது எவ்வளவு கயமைத்தனம். இவர்கள், இந்நாட்டின் 80-85 விழுக்காட்டு, அரசியல், அரசு, நீதித்துறை, உயர் பணிகள், உயர்கல்வி இடங் களில் 10 விழுக்காடு மக்கள் தொகை அளவுள்ளோரே நாடு விடுதலை அடைந்து சென்ற 70 ஆண்டுகளுக்கு மேலாக கோலோச்சுபவர்களாக இருந்து வரும் நிலை யில் உலக நாடுகளில் நாட்டின் மனித மேம்பாட்டு குறியீடு 137-இல் வறுமை, பட்டினியில் உழல்வோர் விழுக்காட்டில் முதலிடம், உலகிலுள்ள உயர் கல்வி நிறுவனங்கள் 200இல் இந்தியாவில் ஒன்றுமில்லை, மக்களின் ஊட்டச்சத்து நிலை சோமாலியாவுக்குப் பின் எனப் பல மேம்பாட்டுக் குறியீடுகளில் கடைநிலையில் தான் இந்தியா உள்ளது என்பதை கவனத்தில் கொள் கின்றனரா? ஆனால் 60-70 ஆண்டுகளுக்கு மேல் சமூக நீதி இடஒதுக்கீடு நடைமுறையில் இருக்கும் தமிழ் நாடு, கேரளம், மகாராட்டிரம் மாநிலங்களின் மனித மேம்பாடு குறியீடு அளவு குறிப்பாக சில துறைகளில் அய்ரோப்பிய நாடுகளுக்கும் ஒப்பாக இணையாக மேம்பாடு அடைந்த நிலையில் உள்ளன என்பதையும் இவர்கள் கருத்தில் ஏற்றிப் பார்க்க வேண்டும்.

இப்பொழுது மோடி அரசு நடைமுறைப்படுத்தியுள்ள 10 விழுக்காட்டுச் சட்டத்தைப் பார்ப்போம். பா.ச.க. போன்றே காங்கிரசும் இதை 2014 தேர்தல் வாக்குறுதியாகத் தந்துள்ளது. ஏன் பொதுவுடைமைக் கட்சிகளும் இதற்கு இசைவாகவே உள்ளனர். இவர்கள் பா.ச.க. 2014இல் ஆட்சிக்கு வந்து 4¾ ஆண்டுகள் கழித்து வெறும் மூன்று நாள்களுக்கும் குறைவாக 50 மணிநேரக் கால இடைவெளியில் அரசமைப்புச் சட்ட அடிப்படை உரிமைப் பகுதிக்குத் திருத்தம் தரும் வரைவுச் சட்டத்தைக் கொண்டு வந்து இரு நாடாளுமன்ற அவைகளிலும் நிறைவேற்றி உடனே குடியரசுத் தலைவரின் ஒப்புத லையும் பெற்றுச் சட்டமாக இயற்றி, அவற்றை நடை முறைப்படுத்தும்படி ஒன்றிய அரசு, குசராத், இராசுத்தான் போன்ற மாநில அரசுகளும் பல்வேறு துறைகளை அறிவுறுத்தி நிருவாக ஆணைகளையும் வெளியிட்டு விட்டனர். இது என்ன 'ஜெட்' வேகமா? ராக்கெட் வேகமா? ஏன் இவ்வளவு பாய்ச்சல்?

இப்பொழுது புரிகிறதா, பா.ச.க.வின் இந்துக்கள் மீதான கவலை, அக்கறை, அதாவது இவர்கள் இந்துக்கள் என மனமாரக் கருதுவது முற்றபட்ட சாதிகளைத்தான்.

குறிப்பாகப் பார்ப்பனர்களைத்தான். இதில் மிகை, நகை, முரண், இவர்களுள் நலிந்த பிரிவினர்கள் மேல் என்ற பெயரில் அவர்களும் பசைப்பிடிப்பான வளமானோர் தான். இந்த இந்துத்துவா காவிக் கூட்டம் போன்றே காங்கிரசுக் கயவர்கள், ஏன் பொதுவுடைமைக் கட்சிகள் கூட இந்த நலிந்த முற்பட்டவர்களை எப்படி அடையாளம் காண்கிறார்கள் என்பதுதான். அதாவது முற்பட்ட வகுப்பி னருள் ஒருவரின் குடும்ப ஆண்டு வருமானம் அதிக அளவாக ரூ.7,99,999/- அதாவது திங்களுக்கு ரூ.66,666/- வருமானமாக இருப்பின், அவர்தான் நலிந்த பிரிவைச் சேர்ந்தவர் எனக் கருதப்படுவார். ஒருவரின் வருமானம் நாளும், கிழமையும் மாறிக் கொண்டே இருக்கக்கூடியது. எனவே ஆண்டு வருமான அளவுகோல் முற்றிலும் பொருளற்றது. நடைமுறையில் வருமானத்தைக் கணக்கிட முடியாது. மேலும் குடும்ப வருமானம் என்பதால் அக்குடும்பத்தில் சராசரியாக மூவர் (அ) நால்வர் இருக்கலாமென எடுத்துக் கொண் டால், அக்குடும்பத்திலுள்ள ஒவ்வொருவரும் சராசரியாக ஆண்டுக்கு அதிக அளவாக ரூ.2,66,666 (அ) ரூ.1,99,999 வருமானம் உள்ளவராவர். இவர்கள் தான் இந்த 40 விழுக்காடு சட்டப்படி ஒதுக்கீடு பெறத் தகுதியானவர்கள், நலிந்தவர் என வளமானோர் எளிதில் சான்றிதழ் எப்படியும் பெறலாம். இதிலும் ஏழை, எளியோர் வஞ்சிக்கப்படுவர். ஆனால் மண்டல்குழு பரிந்துரையின் அடிப்படையில் சமூக அளவில் கல்வியில் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் என இதர பிற்படுத்தப்பட்டவர் களுக்கும் வி.பி. சிங் ஒன்றிய அரசு 40 ஆண்டுகளாக நடப்பில் இருந்த அரசமைப்புச் சட்ட விதி 16(4) படி ஒன்றிய அரசுப் பணிகளில் மட்டும் இடஒதுக்கீடு வழங்கி ஆணை யிட்ட போது அதனை எதிர்த்து, வடபுலத்தில் சில வன் முறையைக் கட்டவிழ்த்துவிட்டு அதை நாடே கொதித் தெழுந்ததுபோல், இந்தக் காவிக் கூட்டம், காவிகளின் கைக்கூலிகளான ஊடகங்களும் ஊதிப் பெரிதாக்கிக் காட்டி, அந்த இடஒதுக்கீட்டு ஆணையை நடைமுறைக்கு வரவிடாமல் தடுத்துவிட்டது. இவர்கள் இடஒதுக்கீடு பெறத் தக்க இந்துக்கள் இல்லையா? இல்லை. இந்தக் கயவர்களுக்கு இந்துச் சமயத்திலுள்ள நாலாஞ்சாதிகள் இந்துக்கள் அல்ல என்பது மட்டுமல்ல, முற்பட்ட பார்ப்பன பனியாக் கூட்டம்தான் இந்துக்கள், இவர்கள் இலக்கணப்படி அதிலும் முற்பட்டவருள் நலிந்தவர்கள் என அடையாளம் காண இந்தக் காவிக் கூட்டம் விதித் துள்ள ஆண்டு வருமான உயர் அளவு ரூ.7,99,999 என விதித்து பசையான வசதி படைத்தவர்கள் மட்டுமே இடஒதுக்கீடு பயன்பெறத் தக்கவர்கள் என்றாக்கி, அந்தத் தொகுப்பிலுள்ள உண்மையான ஏழை, எளியோர் பகடைக் காயாக்கப்பட்டு மனமறிந்து கொடுமையாக வஞ்சிக்கப்பட்டு விட்டனர்.

இனி இக்கட்டுரையின் தலைப்புப்படி 10% இடஒதுக்கீட்டுச் சட்டம் எப்படி அரசமைப்புச் சட்டத்தின்மீது நிகழ்த்தப் பட்ட மோசடி என்பதைப் பார்ப்போம், இச்சட்டம், அரச மைப்புச் சட்ட விதி 46-ஐ அடிப்படையாகக் கொண்டு இயற்றப்பட்ட சட்டம் என சட்டமுன்வரைவின் சட்டத்தின் நோக்கமும் காரணங்களும் என்ற தலைப்பின்கீழ் விளக்கப்பட்டுள்ளது.

இவ்விதி 46 அரசமைப்புச் சட்ட வழிகாட்டு நெறிகள் பகுதியின்கீழ் வருகின்றது. இதன் கீழ்வரும் விதிகள் கட்டளை விதிகள் என்று கொள்ளத்தக்கதல்ல, ஆனால் செயல்படுத்துவதற்கானவை அல்ல என எதிர்மறை யாகக் கொள்ளக்கூடாது. இருப்பினும் இச்சட்டத்தை தங்கள் நோக்கத்தில் இயற்றுவதற்கு ஏற்ப இதைக் கட்டளை விதியாக (Mandatory Article) பொருள் விளக்கம் வலிந்து கொடுக்கப்பட்டுள்ளது உள்நோக்கம் கொண்டதாகும்.

இந்த விதியில் நலிந்த பிரிவுகளில் உள்ள மக்கள் குறிப்பாகப் பட்டியல் வகுப்பு, பழங்குடிகள் சமூக அநீதி களிலிருந்தும் எல்லா வகையான சுரண்டலிலிருந்தும் காப்பாற்றப்படும் வகையில் அரசு சிறப்புக் கவனத் துடன் இவர்களின் கல்வி, பொருளாதாரத்தில் அக்கறை எடுத்துக் கொள்ளும். இங்கு ''நலிந்த பிரிவுகளாக உள்ள மக்கள்'' என்ற சொற்றொடர் நாட்டின் குடிமக்கள் அனைவரையும் உள்ளடக்கி இவர்கள் தவிர்த்த பிறரை யும் குறிக்கும் பொதுச் சொல்லாகத்தான் கையாளப் பட்டுள்ளது. இங்கு ''சமூக அநீதியிலிருந்து காப்பாற்றப் படும்'' என்ற சொற்றொடர் இந்துக்களுள் பட்டியல் வகுப் பினர், பழங்குடிகள், பிற்படுத்தப்பட்டோரை மட்டுமே சுட்டும். இந்து முற்பட்டோர், பிற கிறித்துவ, இசுலாமிய சமயங்களைக் குறிக்காது. **மேலும் பொருளா தாரத்தில் நலிவுற்றோர் என்று குறிப்பிடுவதும் அனைத்து மக்களையும் குறிப்பதாகும். இதில் முற்பட்ட வகுப்பினரை மட்டும் வலிந்து பிரித் தெடுத்து அவர்களுக்கு மட்டும் பொருளாதார அடிப்படையில் இடஒதுக்கீடு பெறத்தக்கவர்கள் என விளக்கம் அளித்து அரசமைப்புச் சட்டத் தைத் திருத்தியுள்ளது என்பது அரசமைப்புச் சட்டத்தின் மேல் நிகழ்த்தப்பட்ட அரசமைப்புச் சட்ட மோசடி என்றுதான் கொள்ள முடியும். எனவே இச்சட்டம் முற்றிலும் செல்லத்தக்கதல்ல (The Act is Void).**

வி.பி. சிங்கின் ஒன்றிய அரசு இதர பிற்படுத்தப் பட்டோருக்கு மண்டல் குழுவின் பரிந்துரையை ஏற்று விதி 16(4)இன்படி, ஒன்றிய அரசுப் பணிகள், வேலை களில் மட்டும் 27 விழுக்காடு இடஒதுக்கீடு அளித்து ஆணையிட்டது. இதனை எதிர்த்து உச்சநீதிமன்றத்தில் வழக்குத் தொடரப்பட்டது. இந்த வழக்கை விரிவாக ஆய்வு செய்த உச்சநீதிமன்றம் 27 விழுக்காடு ஒதுக்கீட்டை ஏற்றுக் கொண்டது. ஆனால், எவ்வித ஒதுக்கீட்டுக்கும் உச்சவரம்பு 50 விழுக்காடுதான் என்ற பொது விதியை விதித்தது. இந்தத் தீர்ப்பின் அடிப்படையில் பல மாநிலங் கள் இடஒதுக்கீட்டு வரம்பு 50 விழுக்காட்டிற்கு அதிகமாக எக்காரணங்களைக் கொண்டு இடஒதுக்கீடு அளிக்க முன்வந்த போதெல்லாம் அந்தந்த உயர்நீதிமன்றங்கள் அது தொடர்பான ஆணைகளைத் தள்ளுபடி செய்தன. அதையும் எதிர்த்து உச்சநீதிமன்றத்தில் தொடுக்கப்பட்ட வழக்குகளிலெல்லாம் 50 விழுக்காடு இடஒதுக்கீட்டு

உச்சவரம்பை வலியுறுத்தி உச்சநீதிமன்றம் தள்ளுபடி செய்தது. இந்த வகையில் 50 விழுக்காடு இடஒதுக்கீட்டு உச்சவரம்பை விதித்த உச்சநீதிமன்றத் தீர்ப்பு அரச மைப்புச் சட்டப்படி நீதிபதி தந்த சட்டம் (Judge made law) என்றுதான் பின்பற்றப்படுகிறது.

இதற்கு மார்க்சியப் பெரியாரியப் பொதுவுடைமைக் கட்சி முற்றிலும் உடன்படாத நிலைப்பாட்டைக் கொண் டுள்ளது. இருப்பினும் இத்தீர்ப்பு நடப்பின் செயல்பாட்டில் உள்ளது என்பதினால் அதன்படி இந்தப் பத்து விழுக் காட்டு சட்டம் பார்த்த மாத்திரத்தில் (Persee) எவ்வித ஆய்வுக்கும் தகுதியற்றது எனக் கருதி செல்லத்தக்க தல்ல என்ற முடிவுக்கு வரமுடியும். எனவே 10 விழுக் காடு சட்டத்திற்கெதிரான வழக்குப் பதிவு செய்தவுடன் இச்சட்டம் செல்லாது என்று உச்சநீதிமன்றம் தீர்ப்பு அளித்திருக்க வேண்டும். எனினும் இது நாடாளுமன்றத் தால் நிறைவேற்றப்பட்ட சட்டம் என்ற அடிப்படையில் 10 விழுக்காடு சட்டத்திற்கு இடைக்காலத் தடைவிதித் திருக்க வேண்டும். பின்புதான் அதை ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட்டிருக்க வேண்டும். இப்பொழுதாவது இந்த கருத்து மற்றும் முன் பத்தியில் தந்த விளக்கத்தின் அடிப் படையில் இச்சட்டம் செல்லத்தக்கதல்ல என நிறுவப் பட்ட நிலையை உச்சநீதிமன்றம் அறிந்திருக்கும் என்ப தால், இச்சட்டத்தை நிறைவேற்றுவதற்காக ஒன்றிய அரசும், குசராத், இராசுத்தான் போன்ற மாநிலங்கள் வெளியிட்ட நிருவாக ஆணைகளை உடனடியாக நிறுத்தி வைத்தும், நாடு முழுக்க பொருந்தும் வகையில் பொது இடைக்காலத் தடைவிதித்து இடைக்காலத் தீர்ப்பு வழங்கிட உச்சநீதிமன்றம் உடன் முன்வரவேண்டும்.

இந்த 10 விழுக்காடு சட்டத்தைப் பொறுத்த வரை மிக முக்கியமான நுணுக்கமான அரசமைப்புச் சட்டம் சார்ந்த விரிவான விளக்கத்தை (interpretation) ஆய்வுக்கு எடுத்துக் கொள்வோம். இதில் விதிகள் 15(1), 16(2), 15(4), 16(4) மற்றும் 46 ஆகியவை ஒன்றுடன் ஒன்று மிக நெருங்கிய தொடர்புடையவை. அருள்கூர்ந்து இவற்றை நுணுகி படிக்கவும்.

15(1), 16(2) விதிகளின்படி எந்தக் குடிமகனையும் சமயம், இனம், சாதி, பாலினம், பிறப்பிடம் அல்லது இவற்றுள் ஏதாவது ஒன்றின் அடிப்படையில் வேறுபடுத்தி (discriminate) நடத்தக் கூடாது என்றுள்ளது. இருப்பினும் மேற்சொன்ன விதிகளிலும் இன்னும் பல விதிகளிலும் கருத்தில் கொள்ளாமல் 15(4), 16(4) விதிகளில் முறையே ஒன்றிய அரசுக் கல்வியிலும், பணிகளிலும், சமூகக் கல்வியில் பிற்படுத்தப்பட்டவர்களுக்கு இடஒதுக்கீடு அளிக்கப்படலாம். மேலே வரையறுத்துச் சொல்லப்பட் டுள்ள ஐந்து பொருள்களில், வேறுபாடுகள் (discrimination) காட்டப்படுவதற்கு வாய்ப்புள்ளன. ஆனால் இவ் வைந்து தளங்களிலும் பொருளாதார நலிவு என வேறுபாடுகள் இயல்பாகவே இருக்கும்.

இதிலிருந்து இது ஒரு பொதுவான இயலாமைக் கூறு என்பது (universally) தெளிவு. ஆனால் இவ்வைந்தும் இயற்கையாகவே நிகழ்ந்திடக் கூடியவை. எனவே இயற்கையாக நிகழக்கூடியதை வேறுபடுத்திக் காட்டி, ஒருவரை புறம்தள்ளக்கூடாது (exclusive) என்பது இயற்கை நியதி. ஆனால் பொருளாதார நலிவு என்பது இயற்கையாகவே நிகழ்ந்துவிடுவதில்லை. அதைத்தாண்டி பல்வேறு காரணிகளால் செயற்கையால் ஒருவர் பொருளாதார நலிவுக்குள்ளாகிறார்.

இந்தப் பின்னணியில்தான் பொருளாதார நலிவு என்ற கூறு வேறுபாட்டைத் தூண்டக்கூடிய ஒன்றாகக் கருதமுடியாது என்ற தன்மையில் மேற்சொன்ன அய்ந்து கூறுகளுடன் ஒருவரின் அல்லது அவரின் குடும்பத்தின் பொருளாதார நலிவையும் சேர்த்துக் கொள்ளப்படவில்லை.

அரசமைப்புச் சட்ட வழிகாட்டுநெறி பகுதியில் வரும் விதி 46-இல் சொல்லப்பட்டுள்ள 'நலிந்தவர்' என்ற சொல் 15(1), 16(2) விதிகளில் சொல்லப்படாத நிலை யில், இதை வலிய இணைத்துப் பிணைத்து அரச மைப்புச் சட்டத்தை மோசடி செய்துள்ளனர் என்பது தெள்ளத் தெளிவாகின்றது. எனவே இந்த அரசமைப் புச் சட்ட மோசடிக்குச் சவுக்கடி கொடுக்கும் வகையில் இச்சட்டத்தைச் செல்லாததாக (void) ஆக்க வேண்டும்.

ஒன்றிய அரசு எதிர் இந்திரா சகானி வழக்கில் மண்டல் குழுவின் பரிந்துரை அடிப்படையில் இதர பிற்படுத்தப்பட்டோருக்கு 27 விழுக்காடு இடஒதுக்கீடு அளித்து வெளியிடப்பட்ட ஒன்றிய அரசின் ஆணையை சட்டப்படி செல்லும் என்று 9 நீதிபதிகள் அடங்கிய உச்சநீதிமன்ற அமர்வு 16.11.1992இல் தீர்ப்பளித்தது. ஆனால் இதர பிற்படுத்தப்பட்டோருள் வளமான பிரிவினர் - பல்வேறு அடிப்படையில் ஆறு வகைப்பட்டவர்களைப் பட்டியலிட்டு-ஒதுக்கீட்டு வரையறைக்குள்ளிருந்து நீக்கி அவர்களுக்கு இடஒதுக்கீடு வழங்கப்படக் கூடாது என்றும் அத்தீர்ப்பில் ஆணையிடப்பட்டுள்ளபடி இந்த முடிவுக்கு வருவதற்கு உச்சநீதிமன்றம் விரிவான விளக்கம் தந்தது. இதனை இப்போது உச்சநீதிமன்றம் கட்டாயம் கணக்கில் எடுத்துக்கொண்டால், இந்த 10 விழுக்காடு சட்டத்தின் அநியாயத் தன்மையை உணர முடியும். உச்சநீதிமன்றத் தீர்ப்பில் அந்த விளக்கத் தைப் பார்க்கலாம். அதில் பட்டியலிடப்பட்டு அந்த ஆறு வகையினரும் ஒப்பீட்டளவில் பொருளாதார அளவில் உயர்நிலை அடைந்துவிட்டிருந்தால் அவர்களை இந்த நிலையை அடைவதற்கு முன்னால் சமூக நிலையிலும், கல்வி நிலையிலும் ஒடுக்கப்பட்ட இதர பிற்படுத்தப் பட்டவர்களாக இருந்தார்கள்; என்றாலும் இப்போது மேற்சொன்ன இரு நிலைகளிலும் இந்த வகுப்பினருள் முன்னேறிய பிரிவினராகி விடுகின்றனர். எனவே அரசமைப்புச் சட்ட விதிகள் 15(4), 16(4)இல் சொல் லப்பட்ட சமூக, கல்வி நிலையில் பிற்படுத்தப்பட்டோ ராகக் கருதப்பட முடியாது.

**எனவே அந்த விதிகளில் இவர்கள் இடஒதுக் கீடு பெற உரியவர் அல்ல என அறுதியிட்டுக் கூறிவிட்டது உச்சநீதிமன்றம். உச்சநீதிமன்றத்தில் அந்த விளக்கப்படி பார்த்தால் 10 விழுக்காடு சட்டத்திற்குட்படும் முற்பட்ட வகுப்பினர் சமூக**

**வரலாற்றில் எந்தக் காலக்கட்டத்திலும் சமூக நிலையிலும், கல்வியிலும் ஒடுக்கப்பட்டோர்களாக இருந்ததில்லை என்பதுடன் இவ்விரு தளங்களிலும் மேம்பட்டவர்களாகத்தான் எப்போதும் இருந்து வந்துள்ளனர்.**

மேலும் இரண்டாயிரம் ஆண்டுகளாக இந்துச் சமயத்தின் சனாதன தர்மத்தின் பேரால், அச்சமயம் சார்ந்த கணிசமான மக்கள் தொகுப்பு சமூகத்திலும் கல்வியிலும் கொடும் ஒடுக்குமுறைக்கு உள்ளாக்கப் பட்டு-தாழ்த்தப்பட்டவர்களாக ஆக்கப்பட்ட பட்டியல் வகுப்பினர் இசுலாம், கிறித்துவ சமயங்களுக்கு மாறி யதும் அவர்கள சமூக, கல்வி ஒடுக்குமுறைகளிலிருந்து விடுவிக்கப்பட்டவர்களாகக் கொண்டு இடஒதுக்கீடு மறுக்கப்பட்டு பொதுப் போட்டித் தொகுப்புக்குள் தள்ளப் படுகின்றனர். நாட்டின் நலிந்த பிரிவினர் என்ற தொகுப் புக்குள் இந்த வகுப்பு மக்கள் தான் பெரும் பகுதியின ராக இருப்பர். ஆனால் முற்பட்ட வகுப்பினர் மிக மிகச் சொற்ப அளவில் இருப்பர். இந்தக் கூட்டம் எந்த சமூக, கல்வி ஒடுக்குமுறைக்கு வரலாற்று நெடுகிலும் உள்ளாகி டாமல், மாறாக ஒடுக்கும் வகுப்பாகவே இருந்து கொண்டு நயவஞ்சகமாக நலிந்தோர் என்ற பெயரில் அவர்கள் 10 விழுக்காட்டு இடஒதுக்கீட்டுக்கு தகுதியுடை யவர்களாக மாற்றிவிடுகிறது. எனவே 10 விழுக்காடு சட்டம் மோசடி. ஆனால் சமூகத்தில் பொருளாதாரம் உள்ளிட்ட பல நிலைகளில் ஆக நலிந்தோராக இருந்த சமூகம், கல்வியில் ஒடுக்கப்பட்டவர்களான பட்டியல் வகுப்பினர் பொதுப் போட்டிக்குள் தள்ளப்படுவது அநீதியின் உச்சம்; வஞ்சகமானது. இதிலிருந்து பா.ச.க. உள்ளிட்ட பல்வேறு இந்துத்துவக் காவி கும்பல் பார்ப்பனிய வெறிபிடித்த மனநிலைக்கு வந்துவிட்டனர் எனத் தோன்றுகின்றது. அந்த வக்கிரத்தின் வெளிப்பாடுதான் அரசமைப்புச் சட்ட மோசடியான 10 விழுக்காட்டு இடஒதுக் கீட்டுச் சட்டம். எனவே இது தள்ளுபடி செய்யப்பட வேண்டும்.

இனி இச்சட்டம் பிறப்பிலே பிழையானது (in herently error sticken) எப்படி எனப் பார்ப்போம்.

முற்பட்ட வகுப்பின் நலிந்த பிரிவுகளில் உள்ள மக்களை அடையாளம் காண வகுக்கப்பட்ட வரையரை யான ஆண்டு வருமான வரம்பு ரூ.7,99,999. இந்தத் தொகை எவ்வாறு, எதன் அடிப்படையில் வரையறுக் கப்பட்டது? இந்த வருமான வரம்புக்குள் உள்ளோர் முற்பட்ட வகுப்பு மக்களுள் எத்தனை விழுக்காட்டினர்? உண்மையில் இந்த வருமான வரம்புக்குள் வரும் மக்கள் தொகுப்பிலிருந்து எவ்வளவு பேர் அரசுக் கல்வி, பணிகளில் இடம்பெற்றுள்ளனர்? இந்த நலிந்த மக்கள் அரசு கல்வியில், பணிகளில் உள்ளோருள் எத்தனை விழுக்காடு உள்ளனர்? இதற்கெல்லாம் எவ் வகையான ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு ஆய்வு முடிவுகள் எட்டப்பட்டதா? அப்படி எந்த அடிப்படையின்றித் தான், பொத்தாம் பொதுவாக 10 விழுக்காடு இடஒதுக்கீடு அளிக்கப்பட்டதா? நாட்டின் பல மாநிலங்களில் இதர பிற்படுத்தப்பட்டோர் பட்டியலில் புதியதாகச் சாதிகள் சேர்க்கப்பட்ட பல நிகழ்வுகளில் உயர்நீதிமன்றங்கள், உச்சநீதிமன்றம், எவ்வித ஆய்வின் அடிப்படையிலும் இல்லாமல் பட்டியலில் இணைந்து வெளியிடப்பட்ட ஆணைகள் பார்த்தமாத்திரத்தில் தள்ளுபடி செய்யப்பட்டன. அத்தன்மையில் இந்த 10 விழுக்காடு ஒதுக்கீட்டுச் சட்டம் தள்ளுபடி செய்யப்படத்தக்க சட்டம்தான். இவற்றை மோடி அரசு அறியாமலிருக்க வாயப்பில்லை. ஆனால், உச்சநீதிமன்றம் இதுபோன்ற நிகழ்வுகளை கருத்தில் கொண்டு முடிவுக்கு வரும் என நம்பலாம்.

ஆசை அறிவை இழக்கச் செய்துவிடும் என்பர். அதற்கேற்ப இந்தச் சட்டத்தை இயற்றுவதில் மோடி அரசு காட்டியுள்ள ஆர்வம் இவ்வுலகமே கண்டிராதது என்பதை இதில் இவர்கள் காட்டிய எல்லையில்லா வேகத்திலிருந்து அறியலாம். இந்த முற்பட்ட வகுப்பு நலிவுற்றவர்களுக்கு அரசுப் பணிகள் கல்வியில் இடஒதுக் கீடு அளிக்க வகை செய்ததுடன், தனியார் நிறுவனங் களிலும் இவர்களுக்கு 10 விழுக்காடு இடஒதுக்கீடு வழங்கிடவும் இச்சட்டம் வகை செய்துவிட்டது.

புதிய பொருளாதாரக் கொள்கை 1991-லிருந்து ஒன்றிய அரசு கடைபிடிக்கப்பட்டதின் விளைவால் சனநாயக அரசின் மக்கள் நலக் கோட்பாட்டின்படி கல்வி, மருத்துவம் கொடுக்கப்பட வேண்டுமென்றிருக்க ஒன்றிய அரசு மக்கள் தொகை வளர்ச்சி ஏற்றவாறு அரசுப் பணி, கல்வி வாய்ப்புகளைப் புதிதாக உருவாக்காமல் இப்பொறுப்புகளிலிருந்து அரசு விடுவித்துக் கொள்ளும் வகையில் நடந்து வருவதால் இந்த வாய்ப்புகள் பெரிதும் அருகிக் கொண்டே வருகின்றன. இதற்கு குறிப்பாக, சென்ற அய்ந்தாண்டு மோடி ஆட்சியே சான்று.

அரசின் இந்த பொறுப்பற்ற போக்கால் தனியார் வணிகம், தகவல் தொழில்நுட்பம் போன்ற பல்வேறு துறைகளில் பெருமளவில் விரிந்து செயல்படுவது போல் கல்வி, மருத்துவத் துறைகளிலும் கால்பரப்பிவிட்டனர். தனியார் துறையில் முற்பட்டவர்கள் கோலோச்சுவது வெளிப்படையாகத் தெரிகின்றது.

எனவே அரசு மற்றும் தனியார் பணிகளில் ஒடுக்கப் பட்ட மக்களின் வாய்ப்புகள் தேய்ந்து கொண்டே வருவதைக் கருத்திற் கொண்டு, 25-30 ஆண்டுகள் பல்வேறு போராட்டங்கள் நிகழ்த்தி, தனியார் துறைகளில் ஒடுக்கப்பட்ட மக்களுக்கு இடஒதுக்கீடு அளித்திட வேண்டு மென்று கோரிக்கைகள் அளிக்கப்பட்டு நிலுவையில் தான் உள்ளன. இதையெல்லாம் தம் அய்ந்தாண்டு ஆட்சிக் காலத்தில் கிஞ்சிற்று கருத்தில் கொள்ளாத பா.ச.க. காவிக்கும்பல் அரசு, அதன் ஆட்சிக்காலம் முடிவுறும் நிலையில் திடும் என அரசமைப்புச் சட்ட மோசடி செய்து, முற்பட்ட வகுப்பு நலிந்தவர் என்ற பெயரில் இவர்களுக்கு அரசுக் கல்வி, பணிகளில் 10 விழுக்காடு இடஒதுக்கீடு வழங்கியது மட்டுமின்றி, தனி யார் கல்வியிலும் 10 விழுக்காடு இடஒதுக்கீடு அளித்து அரசமைப்புச் சட்டத்தைத் திருத்தம் செய்து சட்டம் இயற்றியுள்ளது. தன் காவிப் பாசத்தை ஒட்டுண்ணி இந்துக்

கூட்டத்தின் மீது கொட்டித் தீர்த்து (Blood is thicker than water) என்ற பழமொழியைப் மெய்ப்பித்துவிட்டது.

பார்ப்பன, பனியாக் கூட்டம் தன் நலத்திற்காக எந்தக் கொடுஞ்செயலையும் கொஞ்சமும் கூச்சநாச்ச மின்றி, எந்தச் சலனமுமின்றி அதை வறட்டுத்தனமாக நியாயப்படுத்தியும் செய்திட முன்வருவார்கள் எனப் பெரியார் அறுதியிட்டுச் சொன்னதை, 10 விழுக்காடு ஒதுக்கீட்டுச் சட்டத்தைக் கொண்டு வந்து எண்பித்து விட்டனர். **இத்தன்மையிலே மா.பெ.பொ.க. பொதுச் செயலாளர் சென்ற 20-25 ஆண்டுகளுக்குமுன் மண்டல் குழு அமைத்திட, அதன் பரிந்துரைகளை நிறைவேற்றிட அடுத்தடுத்து நெடும் போராட்டங் களின் ஊடே இந்தப் பார்ப்பன பனியாக் கூட்டம் நாடாளுமன்றத்தை மடை மாற்றி வஞ்சகச் செயல் புரிந்து பொருளாதாரத்தை அடிப்படையாகக் கொண்டு, தங்கள் கும்பலுக்கு இடஒதுக்கீடு செய்து கொள்ளவும் முற்படுவார்கள் என்று கட்சியின் ஏடான சிந்தனையாளன் ஏட்டில் அப்போதே பதிவு செய்தார். அது இப்போது மெய்யாகிவிட்டது.**

உலகளவில் அமெரிக்கா, அய்ரோப்பிய நாடுகள், ஆசுத்துரேலியா போன்ற நாடுகளின் இனவெறிக் கொடுமைகளுக்கு உள்ளாக்கப்பட்டு கல்வி மறுக்கப்பட்டு துயருற்ற ஒடுக்கப்பட்ட மக்களுக்கு அரசு அதிகாரங் களிலும் கல்வியிலும் பங்கு அளித்திடல் வேண்டும் என்று மக்கள் நாயகக் கோட்பாட்டின்படி இடஒதுக்கீடு வழங்கப்பட்டு வருகின்றது. இது ஒன்றும் புதுமையல்ல. இதில் கொடுமை என்னவெனில் நம் நாட்டு மக்களி டையே இந்து சமய, பார்ப்பன சனாதன கோட்பாட்டைப் பின்பற்றி ஒரு சிறு கூட்டம், பெரும் தொகுப்பு நம் இந்து சமய மக்களையே அதன் பேராலேயே இழி மக்கள், நாலாஞ் சாதியினர், உடைமைக்கும் கல்வி பெறுவதற்கும், ஏன் பிழைக்கவே தகுதியற்றவர்கள் என பசு மாடுகளைக் காத்திட இம்மக்கள் பலியும் ஆகலாம் என்று அவர்களையே எண்ண வைத்து அவர்கள் 2000 ஆண்டுகளாக அடக்கி, ஒடுக்கி வைக்கப்பட்டனர். நாடு விடுதலை அடைந்து, காலமெல்லாம் இம்மண்ணின் வளமெல்லாம் உருவாக்கித் தந்தவர்களின் நலனுக் காக, சமூக நீதி கோட்பாட்டைக் கடைப்பிடித்து அதன் ஒரு கூறான இடஒதுக்கீட்டுக் கொள்கை சில பத்து ஆண்டுகள் நடைமுறைக்குக் கொண்டு வரப்பட்டது. இடஒதுக்கீடு தொடர்பான வழக்கில் 1992இல் உச்சநீதி மன்றம் மேற்சொன்ன விளக்கத்தைத் தந்துள்ளது. இதுவும் இங்கு வெறும் பெயரளவிலேதான் செயல்பாட்டுக்கு வந்துள்ளது.

இதற்கிடையில் தகுதி, திறமை புறந்தள்ளப்பட்டு விட்டது என்று பலவாறான ஓலங்கள். ஆனால் மண்ட லுக்குப் பிந்தைய காலத்தில் நெல்சன் மண்டேலா இந்தியா வருகை தந்த போது, இந்தியாவின் ஒடுக்கப் பட்ட மக்களுக்கான இடஒதுக்கீட்டுக் கொள்கை போற்று தலுக்குரியது என்றும் இதனால் தகுதி, திறமை குறையு மெனில் முட்டாள்கள் என்றாகினும் முட்டாள்களாகிய நாங்கள் எங்கள் நாட்டை நாங்களே ஆண்டு கொள் வோம் என்றும் சூளுரைத்தார்.

எனவே, சமூகநீதிக் கோட்பாட்டைக் குலைத்திடும் நோக்கில் அரசமைப்புச் சட்ட மோசடியாகக் கொண்டு வரப்பட்டுள்ள இந்தப் 10 விழுக்காட்டு ஒதுக்கீட்டுச் சட்டம் நாட்டிற்கே தலைகுனிவு. மக்கள் நாயக மாண்பிற்கே இழுக்கு. இது ஒரு அரச வன்முறைச் சட்டம். இவ்வாறான பார்ப்பன இந்துத்துவ காவிக் கூட்டத்தின் அடாவடிக்குத் தன்மானமிழந்து மக்கள் மவுனம் காப்பது அடிமைத்தனப் பணிவுதான். இந்நிலையில் உச்சநீதிமன்றம் தன் மாண்பையும் மதிப்பையும் மக்கள் அதன்மீது வைத்துள்ள நம்பிக்கையையும் தக்க வைக்கும் வகையில் முதலில் இந்தச் சட்டத்தின் அடிப்படையில் வெளியிட்டுள்ள நிருவாக ஆணைகளை உடனடியாக நிறுத்தி வைக்கும் எனவும், சட்டத்தைச் செல்லாததாக்கும் எனவும் நம்பிக்கை கொள்ளலாம். ●

## அறிவிப்பு

**உரிமை மற்றும் வெளியீடு பற்றிய விவரம்**
**அறிக்கை படிவம் IV (விதி எண்.8இன்படி)**

**சிந்தனையாளன்** – மாத இதழ்

| | | |
|---|---|---|
| 1. | வெளியிடப்படும் இடம் | : மனை எண்.277/2, சென்னை-திருவள்ளூர் நெடுஞ்சாலை, அம்பத்தூர், சென்னை - 600 050. |
| 2. | அச்சிடுவோர் | : பெரியார் அச்சிடுவோர் வெளியிடுவோர் குழுமம் |
| 3. | வெளிவரும் காலம் | : மாதந்தோறும் |
| 4. | வெளியிடுவோர் பெயரும் முகவரியும் | : வே. ஆனைமுத்து மனை எண்.277/2, சென்னை-திருவள்ளூர் நெடுஞ்சாலை, அம்பத்தூர், சென்னை - 600 050. |
| 5. | ஆசிரியர் பெயரும் முகவரியும் | : மேலே உள்ளபடி |
| 6. | இதழுக்கு உரிமையாளர் களின் பெயர்(களும்) முகவரி(களும்) | : மார்க்சியப் பெரியாரியப் பொதுவுடைமைக் கட்சி மனை எண்.277/2, சென்னை-திருவள்ளூர் நெடுஞ்சாலை, அம்பத்தூர், சென்னை - 600 050. |

இங்கு மேலே தரப்பட்டுள்ள விவரங்கள் எனக்குத் தெரிந்த வரை யில் உண்மையானவை என்று இதன்மூலம் உறுதி கூறுகிறேன்.

சென்னை
28.02.2019

ஒப்பம்
**வே. ஆனைமுத்து**
வெளியீட்டாளர்

# சாதியில்லாச் சான்றிதழ்

- இராமியா

வேலூர் மாவட்டம், திருப்பத்தூரைச் சேர்ந்தவர் திருமதி. எம்.ஏ.சிநேகா. இவருடைய பெற்றோர்கள் சாதி மத நம்பிக் கைகளைக் கடந்த மனிதநேயச் சிந்தனையாளர்கள். இவரும் பெற்றோர்கள் வழியில் சாதி மத நம்பிக்கைகள் இல்லாமல் வளர்ந்து, சட்டப்படிப்பை முடித்து, வழக்கறிஞராகப் பணியாற்று கிறார். இவருடைய கணவரும், தமிழ்ப் பேராசிரியருமான திரு.பார்த்திபராசாவும் சாதிமத நம்பிக்கைகளைத் துறந்தவரே.

திருமதி. சிநேகா 2010ஆம் ஆண்டு முதல், தான் எந்த சாதி யையும் மதத்தையும் சாராதவர் என்று சான்றிதழ் வழங்கும்படி கேட்டுப் போராடினார். இதற்குமுன் இதுபோன்ற சான்றிதழ் வழங்கப்படவில்லை என்று கூறி அவருடைய கோரிக்கை நிராகரிக்கப்பட்டுக் கொண்டே இருந்தது. 2017ஆம் ஆண்டு முதல் அவர் ஒவ்வொரு அதிகாரியையும் நேரில் சந்தித்து விளக்கம் அளித்ததன் பயனாக 5.2.2019 அன்று அவருக்கு இந்தச் சான்றிதழ் வழங்கப்பட்டது. இவ்வாறு ஒரு சான்றிதழ் பெற்றதன் மூலம் சமூக முன்னேற்றத்தில் ஒருபடி ஏறி உள்ளதாக அவர் 13.2.2019 அன்று கூறினார்.

திருமதி. சிநேகா சாதியில்லாச் சான்றிதழைப் பெறுகிறார் அவருடைய, அவருடைய குடும்பத்தினருடைய **சாதிமத மறுப்பு உணர்வு பாராட்டுக்கு உரியது. ஆனால் சாதி ஒழிப்புப் பேரில் இந்த அணுகுமுறை என்ன பயன் அளிக்கும் என்பது ஆழ்ந்த பரிசீலனைக்கு உரியது.** சாதி என்பது ஒடுக்கப்பட்ட வகுப்பு மக்கள் மீது சுமத்தப்பட்டு உள்ள ஒரு கொடுமையான சுமை. பார்ப்பனர் களுக்குக் கிடைத்து இருக்கும் இனிமையான வாய்ப்பு.

அனைத்து வகுப்பு மக்களிலும் அனைத்து நிலைத் திறமை உடையவர்களும் இருப்பது மாற்றமுடியாத இயற்கை நியதி. அப்படி இருக்கையில் அனைத்துத் துறைகளிலும், அனைத்து நிலைகளிலும் அனைத்து வகுப்பு மக்களும் இருக்கவேண்டும். ஆனால் இந்தச் சாதிய அமைப்பு பார்ப்பனர்களை உயர்நிலை களிலும், மற்றவர்களை அடுத்த நிலைகளிலும் தேர்ந்தெடுக்கும் கயமையை உள்ளீடாகக் கொண்டு உள்ளது. இந்தக் கயமையைச் செயல்படுத்திக் கொண்டு இருப்பவர்கள் பார்ப்பனர்களே.

மனுஅநீதி வெளிப்படையாக ஆட்சி செய்து கொண்டு இருந்தகாலத்தில் பார்ப்பனர்கள் உயர்நிலைகளை அடைவதும், மற்றவர்கள் அடுத்த நிலைகளையே அடைவதுமான நிகழ்வு எவ்விதமான உராய்வும் இன்றி நடந்துகொண்டு இருந்தது. மகாத்மாபுலே, தந்தை பெரியார், அண்ணல் அம்பேத்கர், பெருந்தலைவர் காமராசர் ஆகியோருடைய போராட்டங்களால் ஒடுக்கப்பட்ட வகுப்பு மக்களுக்கும் உயர்நிலைகளில் / அதிகார மையங்களில் வாய்ப்புத் தரவேண்டியதாயிற்று. அவ்வாறு வாய்ப்புப் பெற்றவர்களில் பலர் பார்ப்பனர்களை விடத் திறமை சாலிகள் என மெய்ப்பித்தனர். இதனால் அரண்டு போன பார்ப்பனர்கள் சாதி அடிப்படையில் இடஒதுக்கீடு இருப்பதால் தானே ஒடுக்கப்பட்ட வகுப்பு மக்களுக்கு வாய்ப்புத் தரவேண்டி இருக்கிறது? சாதி யைப்பற்றிப் பேசாமலேயே இருந்துவிட்டால், ஒடுக்கப் பட்ட வகுப்பு மக்களுக்கு அளிக்கவேண்டிய வாய்ப்பை முற்றிலும் தடுத்துவிடலாம் என்று எண்ணமிட்டனர். உடனே சாதியை ஒழிக்கவேண்டும் என்றால், அதைப் பள்ளிக்கூடத்தி லேயே தொடங்கிவிட வேண்டும் என்றும் பள்ளியில் சேரும் போதே சாதி என்ன என்று கேட்கும் பழக்கத்தை ஒழித்துவிட வேண்டும் என்றும் ஒரு பொதுக்கருத்தை ஏற்படுத்த முனைந் தனர். நோயைக் குணப்படுத்துவது என்றால் நோயைப் பற்றிப் பேசாமல் இருப்பதோ, அதற்குச் சிகிச்சை அளிக்காமல் இருப் பதோ அல்ல என்றும் அதைப் பற்றிய புரிதலும் அதற்கு எதிராக நடவடிக் கைகளை எடுப்பதும்தான் என்றும் ஒடுக்கப்பட்ட வகுப்பு மக்களின் பிரதிநிதிகள் கூறினர். பார்ப்பனர்களுக்கு இது புரியாமல் இல்லை. அவாளுடைய உள்நோக்கமே வேறு. ஆகவே தாங்கள் கூறியதைத் தொடர்ந்து பிரச்சாரம் செய்து கொண்டே இருந்தார்கள் / இருக்கிறார்கள்.

இப்பிரச்சாரத்தில் மயங்கிய / குழம்பிய சில ஒடுக்கப்பட்ட வகுப்பு மக்களும் சாதிபற்றிப் பேசுவதால்தான் சாதியைச் சொல்வ தால்தான் சாதியைக் குறிப்பிடுவதால்தான் சாதி உணர்வு இருக்கிறது வளர்கிறது என்று நம்பத் தொடங்கிவிட்டனர். சாதி அடிப்படையில் தொழில் அமைவதுதான் சாதி உணர்வின் வேர் என்பதையும், அனைத்துத் தொழில்களிலும் அனைத்துச் சாதியினரும் இருக்கும்படியான நிலைமை ஏற்பட்டுவிட்டால், சாதிய உணர்வின் வேர்கள் அறுக்கப்பட்டுவிடும் என்பதை யும் புரிந்து கொள்ளத் தவறி விட்டனர்.

சாதி பற்றிப் பேசாமல் இருந்தால் அவாளுக்கு அது வசதியாகப் போய்விடும். உயர்நிலை வேலைகளுக்கு விண்ணப்பித்துவிட்டு நீங்கள் காத்துக்கெண்டு இருப்பீர்கள். அவாளும் விண்ணப்பித்து விட்டு அதன் விவரங்களை அவாள் நடத்தும் மடங்களில் கொடுத்து விடுவார்கள். வேலைக்குத் தேர்வு செய்யும் அதிகாரிகளுக்கு யார் "நம்மவா" என்று செய்தி சேர்ந்துவிடும். அவாள் திறமை சாலிகள் என்றும் நாம் திறமைக் குறைவானவர்கள் என்றும் முத்திரை குத்திவிட்டு உயர்நிலைகளுக்கு அவாளையும், அடுத்த நிலைகளுக்கு நம்மையும் தேர்ந்து எடுப்பார்கள். இப்படிச் செய்வதற்கு அவாளுக்கு எந்த உராய்வும் இல்லாமல் போய் விடும். சாதி அடிப்படையில் இடஒதுக்கீடு இருப்பதால்தான் நம்முள் உள்ள திறமை சாலிகளுக்கு வாய்ப்புக் கிடைக்கிறது.

இப்படி எல்லாம் நடக்காமல் சாதிய ஏற்றத்தாழ்வுகளை மாற்ற வேண்டும் என்றால், அரசு, தனியார் உள்ளிட்ட அனைத்துத் துறை களிலும், அரசியல், சமூக, பொருளாதார நடவடிக்கைகளிலும், அனைத்து நிலைகளிலும் அந்தந்த வகுப்பு மக்களின் மக்கள் தொகை விகிதத்தில் வாய்ப்புக் கொடுக்கும் விகிதாச்சாரப் பங்கீடு முறையைச் செயல்படுத்துவது ஒன்றுதான்வழி. இவ்வாறு செய்வ தனால் சாதி அடிப்படையில் தொழில் அமையும் இன்றைய நிலை உருக்குலைக்கப்படும்; சாதியின் பெயரால் எந்தவிதமான சலுகை யையோ ஒடுக்கு முறையையோ காட்டமுடியாத நிலை ஏற்பட்டு விடும். இந்நிலைதான் சாதிய உணர்வை வேரறுக்கும். ●

# தாய்மொழிக்கு நிகர் ஏது?

**- பேராசிரியர் மறைமலை இலக்குவனார்**

இன்று (பிப்ரவரி 21-ந் தேதி) உலகத் தாய்மொழி தினம்.

இன்றைய வங்க தேசத்தில் (அன்றைய கிழக்குப் பாகிஸ்தானில்) வங்காள மொழியையும் பாகிஸ்தானின் தேசிய மொழியாக அறிவிக்க வேண்டும் என்று கிளர்ச்சி செய்தார்கள். அந்தப் போராட்டத்தில் நான்கு மாணவர்கள் 1952ஆம் ஆண்டு பிப்ரவரி 21-ந் தேதி சுட்டுக் கொல்லப்பட்டார்கள். அந்தக் கிளர்ச்சி தீவிரம் அடைந்து கிழக்குப் பாகிஸ்தான் தனி நாடாகி 'வங்கதேசம்' என ஒரு நாடு உருவாகியது. 1999ஆம் ஆண்டு 'யுனெஸ்கோ' (ஐக்கிய நாடுகள் கல்வி, அறிவியல், பண்பாட்டுக் கழகம்) நத்திய ஒரு மாநாட்டில் வங்கதேச அரசினர், தாய் மொழிக்காகப் போராடித் தங்கள் உயிரை நீத்தவர்களின் நினைவாகவும் தாய்மொழியின் சிறப்பை வலியுறுத்தும் விதமாகவும் பிப்ரவரி 21-ந் நாளை 'உலகத் தாய்மொழி நாளாக' ஆண்டுதோறும் கொண்டாட வேண்டும் என்ற தீர்மானம் கொண்டு வந்தார்கள். யுனெஸ்கோ அந்தத் தீர்மானத்தை ஏற்றுக்கொண்டது. அதன் விளைவாக, 2000-ஆம் ஆண்டில் இருந்து பிப்ரவரி 21 'உலகத் தாய்மொழி நாள்' என்று அனைவராலும் கொண்டாடப்பட்டு வருகிறது.

ஆயிரம் மொழி அறிந்தாலும் அவற்றிற்கு அடிப்படையாக விளங்குவது தாய்மொழி அறிவே. "உங்களுக்குத் தெரிந்த மொழியிலே ஒருவன் பேசினால் அது உங்கள் அறிவைச் சென்று சேரும்; ஆனால், உங்கள் தாய் மொழியிலே பேசினால் அது உங்கள் உள்ளத்தையும் ஊடுருவிச் செல்லும்" என்று நெல்சன் மண்டேலா குறிப்பிட்டார். அந்த வகையில் தாய்மொழி என்பது நம் உணர்வோடு, நம்முடைய கனவோடு, நம்முடைய அழுகையோடு, சிரிப்போடு, அனைத்து மெய்ப்பாடுகளோடும் வளர்ந்த மொழி ஆகும். தாய்மொழிக்கு முதன்மை வழங்குவது என்பது, தாய்க்கு எவ்வாறு முதன்மை வழங்க வேண்டுமோ அதைப் போன்று ஒரு முதன்மையான கடமை.

உலகத்தில் 2700 மொழிகள் பேசப்பட்டு வருவதாகவும், 5 ஆயிரம் வட்டார மொழிகள் பேசப்பட்டு வருவதாகவும், புள்ளி விவரங்கள் கூறுகின்றன. ஆனால், அந்த 2700 மொழிகளில் ஆசியாவில்மட்டும் 2200 மொழிகள் பேசப்பட்டு வருகின்றன. இந்தியாவில் முப்பத்து மூன்று மொழிகளும் இரண்டாயிரம் வட்டார மொழிகளும் பேசப்பட்டு வருவதாக விவரங்கள் அறிவிக்கின்றன. அந்த முப்பத்து மூன்று மொழிகளில் இருபத்து மூன்று மொழிகளை நம்முடைய இந்திய அரசியல் சட்டத்தினுடைய எட்டாவது அட்டவணையின்கீழ் ஏற்பிசைவு (அங்கீகாரம்) வழங்கியிருக்கிறார்கள்.

கிரேக்க மொழி, இலத்தீன் மொழி, ஈப்ரு மொழி, சீன மொழி, நம்முடைய இந்தியாவிலே தமிழ் மொழி, சமஸ்கிருத மொழி, இவையெல்லாம் மிகப் பழமை வாய்ந்த மொழிகள். சமஸ்கிருத மொழி பேச்சு மொழி அல்ல. ஏனைய மொழிகளெல்லாம் ஒரு காலத்திலே மக்கள் திரள் திரளாகப் பேசிக்கொண்டோ, இலக்கியங்களை, அறிவியலைப் படைத்துக் கொண்டோ இருந்த மொழிகள். அவற்றுள் இன்றைக்குக் கிரேக்கமும், இலத்தீனும் செல்வாக்கு இழந்துவிட்டன. செல்வாக்கிழந்திருந்த ஈப்ரு மொழி யூதர்களின் **எழுச்சியினாலும் உழைப்பாலும் மறுமலர்ச்சி அடைந்துள்ளது. சீன மொழி என்றைக்குமே தளர்ச்சி அடையவில்லை. சீனர்கள் இடைவிடாத வணிகத்தாலே உலகத்தோடு தொடர்பு கொண்டு வலிமை வாய்ந்த ஓர் இனமாக என்றைக்குமே இருந்த காரணத்தினாலே சீன மொழி நிலைத்து நிற்கிறது. அதுபோலவே உலகெங்கும் பல்வேறு நாடுகளுக்குச் சென்று குடியேறிய தமிழர்களின் முயற்சியால் தமிழ் மொழியும் ஒரு சிறப்பு வாய்ந்த உலக மொழியாக நிலைபெற்று நிற்கிறது.**

எளிமையாக ஒலிப்பதற்கு, எளிமையாகப் பேசுவதற்கு, எளிமையாக எழுதுவதற்கு வாய்ந்த ஓர் உயர்தனிச் செம்மொழி தமிழ்மொழிதான். அடுத்தது, அதன் இனிமை தமிழைச் சொல்லும்பொழுது, அடிவயிற்றிலே இருந்து நாம் பேச வேண்டிய தேவையில்லை. மற்ற மொழிகளைச் சொல்லும் பொழுது அடிவயிற்றிலே அந்த ஒலிப்பு தொடங்கும். அப்படி தொல்லைப்பட்டு ஒலிக்க வேண்டிய ஒலி எதுவுமே தமிழில் இல்லை. தமிழின் சொற்கள் யாவுமே மிகவும் குறைவான எழுத்துகளுடைய சொற்கள்தான். இவ்வாறு அமைப்பிலும் ஒலிப்பிலும் எல்லா நிலைகளிலும் எளிமையும் இனிமையும் என்றும் மாறாத தன்மையும் கொண்டது தமிழ்மொழி. திருவள்ளுவர் எப்படிப் பேசினாரோ, அதேபோலத்தான் நாம் பேசுகிறோம். அதனால்தான் திருக்குறள் நமக்குப் புரிகிறது. ஆங்கிலம் பதினொன்றாம் நூற்றாண்டுக்குப் பின்னாலே வந்த மொழிதான் எனினும் ஆங்கில மொழியிலேயே கி.பி.13-ஆம் நூற்றாண்டுக்குரிய ஆங்கிலம் இன்றைக்கு இருக்கிற ஆங்கிலேயர்களுக்குப் புரியாது. ஆனால் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு

முந்தைய திருக்குறள் இன்று நமக்குப் புரியும். காலம் மாறினாலும் என்றும் மாறாது இருக்கின்ற பெருமை தமிழின் தனிச்சிறப்பு ஆகும்.

டாடி, மம்மி என்று கூப்பிட்டால் பெற்றோர்களுக்குப் பெருமையாக இருக்கிறது. அதனால் குழந்தைகளுக்கு வேறு வழியில்லை. ஆனால், அவ்வாறு அழைப்பது தவறு என்று பெற்றோர்கள் கருதத் தொடங்கினால், குழந்தைகள் அவ்வாறு அழைக்கமாட்டார்கள். குழந்தைகள் பெற்றோரிடமிருந்துதானே பேசக் கற்றுக் கொள்கின்றன? பெற்றோர் எந்த அளவுக்கு வீட்டிலே தமிழைப் பயன்படுத்துகிறார்களோ அந்த அளவுக்குக் குழந்தைகளுக்கு மொழியறிவும் பேச்சுத் திறனும் வளரும். வீட்டில் தமிழைப் பேசிப் பல புதியச் சொற்களையும் குழந்தைகள் தெரிந்து கொள்ளுமாறு செய்தல் பெற்றோரது கடமையாகும். அது ஒரு சமூகக் கடமையென்ற எண்ணம் ஏற்பட்டால், குழந்தை வளர்வதைப் போன்றே அதன் தமிழறிவும் சிறப்பாக வளரும் அல்லவா?

புலம்பெயர்ந்த தமிழர்கள் நல்ல தமிழிலே உரையாடுகிறார்கள். அமெரிக்காவுக்கோ, சிங்கப்பூருக்கோ போனால், நல்ல தமிழிலே வீட்டிலேயே பேசுகிறார்கள். அந்தக் குழந்தைகளெல்லாம் அருமையாக நல்ல தமிழிலே பேசுகின்றன. நமக்கெல்லாம் வியப்பாகவே இருக்கிறது. இன்னும் சொல்லப்போனால் தமிழை நம்முடைய மாநிலத்திலேயே இரண்டாவது மொழியாக அறிமுகப்படுத்துவதற்குக்கூட போராடிக் கொண்டிருக்கிறோம். ஆனால், அமெரிக்காவிலே பதினான்கு மாநிலங்களில் தமிழ் இரண்டாம் மொழியாகக் கல்வி நிலையங்களிலே பயிற்றுவிக்கப்படுகிறது. காரணம் யார்? பெற்றோர்கள்? அவர்கள் ‘‘அமெரிக்கத் தமிழ்க் கழகம்’’ என்று ஓர் அமைப்பையும் ‘‘கலிபோர்னியாத் தமிழ்க் கழகம்’’ என்ற அமைப்பையும் உருவாக்கி எல்லாக் குழந்தைகளுக்கும் தமிழ் கற்றுக் கொடுப்பதை மிக எளிமையாக காணொலிகள் (வீடியோ) மூலமாக, ஒலிப்பேழைகள் (ஆடியோ) மூலமாக, பாட்டுக்கள் மூலமாக, இசை மூலமாக, நாடகத்தின் மூலமாகப் பரப்பி வருகிறார்கள். தமிழ் ஆர்வம் மேலிட்டு அமெரிக்கத் தமிழ்க் குழந்தைகளெல்லாம் மிக அருமையான தமிழிலே எந்த வழுவும் இல்லாமல், எந்தக் கலப்பும் இல்லாமல் அவர்கள் இல்லத்திலே பேசுவதை நீங்கள் அங்கே சென்றால் கேட்கலாம்.

**தாய்மொழி என்பது நம்முடைய உணர்வோடு, நம்முடைய கனவோடு பின்னிப்பிணைந்திருப்பது. நீங்கள் என்னதான் பிறமொழி படித்தாலும் இன்னொரு மொழியிலே கனவுகாண முடியுமா? உங்கள் கனவிலே வருவது எந்த மொழி? தாய்மொழி தானே?**

‘‘சொல்லில் உயர்வு தமிழ்ச்சொல்லே! அதைத் தொழுது படித்திடடி பாப்பா!’’, ‘‘யாமறிந்த மொழிகளிலே தமிழ்மொழி போல் இனிதாவது எங்கும் காணோம்!’’ என்றெல்லாம் தமிழைப் போற்றினார், பாரதியார்; ‘‘தமிழ் எங்கள் உயிருக்கு நேர்!’’ என்றார் பாரதிதாசன். தமிழை நாம் போற்றுகின்ற அளவு, பயன்படுத்துவதில்லை.

அன்றாடப் பேச்சு வழக்கில், ஆங்கிலச் சொற்களைப் பயன்படுத்துவதைத் தவிர்க்க வேண்டும். தமிழும், ஆங்கிலமும் கலந்த கலப்புத் தமிழை நீக்கி, தமிழிலே உரையாடும் பழக்கம் மேலோங்க வேண்டும். கல்லூரிகளிலும், நீதிமன்றத்திலும், கோவிலிலும் தமிழே இல்லாத சூழலை மாற்றாமல், தமிழை வெறுமனே போற்றிப் பயனில்லை என்பதை மக்கள் உணர வேண்டும். அந்த உணர்வு ஏற்பட்டு, தாய்மொழி சிறந்தோங்க ஆவன செய்வதே நம் அனைவரின் கடமையாகும்.

**(‘‘தினத்தந்தி,’’ 21-2-2019)**


## வண்ணார் சமூக மக்களுக்கு (MBC) மிகவும் பிற்படுத்தப்பட்டோர் பட்டியலில் 3 சதவீத உள் ஒதுக்கீடு கோரி மாபெரும் உண்ணாநிலைப் போராட்டம்

தமிழ்நாடு சலவைத் தொழிலாளர் மத்திய சங்கத்தின் சார்பில் காஞ்சி மாவட்ட ஆட்சியர் அலுவலகம் காவலான்கேட் அருகில் 25.2.2019 திங்களன்று காலை 10.00 மணியளவில் மாநிலத் துணைத் தலைவர் எ.பாலன் தலைமையில் உண்ணாவிரதப் போராட்டம் நடைபெற்றது. ஆசிரியர் மாநில இணைப் பொதுச் செயலாளர் சி. பிரகாசம் துவக்கி வைக்க, மாநிலச் செயலாளர் கோ. சுப்ரமண்யம் வரவேற்புரை நிகழ்த்தினார்.

உண்ணாவிரதப் போராட்டத்தில் மார்க்சியப் பெரியாரிப் பொதுவுடைமைக் கட்சி, காஞ்சி மாவட்டச் செயலாளர் தோழர் சி. நடராசன், க. தேவராசன், தமிழினியன், ரவி, எஸ். திருஞானம், ஆசிரியர் கே.பி. ராசாராம், ஆர். சீனுவாசன், பி. தனசேகரன், டி. முருகேசன், எம்.கி. பரந்தாமன், எஸ். சிவானந்தம், என். ஜெயபால், எம். லட்சுமணன், எம். அரிதாஸ் மற்றும் பலர் பங்கேற்று உரையாற்றினர்.

மாநிலத் தலைவர் இரா. சுப்பிரமணியன் உண்ணாநிலைப் போராட்டத்தை முடித்து வைக்க, டி.கே. ஏழுமலை நன்றி கூற மாலை 5.00 மணியளவில் போராட்டம் முடிவுற்றது.

**- சி. நடராசன்**



# சுயமரியாதைப் போராளி பட்டுக்கோட்டை அஞ்சாநெஞ்சன் அழகிரிசாமி!

மரு.க.சோமாஸ்கந்தன்

திராவிட இயக்கத் தலைவர்களில், அஞ்சா **நெஞ்சன், தளபதி என்ற இரு** அடைமொழிகளாலும் அறியப்பட்டவர் பட்டுக்கோட்டை அழகிரிசாமி தீவிரமாகப் பெரியாரைப் பின்பற்றியவர்; தன் வாழ்நாள் முழுதும் ஒரே தலைவன் ஒரே கட்சி என்று வாழ்ந்தவர். மலை குலைந்தாலும் மனம் குலையாத கொள்கை மறவன். சுயமரியாதை இயக்கத்தின் சுடர் விளக்கு! சாதி, மத, மூட நம்பிக்கைகளை எதிர்த்துத் தினம் மேடையமைத்துப் பரப்புரை செய்துவந்தவர்.

புதுக்கோட்டை மாவட்டம், கீரமங்கலம் அருகில் உள்ள கருக்காக்குறிச்சி கிராமத்தில் வாசுதேவன்-கண்ணம்மா இணையருக்கு 23-06-1900 அன்று பிறந்தவர். சிறுவயதில் தந்தையை இழந்துவிட்டதால் தாய் வழிப் பாட்டனாரின் ஊரான மதுரை மாவட்டம், சோழவந்தான் அருகே உள்ள வாவிடை மருதூர் கிராமத்தில் வளர்ந்தார் மதுரையில் உள்ள பசுமலை அமெரிக்கன் உயர் நிலைப்பள்ளியில் இறுதிவகுப்பு வரை பயின்றார்.

முதலாம் உலகப் போரின் போது, 1914-1918 தனது முன்னோர்களைப் பின்பற்றி இராணுவத்தில் சேர்ந்து பணிபரிந்தார்.இராணுவப் பணியின் போது மெசபடோமி யாவில் கடும் பனிப்பொழிவு காரணமாக பிரிட்டிஷ் இராணுவத்தினர் இந்தியப் படை வீரர்களைத் தவிக்க விட்டு விட்டு இங்கிலாந்து சென்றுவிட்டனர். அழகிரி, கவலைப்படாமல் கடல்வழியாகக் கல்கத்தா வந்தடைந் தார். கல்கத்தாவில் சிறிது நாள்கள் தங்கிவிட்டு, தனது சித்தப்பா வேணுகோபால் நாயுடு இல்லம் சென்று தங்கினார். அகவை 20 இல், தனது அத்தை மகள் எத்திராஜ் என்பவரை 1920 ஆம் ஆண்டு திருமணம் செய்து கொண்டார். இரண்டு ஆண் மக்களும் மூன்று பெண்மக்களும் அவர்களுக்குப் பிறந்தனர்.

பெரியார் சுயமரியாதை இயக்கம் காண்பதற்கு முன்னரே, பட்டுக்கோட்டையில் அழகிரிசாமி அவர்கள் சுயமரியாதைச் சங்கம் நிறுவிச், சாதி சமயச் சடங்குகள், சம்பிரதாயங்கள், மூட நம்பிக்கைகள் ஆகியவற்றை எதிர்த்துச் சொற்பொழிவுகள் ஆற்றிப் பெரியாரின் கருத்து களை மக்களிடையே ஆக்கத்தோடும் ஊக்கத்தோடும் பரப்பி வந்தவர்.

தில்லை நடராசனையும் சீரங்கநாதனையும் பீரங்கி வைத்துப் பிளக்கும் நாள் எந்நாளோ? என்று முதன் முதலில் முழங்கியவர் அஞ்சாநெஞ்சர்தான். பின்னாளில் அவ்வரிகளைக் கலைஞர் பேசியதாகத் தவறாகக் கூறினர். இது போன்ற பேச்சுக்களால் அந்நாளில் அழகிரிசாமி கல்லடிகளையும் சொல்லடிகளையும் பரிசாகப் பெற்றார்.

### சேரன்மாதேவி குருகுலம்

பட்டுக்கோட்டைக் கூட்டுறவுச் சங்கமொன்றில் எழுத்தராகப் பணியில் அமர்ந்தார். 1925 ஆம் ஆண்டு ஆங்கிலேயர் அளிக்கும் கல்வியைப் புறக்கணிக்க வேண்டும் என்று காங்கிரஸ் கட்சியின் கருத்தை ஏற்று வ.வே.சுப்பிரமணிய ஐயர் (வ.வே.சு.ஐயர்) சேரன்மா தேவி என்ற ஊரில் தேசியக் கல்வி நிலையம் (குருகுலம்) ஒன்றை நிறுவினார். அப்பொழுது தமிழ்மாநிலக் காங்கிரஸ் கமிட்டியின் செயலாளராக இருந்தவர் பெரியார்.

குருகுலத்திற்குப் பொதுமக்கள் நிதி உதவினர். காங்கிரஸ் உரூபாய் 10,000/ நிதி வழங்க ஒப்புக்கொண்டது. முதல் தவணையாக உரூபாய் 5,000/- க்குக் காசோலை வழங்கினார் பெரியார்.

அந்தக் குருகுலத்தில் வர்ணாசிரம தர்மம் கடை பிடிக்கப்படுகிறது என்று பெரியார் அவர்களுக்குச் செய்தி கிடைத்தது; சீற்றம் கொண்டார். குருகுலத்திற்குத் தரவேண்டிய உரூபாய் 5,000/- தர இயலாது என்று பெரியார் கூறிவிட்டார். ஆனால், இன்னொரு பார்ப்பனச் செயலாளரிடம் காசோலையைப் பெற்றுக் கொண்டார் வ,வே.சு,ஐயர்.

பெரியார் இதனால் வெகுண்டெழுந்து குருகுலத்திற்கு எதிராகக் கிளர்ச்சி செய்தார். காந்தியாருக்குச் செய்தி அறிவிக்கப் பட்டது. ஒரு சாரார் மற்றவர்களோடு கலந்து அமர்ந்து உணவு உண்ண விரும்பவில்லை என்றால் அவர்களின் அந்த உணர்வினை மதித்திடவேண்டும் என்ற காந்தியாருடைய கருத்து 12 மார்ச் 1925 அன்று ‘‘இந்து’’ பத்திரிக்கையில் வெளியாயிற்று. பெரியார் அதனால் கிளர்ச்சியைத் தீவிரப்படுத்தினார்.

இந்நிலையில், பிராமணரல்லாத மாணவர், பிராமண மாணவர்க்கென வைக்கப்பட்டிருந்த தண்ணீர்ப் பானை யிலிருந்து தண்ணீர் அருந்தினார் என்று அந்த மாணவ ரைக் குருகுலக் காப்பாளர்கள் அடித்து விட்டனர் அதனை அறிந்த பட்டுக்கோட்டை அழகிரிசாமி குருகுலத்தை எதிர்த்துத் தீவிரமாகப் போராடினார்.

**சுயமரியாதை எல்லோர்க்கும் வேண்டும்**

1939 ஆம் ஆண்டு இரண்டாம் உலகப்போர் தொடங்கிய காலத்தில் அழகிரிக்கு இராணுவத்திற்கு ஆள் சேர்க்கும் பதவி வாய்த்தது. பசுமலையில் போர் ஆதரவுக் கூட்டங்களில் போருக்கு ஆதரவாய்ப் பேசாமல் சுயமரி யாதை இயக்கப் பிரச்சாரம் செய்தார். அவரின் எதிரிகள் சென்னை ஆளுநருக்கு அழகிரி தன்னுடைய பதவியை முறைகேடாகப் பயன்படுத்து கின்றார் என்று முறையீடு செய்தனர். ஆளுநர் ஆய்வு செய்திட வந்தார். நீர் போர்ப் படைக்கு ஆள் தெரிந்தெடுக்காமல், கட்சிப் பணி புரிவ தாகக் குற்றம் சாட்டியுள்ளனரே என்று வினவினார். அதற்கு அழகிரி, என் பேச்சால் இராணுவத்தில் இளை ஞர்கள் சேர்கின்றார்களா என்று மட்டும் பாருங்கள். என் கட்சிப் பணியைப் பற்றிக் கவலை தங்களுக்கு வேண்டுவ தில்லை, என்றார். ஆளுநர், உங்களை எச்சரித்து அனுப்புகின்றேன், என்றார். அழகிரி அதற்கு, நான் தவறேதும் செய்யவில்லை. தங்கள் மன்னிப்போ, எச்சரிக்கையோ தேவையில்லை. இந்த வேலையும் வேண்டாம், என்று கூறிவிட்டுப் பணியிலிருந்தும் விலகிவிட்டார்; காரணம் சுயமரியாதை உணர்வு.

சிவகங்கை மாவட்டம், கானாடுகாத்தானில், புகழ் பெற்ற நாதசுவர இசைக் கலைஞர் சிவக்கொழுந்து அவர்களின் இசை நிகழ்ச்சி நடந்துகொண்டிருந்தது; இசைக்கலைஞர் தோளில் துண்டு அணிந்து கொண்டிருந் தார். அதனைக் கண்ட ஆதிக்கச் சாதியினர், 'சிவக்கொழுந்து தோளிலுள்ள துண்டை எடு' என்று கோபக்குரலில் எதிர்ப்புத் தெரிவித்தனர். இசைக்கலைஞர் சாதிய அமைப்பில் கீழ்ச் சாதியைச் சார்ந்தவர்; மேல் சாதியினர் முன்னிலையில் கீழ்ச் சாதியினர் தோளில் துண்டு அணிதல் கூடாது என்பது சனாதன தர்மம்; ஆதலின் ஆர்ப்பாட்டம் செய்தனர். ஆங்கே கூட்டத்தில் இசையைக் கேட்டு மகிழ்ந்து கொண்டிருந்த பட்டுக்கோட்டை அழகிரி, நீங்கள் தோளில் போட்டுள்ள துண்டை எடுக்கவேண்டாம்; எவர் என்ன செய்கிறார் என்று நான் பார்க்கிறேன்; நீங்கள் தொடர்ந்து வாசியுங்கள், என்று சிம்மம் எனக் கர்ஜித்தார். அழகிரியின் தோற்றமும் குரலில் இருந்த உறுதியும் சாதிவெறிக் கும்பலை அடக்கிற்று.

**பெரியார் காங்கிரஸிலிருந்து விலகல்**

1925 ஆம் ஆண்டு நவம்பர் 21ஆம் நாள் சென்னை மாகாண காங்கிரசு மாநாடு திரு.வி.க. தலைமையில் காஞ்சிபுரத்தில் நடைபெற்றது. அதில் பெரியார் வகுப்பு வாரித் தீர்மானம் கொண்டு வந்தார்.

'தேசிய முன்னேற்றத்துக்கு இந்து சமூகத்தாருக்குள் பற்பல சாதியாருக்குள் பரஸ்பரம் நம்பிக்கையும் துவேச மின்மையும் ஏற்பட வேண்டுமாகையால் ராஜ்ய சபை களிலும் பொது ஸ்தாபனங்களிலும் பிராமணர், பிராமண ரல்லாதார், தீண்டாதார் எனக் கருதப்படும், இம்மூன்று பிரிவினருக்கும் தனித்தனியாக ஜனத் தொகை விழுக்காடுக்கு ஏற்பத் தங்கள் தங்கள் சமூகத்திலிருந்து பிரதிநிதிகள் தேர்ந்தெடுத்துக் கொள்ள உரிமை ஏற்படுத்த வேண்டும்' என்பதுதான் அந்தத் தீர்மானம்.

வகுப்புவாரித் தீர்மானத்தைக் காங்கிரசு மாநாட்டில் பெரியார் கொண்டுவருவது முதன்முறையன்று. 1920 திருநெல்வேலி மாநாட்டில் கொண்டு வந்திருந்தார். பொது நலனுக்குக் கேடுபயக்கும் என்று மாநாட்டுத் தலைவர் எஸ்.சீனிவாசய் யங்கார் அனுமதிக்க மறுத்துவிட்டார்.

1921 தஞ்சை மாநாட்டின் தலைவர் இராஜாஜி, கொள் கையாகக் கொள்வோம் தீர்மானம் வேண்டாம் என்று கூறிவிட்டார்.

1922 திருப்பூர் மாநாட்டிலும் தீர்மானத்தை ஏற்க வில்லை என்றதும், சாதி வேற்றுமையை வலியுறுத்தும் மனுதர்மத்தையும், இராமயணத்தையும் கொளுத்த வேண்டும் என்று ஆவேசப்பட்டார். கலவரம் ஏற்பட்டு விஜயராகவாச்சாரியார் அடங்கிவிட்டார்.

1923 சேலம் மாநாட்டிலும் கலகமாகும் என்றதும் ஜார்ஜ் ஜோசப்பும், டாக்டர். நாயுடுவும் தடுத்து நிறுத்தி விட்டார்கள்.

1924 திருவண்ணாமலை மாநாட்டில் பெரியார் தலைமை என்றபோதும், எஸ்.சீனிவாச ஐயங்கார் போன்ற தலைவர்கள் சென்னையிலிருந்து ஏராளமான உறுப்பினர்களைத் தருவித்துத் தீர்மானம் நிறை வேறாமல் தடுத்து விட்டனர்.

காஞ்சிபுரம் மாநாட்டிலும் திரு.வி.க தலைமையென்ற போதும் தீர்மானத்தை நிறைவேற்ற அனுமதிக்க வில்லை. பெரியாரின் கோபம் எல்லை மீறியது; காங்கிரசு பிராமணர் நன்மைக்காகச் செயல்படுகிறது. பிராமணர் ஆதிக்கத்திலுள்ளது. இனி பிராமணர் ஆதிக்கத்தையும் காங்கிரசையும் ஒழிப்பதே என் முதல் வேலை என்று கூறிவிட்டுக் காங்கிரசை விட்டுவிலகினார். அவருடன் மூவலூர் இராமாமிர்தம் அம்மையார், சர்க்கரைச் செட்டியார், மணப்பாறை ரெ.திருமலைச் சாமி, டி.ஏ. இராமலிங்கச் செட்டியார், எஸ்.இராம நாதன் உள்ளிட்ட பலரும் காங்கிரசைவிட்டு விலகினர்.

1926 ஆம் ஆண்டில் பெரியார் சுயமரியாதை இயக்கத்தைத் தோற்றுவித்தார்.

குடியரசு எனும் வார ஏட்டின் மூலம் பகுத்தறிவுச் சுடர் விடும் ஆயிரக்கணக்கான கட்டுரைகள் வெளிவந்தன. ப. ஜீவானந்தம், பட்டுக்கோட்டை அழகிரிசாமி, சௌந்திர பாண்டியன், குத்தூசி குருசாமி, பொன்னம்பலனார், சிங்காரவேலர், கைவல்யசாமி, எஸ்.இராம நாதன்

போன்ற பலர் பெரியாருக்குத் துணையாக நின்று சுயமரியாதைக் கருத்துகளைச் சூறாவளி வேகத்தில் தமிழகத்தில் பரப்பி வந்தனர்.

ரிவோல்ட் என்ற ஆங்கில இதழைப் பெரியார் 7-11-1928 அன்று (அன்று இரசியப் புரட்சி நாள்) தொடங்கி நடத்தினார். பெரியாரும், எஸ்.இராமநாதன் எம்.ஏ.,பி.எல் அவர்களும், எஸ். குருசாமியும் அதன் ஆசிரியர்களாக இருந்தனர். ஆசிரியர் குத்தூசி எஸ்.குருசாமி அவர்களை ஒரு நாளேடு தரக்குறைவாக எழுதியது. இதனால் கோபமடைந்த அழகிரி அந்த நாளேட்டின் அலுவலகம் சென்று அந்த ஆசிரியரை அடித்துவிட்டுத் திரும்பினார். அந்த வழக்கு நீதி மன்றம் சென்றது. அந்த வழக்கில் அழகிரிக்காக சிந்தனைச் சிற்பி சிங்காரவேலர் வழக்கறி ஞராக வழக்கினை நடத்தினார்.

தமிழகத்தில் 28-5-1928 இல் பெருத்த எதிர்ப்பு களிடையே முதல் சாதி மறுப்புச் சுயமரியாதைத் திருமணத்தைப் பெரியார் நடத்திவைக்க வேண்டிய அனைத்து ஏற்பாடுகளையும் செய்தவர் பட்டுக்கோட்டை அழகிரிசாமி. முத்தமிழ்க்காவலர் கி.ஆ.பெ விசுவநாத னும், சிதம்பரம் என்.தண்டபாணியும் உறுதுணை யாக இருந்தனர்.

### செங்கற்பட்டு முதல் சுயமரியாதை மாநாடு

17-2-1929 அன்று செங்கற்பட்டு முதல் சுயமரியாதை மாநாடு நடைபெற்றது அம்மாநாட்டில் பி.டி.இராஜன் மாநாட்டுக் கொடியை ஏற்றினார். முதலமைச்சர் டாக்டர்.சுப்பராயன் மாநாட்டைத் தொடங்கி வைத்தார். பட்டிவீரன்பட்டி டபிள்யூ. பி.ஏ.செளந்திரபாண்டியன் தலைமையில் மாநாடு நடைபெற்றது.

மாநாட்டில் ஈ.வெ.ரா.நாகம்மையார், ஆர்.கே. சண்முகம், எஸ்.இராமநாதன், புரட்சிக்கவிஞர் பாரதிதாசன் ஆகியோர் உரையாற்றினர். இந்த மாநாட்டில் பட்டுக் கோட்டை அழகிரிசாமி எழுச்சியுரையாற்றினார். இம் மாநாட்டிற்குப் பின் பல கலப்புத் திருமணங்களும், விதவைத் திருமணங்களும் நடைபெற்றன. அந்தத் திருமணங்கள் சீருடனும் சிறப்புடனும் நடந்திட அஞ்சா நெஞ்சர் அழகிரி உறுதுணையாக இருந்து வேண்டும் ஏற்பாடுகளைச் செய்தார்.

திருவாரூரில் இந்தித் திணிப்பை எதிர்த்து அஞ்சா நெஞ்சன் சிம்மம் எனக் கர்ஜித்தார். இந்திக்குத் தமிழ் நாட்டில் ஆதிக்கமா? எல்லோரும் வாருங்கள் தமிழர்களே என்று இடியின் ஓசையை மிஞ்சும் பெருங்குரலெடுத்து உணர்ச்சிப் பெருக்குடன் பேசினார். பேசி முடித்ததும் குருதி கக்கி மயங்கி விழுந்தார். அடி வயிற்றிலும், விலாவிலும் தாங்கமுடியாத வலியில் துடி துடித்தார். அங்கே நின்றுகொண்டு அவரது உணர்ச்சியைத் தூண்டும் சொற் பொழிவைக் கேட்டுக் கொண்டிருந்த சிறுவன்,எதனால் இப்படி இவர் துடி துடிக்கிறார்? துன்பப்படுகிறார்? ஏன்? என்று வினவினார். அவர் நோயாளி என்றனர் கூடியிருந்தோர் நோயாளியான இவர் ஏன் இப்படிக் கத்திப் பேசவேண்டும் என்று கேட்டான் அந்தச் சிறுவன். சிறுவனின் வினா அழகிரி யின் செவியில் விழுந்துவிட்டது. அந்தச் சிறுவனை அன்போடணைத்து, தம்பி, என்னைவிட இந்த நாடு நோயாளியாக இருக்கிறது! டாக்டருக்கு காய்ச்சல் என்பதற்காக மிகவும் மோசமாக நோய் கண்டவனைக் கவனிக்காமலிருக்க முடியுமா?அது போலத்தான் நான் பணியாற்றுகிறேன் என்றார் அஞ்சா நெஞ்சர். பக்கத்தில் நின்று கேள்வி கேட்டச் சிறுவன் சிந்திக்கலானான். அவர் தான் பின் நாளில் கலைஞர் கருணாநிதி என அறியப் பட்டவர். திருவாரூர் நிகழ்வுக்குப் பின்னர் தோழர் பட்டுக்கோட்டை அழகிரி முழுமூச்சுடன் இந்தி எதிர்ப்புப் போர்க்களத்தின் தளபதியாக நடைப்பயணத்தை அடலேறு என வழி நடத்திச் சென்றார்.

### இந்தி எதிர்ப்புப் போர்

1-8-1938 அன்று அஞ்சா நெஞ்சன் அழகிரிசாமி தலை மையில் திருச்சியருகிலுள்ள உறையூரிலிருந்து தமிழர் படை அணிவகுத்து சென்னை நோக்கிப் பயணமாயிற்று. அந்த அணியில் மூவலூர் மூதாட்டி இராமாமிர்தம் அம் மையார், நகரதூதன் ஆசிரியர், மணவை. திருமலைச் சாமி, பாவலர் பாலசுந்தரம், திருப்பூர் மொய்தீன் ஆகியோர் முக்கியமானவர்கள்.

அழகிரிசாமி, சுயமரியாதை இயக்கத்தின் சூறாவளிப் பேச்சாளர். தனக்கென எதுவும் வேண்டாதவர். நாட்டுப் பணிக்கே தன்னை முழுதும் ஈடுபடுத்திக் கொண்டவர்.

அழகிரிக்குக் கோடையிடிப் பேச்சாளர் என்றொரு பெயரும் உண்டு. நெடிதுயர்ந்த உருவம், சுமார் 6 அடி உயரம். அதற்கேற்ற வாறு அகன்று விரிந்த மார்பு, நீண்ட நெடிய கைகள், இரணுவ நடை, எளிய வாழ்க்கை. அவர் தலைமையில் தமிழர் பெரும் படை திருச்சி உறை யூரிலிருந்து சென்னை நோக்கி நடைப் பயணம் கிளம்பிற்று.

மூவலூர் இரமாமிர்தம் அம்மையார் சமூகச் சேவைக்காகத் தன் வாழ்க்கையை அர்ப்பணித்துக் கொண்டவர்; பல நற்றொண்டுகள் ஆற்றியவர். விதவைத் திருமணங்கள் பலவற்றை நடத்தி வைத்தவர்; சுயமரியா தைக் கருத்துகளை பரப்புரையாற்றி வந்தவர்; அந்த அம்மையார் வழி நெடுக தமிழர் படைக்கான உணவி னைத் தயாரிக்கும் பணியினை ஏற்றுக்கொண்டார்.

'நகர தூதன்' ஆசிரியர் மணவை திருமலைச்சாமி அரசியல் கருத்துகளை நெஞ்சைத் தொடும் வண்ணம் எழுதும் ஆற்றல் பெற்றவர். அவரும் தமிழர் படைக்கு ஒரு தளபதியாகத் திகழ்ந்தார்.

இந்த இந்தி எதிர்ப்புப் படையினர் வழி நெடுகிலும் புரட்சிப் பாவேந்தர் எழுதிய இந்தி எதிர்ப்புப் பாடலை பாடிய வண்ணம் உற்சாகத்துடன் நடை பயின்றனர். அந்தப் பாடல்:

இந்திக்குத் தமிழ் நாட்டில் ஆதிக்கமாம் - நீங்கள்
எல்லோரும் வாருங்கள் நாட்டினரே!
செந்தமிழுக்கு தீமைவந்த பின்னும் இந்தத்
தேகம் இருந்தொரு லாபமுண்டோ?
விந்தைத் தமிழ்மொழி எங்கள் மொழி - அது
வீரத் தமிழ் மக்கள் ஆவி என்போம்!
இந்திக்குச் சலுகை தந்திடுவார் - அந்த
ஈனரைக் காறி உமிழ்ந்திடுவோம்!
இப்புவி தோன்றிய நாள் முதலாய் - எங்கள்
இன்பத் தமிழ் மொழி உண்டு கண்டீர்!
தப்பிழைத் தாரிங்கு வாழ்ந்த தில்லை - இந்தத்
தான்தோன்றி கட்கென்ன ஆணவமோ?
எப்பக்கம் வந்து புகுந்துவிடும்? - இந்தி
எத்தனைப் பட்டாளம் கூட்டிவரும்?
அற்பமென்போம் அந்த இந்திதனை - அதன்
ஆதிக்கந் தன்னைப் புதைத்திடுவோம்!
எங்கள் உடல் பொருள் ஆவியெலாம் - எங்கள்
இன்பத் தமிழ் மொழிக்கே தருவோம்!
மங்கை ஒருத்தி தரும் சுகமும் எங்கள்
மாத்தமிழுக் கீடில்லை என்றுரைப்போம்!
சிங்கமென்றே இளங் காளைகளே - மிகத்
தீவிரங் கொள்வீர் நாட்டினிலே!
பங்கம் விளைந்திடல் தாய்மொழிக்கே - உடற்
பச்சை ரத்தம் பரிமாறிடுவோம்!
தூங்குதல் போன்றது சாக்காடு! - பின்னர்
தூங்கி விழிப்பது நம் பிறப்பு!
தீங்குள்ள இந்தியை நாம் எதிர்ப்போம் - உயிர்
தித்திப்பை எண்ணிடப் போவதில்லை!
மாங்குயில் கூவிடும் பூஞ்சோலை - எமை
மாட்ட நினைக்கும் சிறைச்சாலை!
ஏங்கவிடோம் தமிழ்த் தாய்தனையே - உயிர்
இவ்வுடலை விட்டு நீங்கும் வரை!!

சென்றவிடமெல்லாம் இந்தி எதிர்ப்பாளர்களை மக்கள் வரவேற்றனர். இந்தி ஆதரவுக் காங்கிரசார் எதிர்த்தனர். கல்லடியும் சொல்லடியும் நிறையவே தந்தனர்.

எனினும் எவரும் சோர்வு பெற்றாரில்லை! பாவேந்தர் இசைப் பாட்டால் சோர்வு நீங்கினர்; ஊக்கம் உற்றனர்; உணர்வு பெற்றனர்! காணும் ஊர் தோறும் சிம்மக்குரல் அஞ்சாநெஞ்சரின் இந்தி எதிர்ப்புச் சொற்பொழிவுகள் நடைபெற்றன. கேட்ட மக்கள் உணர்ச்சிப் பிழம்பாயினர். இந்தி ஒழிக என்றும் தமிழ் வாழ்க என்றும் விண்ணதிர முழக்கமிட்டனர்.

### எதிர்ப்போர் இல்லாமலா?

சிற்றூர் சாலை ஒன்றில் இந்தி ஆதரவு காங்கிரசார் செருப்புக்களைத் தோரணமாகக் கட்டி, தமிழர் படையினருக்கு வரவேற்புத் தந்தனர்-அவமானப்படுத்தினர். அந்த ஊரிலிருந்த தமிழ் உணர்வாளர்கள், அந்தச் செருப்புத் தோரணத்தை அவிழ்த்து எறிய முனைந்தனர். அஞ்சா நெஞ்சன் அவர்களைத் தடுத்து, அந்தத் தோரணத்திற்கு முன் நின்று கொண்டு பேசத் தொடங்கினார்.

உனக்கும் எனக்கும் உரிமையான தமிழுக்கு வருகின்ற தீங்கை எதிர்த்து இந்த சுட்டெரிக்கும் வெய்யிலிலே பாதங்கள் கொப்பளிக்க நடைப்பயணம் செய்கின்றோம் தோழர்களே! நீங்கள் தோரணமாய் கட்டியிருக்கின்ற செருப்புகளை எங்கள் மீது வீசியிருந்தால் அதை எங்கள் கால்களில் அணிந்து கொண்டு நடந்திருப்போம் என்று பேசத் தொடங்கினார். கூடியிருந்த நல்லுள்ளம் கொண்ட மக்கள் அந்தத் தோரணத்தை அவிழ்க்க முனைந்தனர்..

அழகிரி அவர்களைத்தடுத்து, கட்டியவர்களே அவிழ்க் கட்டும் என்றார்.

**இறுதியாக அழகிரி, இன்னும் சிறிது காலத்தில் செருப்புத் தோரணம் கட்டியோர் இறந்திடுவர், நானும் என் இயக்கத்தினரும் இறந்திடுவோம். வருங்காலச் சந்ததிகள் எங்கள் சமாதிகளைப் பார்த்து எங்கள் மரியாதைக்குரிய வாழ்வுக்கு வழி வகுத்தத் தொண் டர்கள் என்று மலர் தூவி நன்றி செலுத்துவார்கள். ஆனால் செருப்புத் தோரணம் கட்டி எங்களை இழிவு செய்கிற தோழர்களே உங்களது சமாதிக்கு உங்கள் சந்ததியினர் கூட வரமாட்டார்கள். காக்கையும் கழுகும் தான் உங்கள் சமாதியில் எச்சமிட்டுவிட்டுப் போகும். என்று தன் சொற்பொழிவினை முடித்தார்.இதனைக் கேட்ட தோரணம் கட்டிய தோழர்கள் கண்ணீருடன் செருப்புத் தோரணத்தை அவிழ்த்து எறிந்துவிட்டு மன்னிப்புக் கேட்டனர்.அதுமட்டுமன்றி, தமிழர் படைக்குத் தேநீர் விருந்தும் நடத்தி வழியனுப்பி வைத்தனர்.**

தமிழர் படையினர் சென்ற வழியெல்லாம் உள்ள சிற்றூர்களிலெல்லாம் இந்தி எதிர்ப்பு உணர்வை விதைத்துச் சென்றனர்.

அழகிரியின் தலைமையில் நடைபெற்ற இந்தி எதிர்ப்பு நடைப்பயணம் 42 நாள்கள் தொடர்ந்தது; 1938 ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 11ஆம் நாள் சென்னை நகர் வந்தடைந்தது. 234 ஊர்களைக் கடந்து 87 பொதுக் கூட்டங்களைச் சிறப்புடன் நடத்தி அந்தப் படை வந்திருந்தது. அவர்களை வரவேற்க சென்னை திருவல்லிக்கேணி கடற்கரையில் ஓர் இலக்கத்திற்கும் மேற்பட்டப் பொதுமக்கள் திரண்டிருந்தனர். கடற்கரையில் நடந்த பாராட்டு விழாவில் தந்தை பெரியார், மறைமலையடிகள், சோமசுந்தர பாரதியார், பி.டி இராஜன், டபிள்யு.பி.ஏ. சௌந்தர பாண்டியன், அறிஞர் அண்ணா ஆகியோர் கலந்து கொண்டனர். அங்கே பேசிய தந்தை பெரியார், தமிழ்நாடு தமிழருக்கே, என்று முழங்கினார்.

வடமாநிலங்களில் இந்து முஸ்லீம் போராட்டம் நடைபெற்ற நேரத்தில், தமிழ் நாட்டில் இந்தி எதிர்ப்புப்

போராட்டம் நடை பெற்றது. இந்திய முஸ்லீம் லீக் இந்தி கட்டாயமாகப் பள்ளிகளில் புகுத்துவதைக் கண்டித்து எதிர்ப்புக் குரல் எழுப்பியது. அதனால் தமிழ் நாட்டு முஸ்லீம்கள் நீதிக்கட்சித் தலைவர்களுடன் நட்புறவு கொண்டிருந்தனர். தமிழ் நாட்டில் நடைபெற்ற நபிகள் நாயகம் விழாக்களில், பெரியார், பட்டுக்கோட்டை அழகிரிசாமி, அண்ணா, சிற்றரசு ஆகியோர் கலந்து கொண்டு உரையாற்றியுள்ளார்கள். இத்தகைய நல்லெண்ண நிகழ்வுகளே திராவிடர் இயக்கத்திற்கும் முஸ்லீம் லீக்கிற்கும் இடையே நல்லுறவு இன்றும் தொடர்வதற்குக் காரணமாயிற்று.

22 ஜூலை1945 அன்று புதுவையில் திராவிடர் கழக மாநாடு நடைபெற்றது. பெரியார், அண்ணா, அழகிரிசாமி யுடன் பல்வேறு கழகத் தலைவர்கள் பங்கேற்றனர் காலை பத்துமணிக்கு மாநாடு தொடங்கிற்று. நூற்றுக் கணக்கான எதிர்ப்பாளர்கள் ஒன்றுகூடி, திரும்பிப் போங்கள் என்று எதிர்ப்பு முழக்கங்கள் செய்திட்டனர்,

அறிஞர் அண்ணா, வந்தாரை வா என்றழைப்பது தான் தமிழர் பண்பாடு. போ என்று கூறிடக் காரணம் யாதோ? என்று தொடங்கி அரியதோர் உரையாற்றினார். பின்னர் கழகக் கொடியை ஏற்றினார்.கொடி ஏற்றப்பட்ட அடுத்த வினாடியே கொடிமரத்தை வெட்டி வீழ்த்திவிட் டார்கள் அதைத் தொடர்ந்து பெருங்கலவரம் நடைபெற்றது. மாநாட்டின் காலை நிகழ்ச்சிகள் நடைபெறவில்லை.

இதற்கிடையில் கலகம் விளைவித்தவர்கள், மாநாடு ஏற்பாடு செய்த புரட்சிப்பாவேந்தர் பாரதிதாசன், காஞ்சி கல்யாணசுந்தரம், கருணாநிதி ஆகியோரைச் சூழ்ந்து கொண்டனர்.கவிஞரையும் கல்யாணசுந்தரத்தையும் அச்சுறுத்தி அனுப்பிவிட்டனர்.ஆனால் கருணாநிதியை மட்டும் நையப்புடைத்தனர்.அவரை மயங்கிய நிலையில் சாலை ஓரத்தில் எறிந்துவிட்டுச் சென்றுவிட்டனர். காரணம், கருணாநிதி எழுதி நடித்த பழனியப்பன் அல்லது சாந்தா என்ற நாடகத்தில் சிவகுரு என்ற கதாப்பாத்திரத்தில் வந்து வசனங்கள் மூலம் கேலியும் கிண்டலும் செய்து காங்கிரசு கட்சியைக் கண்டனம் செய்வார். அதனால் காங்கிரசு கட்சியினர் பழி தீர்த்துக் கொண்டனர்.

காலையில் கலைக்கப்பட்ட மாநாடு மீண்டும் மாலை யில் கூடிற்று.அழகிரிசாமி மாநாட்டில் கலந்து கொண்டு உரையாற்றினார். அப்போது அவர், காலையில், சில கவலை தரத்தக்க நிகழ்ச்சிகள் நடந்ததாகக் கேள்விப் பட்டேன். நடந்தவைகள் நடந்தவைகளாக இருக்கட்டும். இனி நடப்பவைகள் நல்லனவாக இருக்கட்டும். இந்த வரிகள் திராவிட இயக்கத்தின் முத்திரை பதித்த வைர வரிகளாக இன்று வரையில் நிலைத்து நிற்கின்றன!

16 மே 1946 அன்று மதுரையில் கறுப்புச் சட்டை மாநாடு நடைபெற்றது திராவிடர் கழகத் தொண்டர்கள் கறுப்பு உடையில் திரண்டிருந்தனர். அம்மாநாட்டிற்கு பட்டுக்கோட்டை அழகிரிசாமி, பாவலர் பாலசுந்தரம். மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் உள்ளிட்ட தலை வர்கள் முதல் நாள் மாநாட்டில் கலந்து கொண்டனர். அண்ணா அந்த மாநாட்டிற்கு வரவில்லை.திடீரென வன்முறையாளர்கள் மாநாட்டுப் பந்தலுக்குத் தீ வைத் தனர். தொண்டர்கள் தாக்கப்பட்டனர். மாநாடு அரைகுறை யாக முடித்துக் கொள்ளப்பட்டது.

### கவர்னர் ஜெனரல் இராஜாஜிக்குக் கறுப்புக்கொடி எதிர்ப்பு

1948 ஆகஸ்டில் இந்திய கவர்னர் ஜெனரலாக இருந்த இராஜாஜி சென்னை வருவதாக இருந்தார். அவ்வமயம் அவருக்கு எதிராகக் கறுப்புக்கொடி ஆர்ப்பாட்டம் நடத்த முடிவு செய்யப்பட்டது. ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொள்ள வந்த பட்டுக்கோட்டை அழகிரி கைது செய்யப்பட்டார்.

### ஈரோடு-திராவிடர் கழக மாநாடு

1948,அக்டோபர் 23, 24 ஆகிய நாள்களில் இந்தியை எதிர்த்துத் திராவிடர் கழகத் தனி மாநில மாநாடு ஈரோட்டில் அண்ணா தலைமையில் நடைபெற்றது.

இந்த மாநாட்டில் பட்டுக்கோட்டை அஞ்சா நெஞ்சன் அழகிரிசாமியின் பேச்சு மாநாட்டில் கூடியிருந்த தொண் டர்கள் அனைவரின் நெஞ்சை உருக்கும் தன்மையில் அமைந் திருந்தது.

**தோழர்களே! இந்த மாநாட்டிற்குப் பின் சிறை செல்ல நேரிடும். எனவே,அவ்வகையில் இது கடைசி மாநாடு என்றெல்லாம் பத்திரிக்கையில் பார்த் தேன். என்னைப் பொறுத்தவரையில், என் உடல் நிலையைக் கவனித்தால், எனக்கு இதுவே கடைசி மாநாடாக இருக்குமோ என்று அஞ்சுகிறேன். என் தலைவனுக்கு என் இறுதி வணக்கத்தைத் தெரி வித்துக் கொள்ளவே இன்று இங்கு வந்தேன். என் உடல் நிலை மிகவும் மோசமாகி இருக்கிறது. நோயினால் படுத்த படுக்கையாக இருந்து வந்தேன். இனி என் உடல் தேறும் வரை நான் இயக்கப் பணியில் ஈடுபட முடியாத நிலையில் இருக்கின்றேன். இது எனக்கு மிகவும் வேதனையைத் தருகிறது, என்றார்.**

அழகிரிக்கு அதுவே கடைசி மாநாடாக அமைந்து விட்டது.நோயில் விழுந்தவர் மீண்டு வரவில்லை.

ஈரோடு மாநாடு நடைபெற்று முடிவுற்றதும் அண்ணா, அழகிரியைக் காப்பாற்றும் முயற்சிகளில் ஈடுபட்டார். சென் னைக்கு அவரை அழைத்து வந்து தாம்பரம் என்புருக்கு நோய் மருத்துவமனையில் சேர்த்து மருத்துவம் செய்திட ஏற்பாடு செய்தார். பொதுக்கூட்டங்களுக்குத் தன்னை அழைக்கும் தோழர்கள், அழகிரியின் மருத்துவச் சிகிச்சைக்காக உரூபாய் நூறு அழகிரியின் குடும்பத்திற்கு காசோலை அனுப்பிவிட்டு, அந்த இரசீதை தனக்கு அனுப்பிவைத்தால்தான் கூட்டங்களுக்கு ஒப்புக்கொள்வ

தாக அண்ணா அறிவித்தார். அதற்கேற்பத் தோழர்கள் பலர் அழகிரியின் குடும்பத்திற்கு நிதி அனுப்பினர். ஆயினும், தாம்பரம் மருத்துவமனை அழகிரியைக் கைவிட்டது; இயற்கையும் அவரைக் கைவிட்டுவிட்டது அவரைப்பற்றிய காச நோய் 28-3-1949 அன்று நம்மிடமிருந்து அவரின் உயிரைப் பறித்துவிட்டது!


**தந்தை பெரியார் இரங்கல்**

'நண்பர் அழகிரிசாமி முடிவு எய்தியது பற்றி நான் மிகவும் துக்கப்படுகிறேன்.30 ஆண்டு கால நண்பரும், மனப்பூர்வமாக நிபந்தனை இன்றி நமது கொள்கை களைப் பின்பற்றிவருகிற ஒரு கூட்டுப் பணியாளருமாவார். 30 ஆண்டுகளில் என் கொள்கை, திட்டத்தில், ஆலோசனையில் தயக்கம் கொள்ளாமல் நம்பிக்கை வைத்துத் தொண்டாற்றியவர். அவரது முழு வாழ்க்கையிலும் இயக்கத்தொண்டு தவிர வேறு எதிலும் ஈடுபட்டதில்லை. விளையாட்டுக்குக் கூடக் கொள்கையை விலை பேசி இருக்க மாட்டார்'. என்று இரங்கல் செய்தி விடுத்தார் பெரியார்.

**திராவிடர் கழக வரலாறு தந்தை பெரியாரின் தலைமையில் கல்லடியும் சொல்லடியும் பெற்ற வீர மறவர்களைக் கொண்டதாகும்! இந்த வீரர் வரிசையில் வந்த முதல் சுயமரியாதைப் போராளி பட்டுக்கோட்டை அஞ்சா நெஞ்சன் அழகிரிசாமி! அவர் வழி நின்று எந்நாளும் சுயமரியாதை காப்போம்!**

**பட்டுக்கோட்டை அழகிரிசாமி புகழ் வாழ்க!** ●

## நீண்ட பயணம் சுந்தரம் மறைவு



போருக்கு எதிராக இரத்தம் சிந்திய தோழர் நீண்ட பயணம் சுந்தரம் காதல் திருமணத்தை போலிஸ் மிரட்டலை மீறி நடத்திய நீண்ட பயணம் சுந்தரம் சீன புரட்சிகர இலக்கியங்களை, படைப்புகளை தமிழுக்கு முதன் முதலின் நீண்ட பயணம் இதழின் மூலம் அறிமுகம் செய்தவர் நீண்ட பயணம் சுந்தரம் போராட்ட களத்தில் முன் நின்று போராடி இரத்தம் சிந்திய தோழர் போருக்கு எதிராக இரத்தம் சிந்திய தோழர் நீண்ட பயணம் சுந்தரம்.

ஓட்டல் தொழிலாளியாக வாழ்க்கையை தொடங்கி ஒன்றுபட்ட கம்யுனிஸ்ட் கட்சியில் 1952 முதல் நக்சல்பாரி கட்சி வரை இயங்கி வரும் இன்று 90 வயதான தோழர் நீண்ட பயணம் சுந்தரம் இயற்கை எய்தினார் செங்கல்பட்டில் நடந்த தோழரின் இறுதி ஊர்வலம் நினைவு அஞ்சலி கூட்டத்தில் தோழர்கள் பேராசிரியர் எழுத்தாளர் கி.நடராசன், காலன் துரை, சிலப்பதிகாரம், நினைவு உரைகள்.

- செய்தி : **கி.நடராசன்** முகநூல் பதிவு

# தன்னாட்சிக் கழகம் நடத்திய தன்னாட்சி மாநாடு

**த**ன்னாட்சி மாநாடு மற்றும் அறிஞர் அண்ணா 50-ஆம் நினைவு நாள் நிகழ்ச்சி கடந்த பிப்ரவரி 3, 2019 ஞாயிறு அன்று சென்னை, சேப்பாக்கம், சுவாமி சிவானந்தா சாலையில் உள்ள அண்ணா அரங்கத்தில் (பொதிகை தொலைக்காட்சி நிலையம் அருகில்) புதிய பயணம் ஆசிரியர் த.ம.பிரகாஷ் தலைமையில் நடைபெற்றது.

தன்னாட்சிக் கழகத்தைச் சேர்ந்த வே. தாண்டவமூர்த்தி வரவேற்புரை ஆற்றினார். பெ. பழனி முன்னிலை வகித்தார். கோவை, மொழிப் போராட்ட வீரர் இரா. இராமசாமி மாநாட்டு கொடியேற்றினார். குமரி, எல்லைப்போராட்ட ஈகி கொடிக்கால் ஷேக் அப்துல்லா ஈகியர் நினைவுச்சுடர் ஏற்றத்தையும், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் திருச்சி கே. சௌந்தரராஜன் அறிஞர் அண்ணா படத்தைத் திறந்து வைத்து உரையாற்றினர்.

கண. குறிஞ்சி, மா. இராதாகிருட்டிணன், பேரா. அ. இராமசாமி, காஞ்சி அமுதன், சு. வெங்கடேசன், கா. அய்யாநாதன், வழ. பகத்சிங், பா.ச. பாலசிங் ஆகியோர் முதல் அமர்விலும், சுதா காந்தி, வசுமதி, மங்கையர்செல்வன், கிரேஸ் பானு ஆகியோர் இரண்டாவது அமர்விலும் அரங்க விவாதங்களில் பங்கேற்றனர்.

தமிழகப் பொருளாதாரம் : பார்வைகள் தொடர்பாக இரா.சிவராஜா, சுரேஷ் சம்பந்தம், கே. பாலச்சந்திரன் ஆகியோர் உரையாற்றினார். உலக அரங்கில் தமிழர்கள் என்ற தலைப்பில் முனைவர் விஜய் அசோகன், ஜீவா ஆகியோர் உரையாற்றினார். அ. கணேசமூர்த்தி, முனைவர் தீபக் பவார், முனைவர் ஜோகா சிங், முனைவர் கோர்கோ சாட்டர்ஜீ, ஆனந்த். ஜி ஆகியோர் கூட்டாட்சி அரங்கில் பங்கேற்றனர்.

அற்புதம் அம்மாள், ரேவதி நாகராஜன், இளவரசி, தி. பரமேஸ்வரி, ஆசுபள் ஆகியோர் மொழிப்போர் தியாகிகளுக்கும் எல்லைப் போராட்டத் தியாகிகளுக்கும் நன்றிச் சிறப்புச் செய்தனர். எல். கணேசன், இரா. இராமசாமி, தியானேஸ்வரன், மறவர் கோ. ஜெயராமன், பா. செயப்பிரகாசம், ரகுமான்கான், மா.செல்வராசன், பொன்னிறைவன், நந்திவர்மன், இராஜா முகம்மது, கொடிக்கால் ஷேக் அப்துல்லா மற்றும் பலர் சிறப்பு பெற்றனர்.

அறிஞர் அண்ணாவின் நூல்களான நீதிதேவன் மயக்கம், ஆரிய மாயை, தீ பரவட்டும் மற்றும் Carry on, but remember! Selected Speeches of Anna போன்றவற்றை ரவிக்குமார், பா. செயப்பிரகாசம், ஆளூர் ஷாநவாஸ், சிவ. இளங்கோ ஆகியோர் வெளியிட்டு பெற்றனர். மகிழினி. வேலு. பாக்கியராஜ், ஆழி செந்தில்நாதன், செல்வி, த.தங்கபாண்டியன், வே.ஆனைமுத்து, ஆ.இராசா, கே.பாலகிருட்டிணன், முனைவர் தொல். திருமாவளவன், தி. வேல்முருகன், சி. மகேந்திரன், முனைவர் தரம்வீர காந்தி, பேரா.மு.ஹி.ஜவாஹிருல்லா, தியாகு, அரங்க. குணசேகரன், கோவை இராமகிருட்டிணன், வழக்கறிஞர் அருள்மொழி, விடுதலை இராஜேந்திரன், சுப. உதயகுமாரன், அ.வியனரசு, கே.எம். சரீப், குடந்தை அரசன், வ.கௌதமன், கோ.சுந்தர்ராஜன், ஜெ.சிதம்பரநாதன், மு.களஞ்சியம், மருத்துவர் நா. எழிலன், செ. நாகல்சாமி ஆகியோர் மாநாட்டுச் சிறப்பு ரைகள் வழங்கினர்.

கார்த்தி நன்றியுரை கூற மாநாடு இனிதே நிறைவு பெற்றது.

# பெரியாரின் வாழ்க்கை வரலாற்று நூலைப் பதிப்பிக்க

# நிதி அளித்தோருக்கு நன்றிகள்!

பேரன்பிற்கினிய அய்யா அவர்களுக்கு வணக்கம்.

தாங்கள் எழுதும் பகுத்தறிவுப் பகலவன் தந்தை பெரியாரின் வாழ்க்கை வரலாற்று நூலைப் பதிப்பித்து வெளியிடுவதற்கு வாய்ப்பாக, ரூ.55000/- நிதியாக, 41 ஆண்டுகளாகத் தொடர்ந்து தொய்வில்லாமல் பகுத்தறிவு, தமிழுணர்வை ஊட்டி வரும் பம்மல் இலக்கிய மன்ற நண்பர்களும், கடந்த மூன்றாண்டுகளாகச் செயல்பட்டுவரும் பகுத்தறிவாளர் பேரவை நண்பர்களும் இணைந்து திரட்டி, மார்க்சியப் பெரியாரிய கட்சிக்கு அளித்துள்ளோம்.

**அந்த நிதியளித்தோர் பட்டியல்**

| | | | |
|---|---|---|---|
| 1. | பொன். இராமசந்திரன் | ரூ. | 5,200 |
| 2. | வை. பார்த்திபன் | ரூ. | 5,000 |
| 3. | புலவர் சி. முத்தையா | ரூ. | 5,000 |
| 4. | இ. வாமணன் | ரூ. | 5,000 |
| 5. | எஸ்.எஸ். மணியன் | ரூ. | 3,000 |
| 6. | நீ. வாசுதேவன் | ரூ. | 3,000 |
| 7. | வி. மணிகண்டன் | ரூ. | 2,500 |
| 8. | சுதா முருகேசன் | ரூ. | 2,000 |
| 9. | பி. சங்கரன் | ரூ. | 2,000 |
| 10. | விவேகானந்தன் ஜோதி | ரூ. | 1,000 |
| 11. | புலவர் ஈ. ஆறுமுகம் | ரூ. | 1,000 |
| 12. | க. வீராசாமி | ரூ. | 1,000 |
| 13. | கோவி. பழனி | ரூ. | 1,000 |
| 14. | கை. நடராசன் | ரூ. | 1,000 |
| 15. | சூ. ஜெரோம் டேவிட்ராஜ் | ரூ. | 1,000 |
| 16. | புலவர் த. வேலு | ரூ. | 1,000 |
| 17. | திருமதி. எஸ். சரசு | ரூ. | 1,000 |
| 18. | பொன். லோகநாதன் | ரூ. | 1,000 |
| 19. | A.J. ஆரோக்கிய ஜெயசாமி | ரூ. | 1,000 |
| 20. | ஆர். வீரமணி | ரூ. | 1,000 |
| 21. | ஜெ. மகாதேவன் | ரூ. | 1,000 |
| 22. | புலவர் பாண்டியன் | ரூ. | 1,000 |
| 23. | தி.க. லோகநாதன் | ரூ. | 1,000 |
| 24. | மா. வரதன் | ரூ. | 1,000 |
| 25. | கபை | ரூ. | 1,000 |
| 26. | ஏ.வி. கிரி | ரூ. | 1,000 |
| 27. | ஜெய்சங்கர் | ரூ. | 1,000 |
| 28. | வி. நாகராஜன் | ரூ. | 500 |
| 29. | பொன். செல்வராசு | ரூ. | 500 |
| 30. | து. ஜெயராமன் | ரூ. | 500 |
| 31. | வே. மகாதேவன் | ரூ. | 500 |
| 32. | க. முருகேசன் | ரூ. | 500 |
| 33. | வி.ஜி. அசோகன் | ரூ. | 500 |
| 34. | வெ. பஞ்சாபகேசன் | ரூ. | 500 |
| 35. | கோ. லோகநாதன் | ரூ. | 500 |
| 36. | ந. இராமசந்திரன் | ரூ. | 300 |
| | மொத்தம் | ரூ. | 55,000 |

**பொன். இராமச்சந்திரன்,** 6-2-2019

# தொல்காப்பியர் அறக்கட்டளைச் சொற்பொழிவு



வே.ஆனைமுத்து சிறப்புரை : சென்னைப் பல்கலைக் கழகத்தில் தமிழ் இலக்கியத் துறையும் மொழித் துறையும் இணைந்து தொல்காப்பியர் அறக்கட்டளைச் சொற்பொழிவு 4.2.19 முற்பகல் நிகழ்வை நடத்தினர்.

முனைவர் ஒப்பில்லா மதிவாணன் நோக்கவுரை ஆற்றினார். சென்னைப் பல்கலைக்கழக மேனாள் துணைவேந்தர் முனைவர் பொற்கோ அவர்கள் தலைமை உரையாற்றினார். ‘‘தொல்காப்பியத்தில் தமிழர் வாழ் வியல்’’ என்ற தலைப்பில் தோழர் வே. ஆனைமுத்து அவர்கள் சிறப்புரையாற்றினார். இணைப் பேராசிரியர் ஆ.ஏகாம்பரம் நன்றியுரையுடன் நிகழ்வு நிறைவுற்றது.

# தமிழ்நாட்டின் தன்னாட்சி மாநாடு

அண்ணாவின் 50 ஆம் நினைவுநாளில் தமிழ் நாட்டின் தன்னாட்சிக்கான இயக்கத்தைத் தொடங்கியது தன்னாட்சித் தமிழகம் 3, 2019 நவீன தமிழகத்தின் சிற்பி அறிஞர் அண்ணாவின் 50 ஆம் நினைவு நாளில் தன்னாட்சித் தமிழகம் இயக்கம், தமிழ்நாட்டுக்கான தன்னாட்சி உரிமை கோரி தன்னாட்சி மாநாட்டை சென்னையில் நடத்தியது. பல்வேறு அரசியல் கட்சிகள், இயக்கங்கள், தனிநபர்களின் கூட்டியக்கமான தன் னாட்சித் தமிழகம் தமிழ்நாட்டுக்கு அரசியல்சாசன ரீதியில் தன்னாட்சி வழங்கவேண்டும் என்று கோரியும் இந்திய அரசியல்சாசனத்தை கூட்டாட்சிக்கான சாசனமாக மாற்ற புதிய அரசியல்சாசன நிர்ணய அவையை அமைக்க வேண்டும் என்று கோரி தீர்மானங்களை நிறைவேற்றி யிருக்கிறது.

இந்தியாவின் ஆட்சி மொழிகளில் ஒன்றாக தமிழை ஆக்கவேண்டும், தமிழ்நாட்டிலுள்ள மத்திய அரசு வேலைகளில் 80 சதவீதத்தை தமிழ்நாட்டு மக்களுக்கே அளிக்கவேண்டும், தமிழ்நாட்டின் இயற்கை வளங்களை பன்னாட்டு, அனைத்திந்திய கார்ப்பரேட் நிறுவனங்கள் சுரண்டுவதை தடுத்துநிறுத்தவேண்டும், பேரறிவாளன் உள்பட எழுவரை உடனே விடுதலை செய்யவேண்டும், இலங்கை தொடர்பான மத்திய அரசின் கொள்கைகள் வகுக்கப்படும்போது மத்திய அரசு தமிழ்நாட்டை கலந்தாலோசிக்கும் நெறிமுறை ஒன்று உருவாக்கப்பட வேண்டும் என்பது உள்பட பல்வேறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

அண்ணாவின் கனவான மாநில சுயாட்சியின் நவீன வடிவமாக தமிழ்நாட்டு தன்னாட்சிக் கோரிக்கைக்காக புதிய இயக்கம் தொடங்கப்படும் என்று தன்னாட்சித் தமிழகம் ஒருங்கிணைப்பாளர் ஆழி செந்தில்நாதன் கூறினார்.

எல்லா அதிகாரங்களையும் மத்தியில் மோடி அரசு குவித்துக்கொண்டு வருவதை மாநாட்டில் பேசிய தலைவர்கள் கடுமையாக கண்டித்தார்கள். திமுகவின் கொள்கைப் பரப்புச் செயலர் ஆ ராசா, சிபிஎம் மாநில பொதுச்செயலாளர் கே. பாலகிருஷ்ணன், பெரியாரிய தலைவர் வே ஆனைமுத்து, விசிக தலைவர் தொல் திருமாவளவன், தவாக தலைவர் தி வேல்முருகன், மதிமுக முன்னாள் எம்பி அ கணேசமூர்த்தி, திராவிடர் கழகம் அ, அருள்மொழி, மமக தலைவர் பேரா. எம் எச் ஜவாஹிருல்லா, பச்சைத் தமிழகம் கட்சி தலைவர் சுப உதயகுமாரன். தபெதிக தலைவர் கோவை ராம கிருஷ்ணன், தமஜக தலைவர் கே எம் ஷரீப், தமிழ்த் தேசம் ஆசிரியர் தியாகு உள்ளிட்ட பல கட்சிகள், அமைப்புகளின் தலைவர்கள் பேசினார்கள்.




கூட்டாட்சி அரங்கத்தில் வெளிமாநிலங்களிலிருந்து வருகை தந்த பிரதிநிதிகள் பேசினார்கள். பஞ்சாபிலிருந்து பாட்டியாலா தொகுதி எம்பி தரம்வீர காந்தி, மொழியுரிமை இயக்கமான கிளியர் அமைப்பின் தலைவர் பேரா. ஜோகா சிங், வங்காளத்திலிருந்து முனைவர் கோர்கோ சாட்டர்ஜி, மகாராஷ்டிரத்திலிருந்து முனைவர் தீபக் பவார், கர்நாடகத்திலிருந்து ஆனந்த் ஆகியோர் இந்தியாவை உண்மையான கூட்டரசாக ஆக்கவேண்டும் என்று வலியுறுத்தி பேசினார்கள்.

1956 தமிழ்நாடு எல்லைக் காப்பு போராட்டத்தில் ஈடுபட்ட கொடிக்கால் ஷேக் அப்துல்லா, 1965 இல் தமிழ்நாட்டில் மொழிப்போராட்டத்தில் ஈடுபட்ட தலைவர்களும் தளபதிகளுமான திருவாளர்கள் எல் கணேசன், இரா. இராமசாமி, தயானேஸ்வரன், மறவர்கோ, ஜெயராமன், ரகுமான்கான், இராஜா முகமது, நந்திவர்மன் உள்ளிட்டோருக்கும் இளைய தலைமுறை யினரால் கௌரவம் செய்யப்பட்டது. இரட்டைமலை சீனிவானார் பெயர்த்தி ரேவதி நாகராஜன், அண்ணாவின் பெயர்த்தி இளவரசி முத்துக்குமார், ம.பொ.சி.யின் பெயர்த்தி பரமேஸ்வரி, வே ஆனைமுத்துவின் பெயர்த்தி ஆசுபள் ஆகியோர் அவர்களுக்கு கௌரவம் செலுத்தி னார்கள்.

அண்ணாவின் நீதிதேவன் மயக்கம் நாடகம் நடத்தப்பட்டதுடன் அது நூலாகவும் வெளியிடப்பட்டது. அண்ணாவின் மாநிலங்களவை பேச்சுகள் என்ற தலைப்பில் ஆங்கில நூலாகவும் வெளியிடப்பட்டது.

நிகழ்ச்சியில் தொழில்துறையாளர்கள் சுரேஷ் சம்பந்தம், சிவராஜா இராமநாதன், உலகத் தமிழர் சார்பில் விஜய் அசோகன், ஜீவா ஆகியோர் கலந்து கொண்டார்கள். மேலும் பல்வேறு அமைப்புகள், கட்சிகளின் தலைவர்களும் கலந்துகொண்டு பேசினார்கள்.

தொடர்புக்கு : **ஆழி செந்தில்நாதன் 9884155289**

# நீர் மேலாண்மையில் நிலை தடுமாறும் தமிழகம்

தண்ணீர்...

ஐம்பெரும் பூதங்களில் ஒன்று.

இந்தப் பூமியில் திரவநிலை, திடநிலை, வாயுநிலை ஆகிய மூன்று வடிவங்களில் இருக்கக் கூடிய ஒரே பொருள்.

தண்ணீர் இல்லாவிட்டால் பூமிப்பந்து பாலைவனம் தான். ஜீவராசிகளுக்கு இந்த மண்ணில் இடம் இல் லாமல் போய்விடும். அதனால்தான் "நீரின்றி அமை யாது உலகு" என்றார், வள்ளுவர்.

பருவநிலை மாற்றத்தால் மழை வளம் குறைந்து வருகிறது.

உப்பு விற்கச் செல்லும் போது மழை பெய்வதும், மாவு விற்கச் செல்லும் போது காற்றடிப்பதும் போல பல சமயங்களில் இயற்கை மனிதனுக்கு எதிராக திரும்பி விடுகிறது. மழைக்காக ஏங்கும் போது வெயில் வாட்டி வதைப்பதும்; அறுவடை சமயத்தில் மழை வெளுத்து வாங்குவதும் வாடிக்கையாகிவிட்டது.

கேரளாவில் கடந்த ஆண்டில் தென்மேற்குப் பருவ மழை வரலாறு காணாத அளவுக்குக் கொட்டித் தீர்த்தது. கர்நாடகத்திலும் வெளுத்து வாங்கியது. இதனால்காவிரி அன்னை கரை புரண்டாள்; டெல்டா குளிர்ந்தது.

வடகிழக்குப் பருவமழை 12 சதவீதம் அதிகம் பெய்யும் என்று வானிலை இலாகா மையம் ஜோசியம் சொன்னது. ஆனால் மழை காலை வாறியது. ஏரி, குளங்கள் வானம் பார்த்த பூமியாக வறண்டு கிடக் கின்றன.

பருவம் தவறிய மழை, வறட்சி, வெள்ளம் ஆகிய வற்றால் வேளாண்மை பெரிதும் பாதிக்கப்பட்டு, விவசாயிகள் வேதனைக்கு உள்ளாகிறார்கள்.

இயற்கை கண்ணாமூச்சி காட்டும் போது அதற்கேற்ப நம்மை நாம் தயார்படுத்திக் கொண்டால் மட்டுமே, இழப்புகளில் இருந்து தப்பிக்க முடியும்,

மழை பெய்யும் சமயங்களில் கிடைக்கும் நீரை வீணாக்காமல் சேமித்து வைத்துக் கொண்டால்தான் விவசாயத்தைக் காப்பாற்ற முடியும்; குடிநீர் பஞ்சத்தை யும் தவிர்க்க முடியும்.

ஆனால் அப்படி இதுவரை செய்து இருக்கிறோமா?

'மழை நீர் உயிர் நீர்'; 'மழை நீரைச் சேமிப்போம்' என்றெல்லாம் எழுதி வைத்தால் மட்டும் போதாது.

ஏட்டுச் சுரைக்காய் கறிக்கு உதவாது. செயலில் காட்ட வேண்டும்.

நீர் மேலாண்மையில் தமிழகம் போதிய கவனம் செலுத்தாததால் ஏற்பட்ட பாதிப்புகள் - இழப்புகள் பற்றியும், இனிவரும் காலங்களில் அவற்றை தவிர்க்க என் னென்ன செய்ய வேண்டும் என்பது பற்றியும் விளங்கு கிறார், எழுத்தாளர் சாவித்திரி கண்ணன். அதாவது இதுவரை செய்யத் தவறியதையும், இனி செய்ய வேண்டியதையும் அவர் சுட்டிக்காட்டுகிறார்.

அவர் சொல்வதைப் பார்ப்போம்.....

மன்னர் ஆட்சிக் காலங்களில் நீர் வள மேலாண் மையில் நிகரற்று திகழ்ந்த தேசம் தமிழகம். காவிரியில் கரிகாலன் கட்டிய கல்லணை, வைகையில் செழியன் சேந்தன் கட்டிய அரிகேசரி மதகு, தாமிரபரணியில் பாண்டியர்கள் கட்டிய மேலழகியான் தொடங்கி மருதூர் வரையிலான 7 அணைகள், மதுராந்தக சோழனால் உருவாக்கப்பட்ட மதுராந்தகம் ஏரி... என்று பட்டியல் போட்டால் பக்கங்கள் போதாது என்று சொல்கின்ற அளவுக்கு முற்காலத்தில் நீர் மேலாண்மையில் பெரும் அக்கறை காட்டிய பாரம்பரியத்தைக் கொண்டவர்கள் தமிழர்கள்.

இவை மட்டுமல்ல, அக்காலத்தில் கோட்டைகள் கட்டினால், கூடவே அகழிகள் கட்டப்பட்டன. கோவில்கள் கட்டப்பட்டால் கூடவே குளங்களை ஏற்படுத்துவார்கள். அக்காலத்தில் எந்தக் குடியிருப்பு பகுதியுமே நீர் பாது காப்பு அரண் இல்லாமல் உருவாக்கப்பட்டதே இல்லை. ஏரிகள், குளங்கள், கண்மாய்கள், தடாகங்கள், பொய் கைகள், வாவிகள், கேணிகள்... என அவை தண்ணீரின் அளவிற்கு ஏற்பவும், வாழும் பிரதேசத்தின் வழக்கிற்கு ஏற்பவும் அழைக்கப்பட்டன.

மழைக் காலங்களில் இவற்றில் தண்ணீர் முறையாக வந்து விழும் வகையில் மிகத் துல்லியமாக இடத் தேர்வையும் அவர்கள் சிறப்பாக அறிந்திருந்தனர். அதிக மழைப்பொழிவு காலங்களில் ஒரு ஊரின் குளத்திலோ, ஏரியிலோ நிறைந்து வழியும் தண்ணீர் அடுத்தடுத்த ஊர்களுக்குத் தொடர்ச்சியாகச் செல்லும் வகையிலும் நீர் மேலாண்மை செயல்படுத்தப்பட்டு இருந்தது. இவற்றையெல்லாம் கேள்விப்படும் போது நமக்கு பெருமூச்சுதான் வருகிறது.

**சூறையாடப்படும் தண்ணீர் வங்கிகள்**

இந்நாளின் விஞ்ஞான வளர்ச்சியும், நுகர்வு வெறி கலாச்சாரமும் விழுங்கிவிட்டதோ நமது பொது நலன் சார்ந்த அறிவையும், உணர்வையும். நம் முன்னோர் கள் காலத்தில் உருவாக்கி நமக்கு அளிக்கப்பட்ட நிறைய நீர் ஆதாரங்களை நாம் இன்று நிர்மூலமாக்கிக்

கொண்டு வருகிறோம். மக்கள் தொகையோ நாளும் அதிகரித்துக் கொண்டு இருக்கிறது. ஆனால், தண்ணீர் வரத்தோ நாளுக்கு நாள் குறைந்து கொண்டு வருகிறது. இதற்கு முக்கியக் காரணம் தமிழகத்தின் ஆற்றுப்படு கைகளில் சூறையாடப்பட்டுக் கொண்டிருக்கும் மண்வளம் தான். தமிழகத்தில் மொத்தமுள்ள 34 ஆற்றுப்படு கைகளும் இன்று பள்ளத்தாக்குகளாகி வருகின்றன. இதுவரை அள்ளப்பட்டுள்ள மணல் இழப்பால் நாம் நமக்குக் கிடைக்கும் நீரில் சுமார் 15 முதல் 20 சத வீதத்தை தேக்க வழியின்றி, இழந்து இருக்கிறோம். ஏனெனில், ஆற்றோர மணல் படுகைகள் என்பவை தண்ணீர் சேமிக்கும் வங்கிகள் ஆகும்.

**அணைகளைக் கட்டும் ஆர்வம் நமக்கில்லையா?**

நாடு சுதந்தரம் பெற்ற பிறகு தமிழகத்தில் முதல் இருபது ஆண்டுகளில் கட்டப்பட்ட சிறுவாணி, ஆழியாறு, பரம்பிக்குளம், மணிமுத்தாறு, கிருஷ்ணகிரி, வைகை, சாத்தனூர் ஆகிய அணை திட்டங்களைத் தவிர, பிற்காலத்தில் பெரிய அணைகள் கட்டப்படவில்லை.

ஆனால் சிறிய அளவில் நீர் தேக்கங்கள், அணைகள் போன்றவை கட்டப்பட்டன என்றாலும், அவை பெருகி வரும் தண்ணீர் தேவைக்குப் போதுமானதாக இல்லை. மேட்டூர் அணை ஆங்கிலேயர் ஆட்சியில் நமக்குக் கிடைத்தப் பெருங்கொடை ஆகும். ஆனால், அதன் பின்னர் அதற்கு இணையாகவோ அல்லது அதைவிட பெரிதாகவோ எந்த அணையும் கட்டவில்லை.

ஆனால், கர்நாடகம் தொடர்ந்து அணைகளைக் கட்டிய வண்ணம் உள்ளது. காவிரி கர்நாடகத்தில் 320 கிலோ மீட்டர் தூரம் தான் பாய்கிறது. ஆனால் கர்நாடகத்தில் அதில் 58 அணைகள் கட்டப்பட்டு இருக் கின்றன. தமிழகத்திலோ 416 கிலோ மீட்டர் பயணிக் கிறது. ஆனால், நாம் கட்டியுள்ள அணைகளோ 39 தான். குறிப்பாகக் கீழணைக்கு மேல் நீரைத் தேக்க 7 கதவணைகள் கட்ட வேண்டும். அப்படி கட்டப்பட்டால் கடலுக்குச் சென்று விரயமாகும் 50 டி.எம்.சி. தண் ணீரை விவசாயத்திற்குத் திருப்பிவிடலாம்.

இதேபோல், தென்பெண்ணை ஆற்றில் இருந்து கடலூர் தாழங்குப்பத்திற்கு வரும் சுமார் 32 டி.எம்.சி. தண்ணீரும் வெகு காலமாக கடலில் சென்று சேர்கிறது. இங்கும் ஒரு அணை கண்டிப்பாகத் தேவை.

**தூர்வாரப்படாத நீர் நிலைகள்**

மேட்டூர் அணையின் கொள்ளளவில் மூன்றில் ஒரு பங்கை இன்று வண்டல்மண் ஆக்கிரமித்து உள்ளது. காரணம் கடந்த 50 ஆண்டுகளுக்கும் மேலாகத் தண்ணீர் வரத்தால் சேர்ந்த வண்டல் மண் அப்புறப் படுத்தப்படவில்லை. இதனால் காவேரியில் நமக்கு தண்ணீர் கிடைக்கும் காலங்களில் நம்மால் தண் ணீரை முறையாகச் சேமிக்க முடிவது இல்லை.

இந்த வண்டல் மண் முறையாகத் தூர்வாரப்படு மானால், அது நமது வேளாண்மைக்கும் சில வருட கட்டுமான தேவைக்கும் பேருதவியாக இருக்கும். சமீப காலத்தில் ஒரு சிறிய முயற்சி மேற்கொள்ளப்பட்டது. ஆனால், ஏனோ அது தொடரவில்லை. இதே நிலை தான் தமிழகத்தில் உள்ள அனைத்து அணைகளிலும், நீர் தேக்கங்களிலும் நிலவுகிறது.

அணைகள் முறையாக தூர்வாரப்படுமானால் முப்பலன்கள் கிடைக்கும். தமிழக ஆறுகளில் கட்டு மானத்திற்காகக் கொள்ளைப் போகும் மணல் தடுக் கப்படும். நீர் நிலைகளுக்குத் தண்ணீர் வரத்து அதிகரிக்கும். விவசாய நிலங்களுக்கு நல்ல வண்டல் மண் கிடைத்து பயிர்கள் செழித்தோங்கும்.

**வரமே சாபமாகிறதா?**

காவிரியில் கர்நாடகம் தொடர்ந்து அணைகள் கட்டி தடுத்து வருகிறது. முல்லை பெரியாறுக்குக் கேரளம் முட்டுக்கட்டை போட்ட வண்ணம் உள்ளது. ஆந்தி ராவோ பாலாற்றைப் படிப்படியாகச் சிறைபிடித்து வருகிறது. நாம் இதற்காக சட்டப் போராட்டங்களும், வீதிப் போராட் டங்களும் நடத்துவதில் மட்டுமே கவனம் செலுத்திய வகையில், நமக்கு இயற்கையின் கொடையாகக் கிடைத்து வரும் தண்ணீரைச் சேமிக்கத் தவறிவிட்டோம்.

தமிழகத்தில் ஆண்டுக்குச் சராசரியாக சுமார் 925 மி.மீ. மழைப்பொழிவு உள்ளது. உள்ளபடியே இது ஒரு வரப்பிரசாதம்தான். ஏனெனில், உலக சராசரி மழைப்பொழிவே சுமார் 800 மி.மீ. தான். ஆனால், இப்படி கிடைக்கும் மழையெனும் வரத்தை நாம் சாப மாக்கிவிடுகிறோம் என்பது தான் கொடுமை.

கனமழை காலங்களில் நாம் சுமார் 260 டி.எம்.சி. க்கும் அதிகமான தண்ணீரைக் கடலுக்குத் தாரை வார்த்துக் கொண்டுள்ளோம். இதை விரிவாகச் சொல்ல வேண்டுமானால், காவிரி நீர்ப்பிடிப்பு பகுதியில் கர்நாடகம் நமக்குத் தண்ணீர் தராவிட்டாலும் கூட, நாம் மழை மூலமாகப் பெறும் தண்ணீரின் அளவு சுமார் 230 டி.எம்.சி. ஆகும்.

இதற்கும்மேல், நமக்கு கடைசியில் வந்த தீர்ப்பின் படி கர்நாடகம் 177.25 டி.எம்.சி. தருகிறது. ஆனால், நாம் ஒவ்வொரு ஆண்டும் காவிரியில் சுமார் 90 முதல் 100 டி.எம்.சி. தண்ணீரைத் தேக்க வழியின்றி கடலுக்குள் விட்டுவிடுகிறோம். சென்ற ஆண்டு அதீத மழைப்பொழிவின் போது மட்டுமே சுமார் 170 டிஎம்.சி. காவிரி நீர் கடலுக்குச் சென்றது.

தமிழ்நாட்டில் உள்ள ஒரே பெரிய வடிநிலமான காவிரியை தவிர்த்து, நடுத்தர வடிநிலங்கள் என குறிக்கப்படும் பாலாறு, பெண்ணையாறு, வைகை, தாமிரபரணி, கொசஸ்தலையாறு, மணிமுத்தாறு

போன்ற 11 ஆற்றோரப் படுகைகளின் மூலமாக நமக்குக் கிடைக்கும் தண்ணீர் சுமார் 285 டி.எம்.சி. வராக நதி, வெள்ளாறு, அக்கினியாறு, அடையாறு போன்ற 10 சிறிய ஆற்றோர வடிநிலங்கள் மூலமாகக் கிடைக்கும் தண்ணீர் 44 டி.எம்.சி.

ஆனால், இவை தவிர்த்து தமிழகத்தில் ஒவ்வொரு ஏரி, குளங்கள் என மொத்தம் உள்ள 39,202 நீர்ப் பிடிப்பு தளங்களின் மூலமாகக் கிடைக்க வேண்டிய தண்ணீர் 390 டி.எம்.சி. இப்படியாக நமக்குப் பல வழிமுறைகளின் மூலமாகக் கிடைத்துவரும் விலை மதிப்பில்லா தண்ணீரில் சரிபாதிக்கும் அதிகமாக நாம் பயன்படுத்தத் தவறி வீணாகிறது என்பதுதான் சொல்லொணா வேதனையாகும்.

**நிதியின்றி தடுமாறும் நீர் மேலாண்மை**

தமிழகம் நீர்வள மேலாண்மைக்குப் போதுமான நிதி ஒதுக்காத நிலை உள்ளது. கடந்த 25 ஆண்டு களில் கர்நாடகா நீர்வள மேலாண்மைக்கு 30,000 கோடி ரூபாய் செலவழித்து உள்ளது. மேலும் தற் போது மேகதாதுவுக்கு 5,700 கோடி ரூபாய் ஒதுக்கி இருக்கிறது.

ஆந்திராவோ 'ஜலயக்ஞம்' என்ற திட்டத்தை அறிவித்து மிக அதிகமாக 1,86,000 கோடி ரூபாய் ஒதுக்கித் தீவிரமாகச் செயலாற்றுகிறது. புதிதாக பிறந்த தெலுங்கானா மாநிலம் கூட ஆந்திராவோடு போட்டிப் போட்டுக் கொண்டு ஏரி, குளங்களை நன்கு தூர்வாரி, பல திட்டங்கள் போட்டு அதிக நிதி ஒதுக்கிச் செயல் படுகிறது.

ஆனால், தமிழகமோ வெறும் 6,000 கோடி ரூபாய் மட்டுமே செலவழித்து உள்ளது. ஆனால், நம்மை காட்டிலும் வற்றாத பல நதிகளும், ஆறுகளும் கொண்டவை இந்த மாநிலங்கள். ஆனபோதிலும் கூட, நீர் மேலாண்மைக்கு நம்மைவிடவும் பல மடங்கு அதிகமாகச் செலவழிக்கிறார்கள். தமிழகத்திலோ வற்றாத நதி என்று சொல்லத்தக்க நதியோ, ஆறோ ஒன்றுகூட கிடையாது. ஆகவே நாம் தான் அவர்களை விட அதிக விழிப்புணர்வுடன் செயல்பட்டு இருக்க வேண்டும். ஆனால், தமிழகத்தில் ஏனோ இன்னும் விழிப்புணர்வு ஏற்படவில்லை.

தொகுப்பு : **தினத்தந்தி, 10.2.2019**

## அரியலூரில் உலகத் தாய்மொழி நாள்!

24.2.2019 ஞாயிறு அன்று பிற்பகல் 3 மணிக்கு, மொழிப் பேரறிஞர் ம.சோ. விக்டர் இல்லத்தில், தமிழ்க்களம் புலவர் இர. அரங்கநாடன் ஏற்பாட்டில், "உலகத் தாய்மொழி நாள் - பிப்ரவரி 21" கருத்த ரங்கம், சிறப்பாக நடைபெற்றது. பலர் உரையாற்றி னர்.

## வாழ்க்கை ஒப்பந்த விழா



**இரா. இராஜ் மகேந்தர் - பு. ஸ்ரீதேவி**



மா.பெ.பொ.க. செயற்பாட்டாளர் காஞ்சி இரா. இராசசேகர் - எஸ். வனிதா இணையோரின் மகன் இரா. இராஜ் மகேந்தருக்கும், சென்னை மாடம்பாக்கம் எம். புண்ணியகோடி - பு. விசயலட்சுமி இணையரின் மகள் பு. ஸ்ரீதேவிக்கும் மணவிழா 18.2.2019 அன்று திங்கட்கிழமை காலை 6.00 மணியளவில், மாடம்பாக்கம் தேனுபுரீஸ்வரர் கோயிலில் நடைபெற்றது. மாலை 6.00 மணியளவில் கிழக்குத் தாம்பரம், சேலையூர், பாலமுருகன் திருமண மகாலில் வரவேற்புரை நிகழ்வு நடைபெற்றது.

வரவேற்பு நிகழ்வில், தோழர்கள் வே. ஆனைமுத்து, சி. நடராசன், மு. ஜெயப்பிரகாசு, தாம்பரம் சுப்ரமணி, ப. வடிவேலு, சி. பெரியசாமி, தி. கோபாலகிருஷ்ணன், பொன்னப்பன், குறளமிழ்தல், ச. சிவகுமார், இரா. நாராயணமூர்த்தி, க. கோதண்டன், நாத்திகம் நாக ராசன், பவணந்தி, எஸ். கிருஷ்ணன் ஆகியோர் பங்கேற்று சிறப்பித்தனர். நிகழ்வின் மகிழ்வாக, சிந்தனையாளன் வளர்ச்சிக்கு ரூ.1000/-மும், வே. ஆனைமுத்து மருத்துவச் செலவிற்கு ரூ.500/-ம் அளிக்கப்பட்டது.

**- சி.நடராசன்**

## மடல் பகுதி

பேரன்புடைய ஆசிரியர் அய்யா அவர்களுக்கு வணக்கம்.

தங்கள் உடல்நலம் அறிய ஆவல். தாங்கள் விடுதலை ஆசிரியர் வீரமணியுடன் கருஞ்சட்டை அணிந்து காட்சி யளிக்கும் நிழற்படம் கண்டேன்; மகிழ்வுற்றேன். பிரிந்து நிற்கும் திராவிடர் இயக்கங்கள் ஒன்றுபடுதல் வேண்டும். தமிழக நலனுக்காக என்பது திராவிட - தமிழ் மக்கள் ஆவல். கருஞ்சட்டை அணிவகுப்பு முன்மாதிரியாக அமைந்துள்ளது.

ஒன்றுபடுவோம் - வென்று காட்டுவோம்.

'சிந்தனையாளன்' பொங்கல் மலர் சிறப்புடன் வெளி யிடப்பட்டது கேட்டு மகிழ்வுற்றேன். சிந்தனையாளன் வளர்ச்சி நிதிக்கு ரூ.1000/-க்கான காசோலை அனுப்பியுள்ளேன்.

உங்கள் பணி சிறக்க, நாடு நலம் பெற என் உளங் கனிந்த நன்றியும், வாழ்த்துக்களும்.

**- மரு.க.சோமாஸ் கந்தன்,** கோயம்புத்தூர்

# நிகழ்வும் நிலைபாடும்

## (மருத்துவச் சிகிச்சைக்கு முதலில் மருத்துவரை அணுகுக - மருத்துவமனை வேண்டாம்)

**- இரா. பச்சமலை**

2000ஆம் ஆண்டு, சனவரியில் இருசக்கர வண்டியில் அண்ணா மேம்பாலத்தில் சைதாப்பேட்டை நோக்கிப் பயணம். பாலத்திலிருந்து இறங்கியவுடன் இடப்புறம் ஒதுங்க முற்படும்போது வண்டி சாய்கின்றது. ஓட்டி கீழே விழாது நிலைகுலைந்து நிற்கிறான். உடன் பயணித்த மனைவி சாலையின் நடுவில். படுக்கையில் படுத்திருப்பது போல் எவ்வித அசைவுமின்றி நினைவின்றி கிடக்கிறார். பார்த்துப் பதைக்கிறான். படபடப்புடன் என்ன நடந்தேறிவிட்டதெனத் தெரியாது மலைப்புடன் நிற்கிறான். எல்லாம் முடிந்துவிட்டதோ என மனம் நொடிந்து மனைவியைப் பார்க்கிறான். சாலையோரமிருந்து அனைவரும் வந்துவிடுகின்றனர்.

அய்ந்து மணித்துளிகள் அசைவின்றி இருந்தவர் சற்று விழித்துப் பார்க்கிறார். இவனுக்கு உயிர் வந்த உணர்வு. சுற்றியுள்ளோர் தண்ணீர், சோடா, காபி கொடுக்கலாமென பதட்டத்துடன் முன் வருகின்றனர். மெல்ல எழுந்த அவரைக் கைத்தாங்கலாக அழைத்து வந்து நடைப் பகுதியில் அமர வைத்தவுடன் எல்லோரையும் பார்த்து ஏதும் வேண்டாம் எனத் தெரிவிக்கும் வகையில் கையை அசைத்துக் கொண்டு கையில் ஒரு குவளைத் தண்ணீரைப் பெற்று குடிக்காமல் சற்று நேரம் அமைதியாக இருக்கின்றார்.

பின் மெதுவாகத் தண்ணீரை உதட்டில் வைத்து சில துளிகளைக் குடித்துவிட்டு பின் சற்றுநேரம் கடந்து, அவ்வாறே செய்துவிட்டு எல்லோரையும் பார்த்து நேர்ச்சி நேரிட்டு மயக்க நிலையிலிருந்து திரும்புவோருக்குத் தண்ணீர், காபி என எதையும் குடிக்கத் தரக்கூடாது என்றும் அது, மூளை அடிபட்டுப் பாதிப்புக்குள்ளாயிருப்பின் அப்படிக் குடித்த தண்ணீர் குருதியுடன் வாந்தியாக வெளியேறி உயிருக்கே வினையாகி விடும் என்று அறிவுரை அளித்தார். அவர் கணவர் உள்ளிட்ட அனைவருக்கும் ஒரே வியப்பு. பின் அவர்கள் தந்த காபியைக் குடித்துவிட்டு, வீட்டுக்கு வந்து பொருள்களை வைத்துவிட்டு உடன் மருத்துவரிடம் சென்றனர்.

மருத்துவர் மிகவும் அமைதியாகவும் பொறுமையாகவும் விவரத்தைக் கேட்டறிந்து ஒன்றுமில்லை. சிறு மயக்கம் தான் அச்சம் கொள்ளத் தேவையில்லை எனத் தெளிவாகச் சொல்லி நம்பிக்கையூட்டினார். கை, கால்களை நீட்டி மடக்கச் சொல்லி, ஒரு பொருளைக் காட்டி அதை பல திசைகள் கொண்டு சென்று அதைப் பார்க்கச் சொல்லிய போது இவர் எவ்வித வலியும் இல்லையென்றும், இயல்பாகவே பார்க்க முடிகிறது என்றும் தெளிவாகச் சொல்கிறார்.

மருத்துவர் முடிவான முடிவுக்கு வந்தவராகத் தெளிவாகச் சொன்னார். வண்டி நேர்ச்சிக்குள்ளான போது துண்டாகத் தூக்கியெறியப்பட்டதின் அதிர்வாக சற்று மயக்கமுற்றிருந்தார் என்றும் அவருக்கு வேறு எவ்வித சிக்கலும் ஏற்படவில்லை என்றார். அவர் மருந்து எழுத முற்பட்ட போது, அடிபட்டவர் தான் ஒரு குரோசின் மாத்திரை போட்டதாகச் சொன்னார். அது (SOS); Save our Soul) ஒரு உயிர்க்காக்கும் மருந்தா கவே செயல்படும். நன்று-அதுவே போதும் எனச் சொல்லி மருந்தேதும்; தராமல் அனுப்பி வைத்துவிட்டார்.

மறுநாள் காலை எழுந்து அடுப்புப் பற்ற வைக்கக் குனிந்த போது, தலைச்சுற்றுவது போல் உணர்வு ஏற்பட்டதையடுத்து உடன் அந்த மருத்துவரை அணுகினர். அவர் விளக்கினார். இது சினிமாவில் வருவது போன்று 24 மணி அல்லது 48 மணிநேரத்தில் சரியாகிவிடுவது போன்ற மயக்கமன்று என்றும், இவர் வண்டியிலிருந்து தூக்கி எறியப்பட்ட போது ஏற்பட்ட மன அதிர்வு பல நாள்கள் கூடத் தொடரலாம்; அதுகுறித்து அஞ்சத் தேவையில்லை என்றும் நம்பிக்கையூட்டி அறிவுரைத்தார்.

இரண்டு, மூன்று நாள்கள் கடந்தன. மனதில் அச்சம். தலையில் அடிபட்டுள்ள நிலையில் இவருடைய நம்பிக்கை யூட்டும் அறிவுரையை மட்டும் ஏற்று வாளா இருந்திடல் சரியா எனப் பலவாறு அய்யம். திரும்பவும் அந்த மருத்துவரிடமே சென்றனர். அச்சத்தைச் சொன்னார்கள். அவர் மேலும் விவரித்தார்.

நீங்கள் ஸ்கேன் (அ) எம்.ஆர்.அய். எடுத்திட வேண்டுமெனக் கருதுகிறீர்கள். அது தேவையில்லை. ஏனெனில் தலையில் அடிபட்டு 72 மணிகள் கடந்துவிட்டன. தலையில் அடிபட்டதிலிருந்து 48 மணிநேரத்தில் குருதி வெளியாகி இருந்தால் கட்டியாகி விட்டிருக்கும். அப்படியெனில் மிகவும் கடுமையான மனப்பிறழ்வு பாதிப்புக்குள்ளாகி இருப்பீர்கள். ஆனால் நீங்கள் இயல்பு நிலையில் இருக்கிறீர்கள். சற்றும் கவலையுற வேண்டாம் என உறுதியான நம்பிக்கையளித்தார். எனினும் மலைத்து நின்றனர். சரி, நீங்கள் ரூ.2000, ரூ.3000 எனச் செலவு செய்து படம் எடுத்துப் பார்க்க நினைக்கிறீர்கள். வேண்டவே வேண்டாம். உங்கள் மன அமைதிக்காக ஒரு நரம்பியல் மருத்துவரைப் பார்த்துவிடுங்கள் எனச் சொல்லி நரம்பியல் மருத்துவர் ஒருவரைப் பார்க்கச் சொன்னார்.

நரம்பியல் மருத்துவரை உடனே சென்று பார்த்தோம். அவர் நாங்கள் பார்த்த மருத்துவரைக் குறிப்பிட்டு அவர் பார்த்த பின் நான் பார்க்கத் தேவையில்லை எனச் சொல்லி, அவர் நுட்பமாகப் பார்த்தார். ஒன்றுமில்லை. நீங்கள் என்னிடம் வந்துவிட்டீர்கள் என்பதால், உங்கள் நிறைவுக்காக எனச் சொல்லி சத்து மாத்திரை ஒன்றை எழுதிக் கொடுத்துவிட்டார். மன நிறைவுற்றனர்.

நிகழ்வு நிறைவு பெற்றது. நிலைபாடு?

மறந்தே விட்டோம். அந்நிகழ்ச்சியை. ஆனால் இதிலிருந்து நாம் மேற்கொண்ட நிலைபாடுதான் - நம் நாட்டில் நம் மக்கள் மனதில் மருத்துவச் சிகிச்சை பற்றிய மனநிலை - உளவியல் மனங்கொள்ளத்தக்கது.

இந்தச் சிகிச்சையை நாங்கள் மேற்கொண்டதில் செலவினம் என்று பார்த்தால் 2000 ஆண்டில் வெறும் ரூ.100-க்குள்தான். ஆனால் பெற்ற மன நிம்மதி, மன நிறைவு, மருத்துவர்கள் கொடுத்த அறிவியல், மருத்துவம் சார்ந்த அறிவுரைகள், நம்பிக்கை, ஊக்கம் இவற்றை உள்ளபடியே சொற்களால் வெளிக்கொணர முடியாது என்பது என் எண்ணம்.

நேர்ச்சியில் மண்டையில் அடிபட்டுவிட்டது. எவ்வாறான பாதிப்புக்குள்ளாகிவிட்டோமோ என்று புரிந்துகொள்ள முடியாத அச்சம் எனப் பல காரணிகள் மேலோங்கியிருந்தால் கட்டாயம் ஓர் பெரிய தனியார் மருத்துவமனைக்குத்தான் சென்றிருந்திருப் போம். இதுபோன்ற இக்கட்டான சூழலில் அரசு மருத்துவ மனையை அணுகும் அறிவுடைமையும் தெளிவும் எங்கேனும் எவரிடையேனும்-நல்ல சம்பளம், வசதி படைத்தவர் என்பவரின்றி, எளியோரிடயே இருக்க வாய்ப்பே இல்லை என்பது களநிலை - இதுவே பொது மக்களின் உளவியல். இது வருந்தத்தக்க இரங்கத்தக்க நிலை தனியார் மருத்துவமனை என்று சென்றிருந்தால் அவர்கள் முதலில் முதலுதவிச் சிகிச்சை அளித்திருப்பார்களா என்பதே அய்யப்பாடு. ஆனால் அதற்கு முன்பாகவே சி.டி ஸ்கேன் - அல்லது எம்.ஆர்.அய். என்று எடுத்து அதற்கு குறைந்த அளவு ரூ.5 ஆயிரம் முதல் ரூ.10000 பெற்றிருப்பர். ஆனால் அந்த நிலையில் அது தேவைதானா என்று நமக்கு எப்படிப் புரிந்திருக்கும்? நாம் அச்சத்தில் உறைந்து துன்பத்தின் பிடியில் துவண்டு கொண்டி ருக்கும் வேளை. ஆனால் அது முற்றிலும் தேவையற்றது என்பதை நம் மருத்துவர் உணர்த்துவதை மனங்கொள்வோம்.

நேர்ச்சியின் போது மண்டை ஓடு உடைந்தெறிந்து குருதிக் கசிவு அல்லது கொட்டுமெனில் அதற்கெல்லாம் உயரிய முதன்மையான சிகிச்சைதான். ஆனால் அந்நிலை ஏற்படாததால் அது முற்றும் தேவையில்லை. ஏனெனில் உள்ளே அடி பட்டு குருதி கசிந்திருப்பின் அதுஉறை நிலை அடைவதற்குக் குறைந்த அளவு 48 மணிநேரம் தேவைப்படும். அதற்கு முன் எடுக்கும் சி.டி.-எம்.ஆர்.அய். உறுதியான நிலையை வெளிப்படுத்திட முடியாது. அது அய்யத்திற்கிடமான தன்மையைத்தான் வெளிப்படுத்தியிருக்கும். அதன் அடிப்படையில் மருத்துவச் சிகிச்சை என்பது முடிவானதாக அமையாது. அய்யத்திற்கிடமானதாகவேதான் (Trail) இருந்திருக்கும்.

எனவே எந்த நிலையிலும் இதுவரை மேற்கொண்ட சிகிச்சை முறை வெறும் பணச்செலவை ஏற்படுத்துவதாகத்தான் இருந்திருக்கும். பின் எவ்வளவு நாள் உள் நோயாளியாக நிறுத்தி வைத்து விடுவார்களோ தெரியாது. அது அவர்கள் மனம் போல் முடிவாகும். இதற்கெல்லாம் பெருமளவு பல பத்தாயிரங்களில் செலவு பிடிக்கும். செலவு ஒரு பக்கம் இருக்கட்டும். இந்தச் சிகிச்சை பெரும் காலத்தில் நமக்கு நம்புக்கையூட்டும், தெம்பு தரும் நல்லுரைகள் அளிக்கப்பட்டிருக்குமா? இல்லவே இல்லை. மாறாக அச்சமூட்டி நம்பிக்கையிழக்கும் விளிம்பு நுனிக்கே நம்மை தள்ளிச் சென்று நிலைகுலையச் செய்து மன உளைச்சலுக்கு ஆளாக்கி விடுவர். இதுவெல்லாம் சரி, நமக்கு உண்மை நிலையையாவது விளக்கியிருப்பார்களா என்பது பெரும் அய்யத்திற்குரியது. எனவே இது குறித்து சற்று நிதானித்து இனி என்ன செய்ய வேண்டுமென்பதைக் காணலாம்.

இதுபோன்ற தேர்ச்சிகளிலும் நிதானத்தைக் கடைப்பிடித்து முதலில் தனியே மருத்துவரை அணுக வேண்டுமென்பதை அடிப்படையாகக் கொள்ள வேண்டும். கட்டாயம் மருத்துவமனைக்குள் சென்றிடக் கூடாது. அரிதாக சில விதிவிலக்குகள் இருக்கலாம். முதலில் மருத்துவரைப் பார்த்த பின் அவர் அறிவுறுத்தலின் அடிப்படையில்தான் மருத்துவமனைக்குள் அடியெடுத்து வைக்க வேண்டும். இது நேர்ச்சி நிகழ்வுகளுக்கே இந்த அணுகுமுறைதான் என்றால் சளி, காய்ச்சல், தலைவலி போன்ற சின்னச் சின்ன உடல் நலிவுக்கு தனியே மருத்துவரைத்தான் பார்க்க வேண்டும் என்பதைச் சொல்லத் தேவையில்லை.

மேற்சொன்ன வழிகளை எல்லாம் நான் சொல்லவில்லை. மணிப்பால் பல்கலைக்கழகத்தின் துணை வேந்தராகப் பணியாற்றிய இதயச் சிகிச்சை வல்லுநரான எக்டே மருத்துவர் தெளிவாகவும் விரிவாகவும் விளக்குகிறார்.

அவர் கவலையுடன் சொல்கிறார். உங்கள் எந்த வகையான நலக்கேட்டுக்கும் முதலில் வசிப்பிடத்திற்கு அருகில் கிளினிக் வைத்து மருத்துவம் செய்யும் மருத்துவருள் உங்களுக்கு ஏற்றவரிடம் சிகிச்சையைத் தொடங்குங்கள்.

குறிப்பாக அந்த மருத்துவர் காது கொடுத்துக் கேட்பவராகவும், கனிவுடன் நம்பிக்கையும் ஊக்கமும் ஊட்டக்கூடிய வகையில் பேசுபவராகவும் இருப்பவரா என்று உறுதி செய்து கொள்ளுங்கள். அதுவன்றி உடன் ஏதோ தனியார் மருத்துவ மனையொன்று சென்று வீட்டீர்களெனில், இதில் எந்த மருத்துவமனையும் விதி விலக்கில்லாமல் உங்கள் பணத்தைப் பறிப்பதிலே குறியாக இருந்து சிகிச்சை முறையை வகுத்து உங் களை வறியவராக்கும் அளவுக்கு உறிஞ்சிவிட்டு சிகிச்சை அளித்ததின் விளைவால் முற்றும் குணமடைந்தவர் களாக வெளியில் அனுப்புவார்களா என்பது அய்யத் திற்குரியதுதான். என வேதனையுடனும் மானுடப் பற்றுடனும் பொறுப்புடனும் பல கட்டுரைகளில் விளக்கி யுள்ளார்.

அவர் மருத்துவராக இருந்து மட்டும், அவர் மருத்துவச் சிகிச்சையைக் குறித்து மட்டும் சொல்லவில்லை. அவர் நாட்டைப் பிடித்திருக்கும் கொடும் நோயாய் பற்றிக் கொண்டிருக்கும் வெற்று பேச்சாளர்கள், அப்துல் கலாம் போன்றோரின் கருத்துக்களை மனதிற்கொண்டு நாட்டை வல்லரசாக்குவது இருக்கட்டும். முதலில் மக்களனை வருக்கும் அடிப்படைக் கல்வி கொடுங்களடா கயவர்களே என மனம் குமுறி மனம் உடைந்து சொல்கிறார்.

எனவே தோழர்களே! மக்கள் நலம் பேணும் அரசுகளும் மக்கள் பற்றுள்ளோரும் அருகி வருகின்ற இக்காலக்கட்டத்தில் அடிப்படையில் அனைவருக்கு மான தரமான கல்வி அரசால் (தாய்மொழி வழிக் கல்விதான் தரமாக அமைய முடியும்; இதை அரசு மட்டுமே தரமுடியும்) அளிக்கப்படுவதைக் குறிக்கோளா கக் கொள்வது. அடுத்து முதன்மையாக மக்கள் அனை வருக்கும் தரமான மருத்துவச் சிகிச்சை அளிக்கப்படு வதை (அரசால்தான் கொடுக்க முடியும்) உறுதிப் படுத்தும் குறிக்கோளாக வரையறைப்படுத்திட வேண்டி யுள்ளது.

இந்நிலையிலிருந்து அடி பிசகி, தனியாரும் கல்வி, மருத்துவத்தில் பங்களிக்கலாம் எனக் கருதினால் இவ் விரண்டையும் பெற முடியும் என்பதே முற்றிலுமாக நீர்த்துப் போய்விடும்.

இந்த அடிப்படைப் புரிதலுக்கு வருவதற்கு வேறெந்த ஆய்வும் மேற்கொள்ள வேண்டாம். அய்ரோப்பிய நாடுகள், அமெரிக்கா, கனடா, ஆசுத்துரேலியா என்பன நாடு வளர்ச்சியடைய (Growth) வேண்டுமென்று மட்டுமே எண்ணாமல் மக்கள் மேம்பாடடைய (development) வேண்டுமென்ற அடிப்படையாக மக்கள் பற்றுடையவர்களாக, மக்கள் நாயக முதன்மைக் கோட் பாடான மக்கள் நலத்தை முன்னிறுத்தித் தான் மக்கள் மேம்பாட்டு அளவில் (HDI-Human Development Index) மேலோங்கி இருக்க வேண்டுமென்று மக்களுக் கான கல்வியையும் மருத்துவத்தையும் அரசு மட்டுமே அளித்திட வேண்டுமெனச் செயல்பட்டு வருகின்றன. மேலும் நன் மதிப்புடனும், நல் ஊதியத்துடனுமான நல் வேலை வாய்ப்புக்களையும் பெற்றுத் தர அந்த அரசுகள் முனைந்து செயல்பட்டு வருகின்றன.

இதில் முற்றும் அரசு என்பதில்தான் கல்வி, மருத்துவம் என்பவை பெரும்பாலும் அனைத்து மக்களும் பாகு பாடின்றி, வேறுபாடின்றி ஒரே சீராகக் கிடைத்திட வழிவகை செய்திட முடியும். எவ்வகையில் தனியார் இதில் நுழைவரெனில் இரு துறைகளும் இந்தியாவில் உள்ளவாறு கேடுகெட்டத் தன்மைக்குத்தான் இட்டுச் செல்லும். இதை மனமறிந்து ஒன்றிய, மாநில அரசுகள் வெகுமக்களுக்கு முற்றும் எதிராக, இந்தச் சமூக சேவைப் பணிகளை மேற்கொள்ளும் பொறுப்புகளி லிருந்து தங்களை முற்றிலும் விலக்கிக் கொண்டுள் ளனர் என்பது தெளிவு.

இந்நிலை மாற மக்கள் பற்றுள்ளோர் அனைவரும் ஒன்றிணைந்து எவ்விலை கொடுத்தேனும் போராடிப் பெற்றிட வேண்டும். ●

## இலால்குடி சாதி ஒழித்த மறவர் முத்துச்செழியன் 88ஆம் பிறந்த நாள்!

இலால்குடி வட்டம், இடையாற்று மங்கலம், முத்துச் செழியன் அவர்கள், தம் 88ஆம் பிறந்த நாளை அவருடைய குடும்ப உறுப்பினர்களுடன், 19.2.2019 செவ்வாய் அன்று வீட்டில் எளிமையாகக் கொண்டாடினார்.

அவர் தம் இல்லத்தில், தந்தை பெரியார் அவர்களின் தலைமையில், சாதி ஒழித்த திருமணம் செய்து கொண்டவர்.

வருணசாதி ஒழிப்புக்காக, 26,11,1957இல் அரசியல் அமைப்புச் சட்டத்தை எரித்தமைக்காக, 18 மாதம் சிறைத் தண்டனை பெற்றார்.

வேலூர் சிறையில் நானும் அவரும் ஒரே காலத்தில் கைதிகளாக இருந்தோம்.

அவரும் அவருடைய துணைவியாரும் மக்களும் என்பால் மிக அன்பு கொண்டவர்கள்.

அவர் சிறையிலிருந்தவாறே, பி.ஏ. பட்டப் படிப்புக்குத் தேர்வு எழுதித் தேர்ச்சி பெற்றார்.

23.12.2019இல் திருச்சியில் நடைபெற்ற பெரியாரின் கருஞ்சட்டைப் பேரணி மற்றும் மாநாட்டில் பங்கேற்றுச் சிறப்புரையாற்றினார்.

தோழர் முத்துச்செழியன் நிறைவாழ்வு வாழ்க!

19.2.2019 - **வே. ஆனைமுத்து**

## நீர் வளத்தை மீட்டெடுக்க என்ன செய்வது?

தமிழ்நாடு பொதுப்பணித் துறை மூத்த பொறியாளர் சங்கம் தமிழக அரசுக்கு ஒரு திட்டத்தை சமர்ப்பித்து உள்ளது. அதன்படி அடுத்த 10 ஆண்டுகளுக்குள்ளாக போர்க்கால அடிப்படையில் தமிழக அரசு கீழ்க்கண்ட வழிமுறைகளில் திட்டமிட்டு நீர் மேலாண்மைக்கு செலவழித்தால் தமிழகத்தின் நீர்வளத்தை மீட்டு எடுக்கலாம்.

* சிற்றணைகள், தடுப்பணைகள் கட்டுதல் — ரூ.10000 கோடி
* பாசன கால்வாய்கள், வாய்க்கால்களை மேம்படுத்திச் சீரமைத்தல் — ரூ.25000 கோடி
* நீரேற்றுத் திட்டங்களை வடிவமைத்துச் செயல்படுத்துதல் — ரூ.30000 கோடி
* ஏரி, குளங்களின் கொள்ளளவைக் கூட்டி, பாசனத்தைச் சீரமைத்தல் — ரூ.15000 கோடி
* வீணாகும் வெள்ள நீரைச் சேமித்துப் பயன்படுத்தல் — ரூ.5000 கோடி
* அணைக்கட்டு, நீர்த்தேக்கங்களின் கொள்ளளவைக் கூட்டி வலுப்படுத்தல் — ரூ.2000 கோடி
* மழை நீரைச் சேகரித்து, நிலத்தடி நீரை உயர்த்துதல் — ரூ.2000 கோடி
* பக்கத்து மாநிலங்களில் இருந்து நீரைப் பெற பதிலுக்குச் செய்யும் பரோபகாரம் — ரூ.1000 கோடி

இந்த வகையில் தமிழக அரசு நிதி ஒதுக்க முன் வர வேண்டும் என்பது மூத்த நீரியல் நிபுணர்கள் தமிழக அரசுக்குத் தெரிவித்துள்ள யோசனை ஆகும்.

## மடல் பகுதி


உயர்திரு. வே. ஆனைமுத்து ஐயா அவர்களுக்கு, வணக்கம்.

தாங்கள் அனுப்பிய ‘‘சிந்தனையாளன் பொங்கல் மலர்-2019’’ நூல் 16.2.2019 அன்று கிடைக்கப் பெற்றேன். மிக்க மகிழ்ச்சி.

‘‘கல்வி : அன்றும் இன்றும்!’’ என்ற எனது கட்டுரையை வெளியிட்டமைக்காக எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். பொங்கல் மலர், சிறப்பாகவும் அழகாகவும் அமைந்துள்ளது. அதற்காகப் பாடுபட்ட தங்களுக்கும் பொங்கல் மலர் வெளியீட்டுக் குழுவினர்க்கும் எனது மனமார்ந்த பாராட்டுகளைத் தெரிவித்துக் கொள்கிறேன். நன்றி.

- **கு. ஏகாம்பரம்,** சென்னை-39

## பொறிஞர் க. வீரமுத்து முதலாம் ஆண்டு நினைவு நாள்



கடலூர் மாவட்டம், திட்டக்குடி வட்டம், ம. புடையூர் என்கிற சிற்றூரில் 24.3.1940இல் பிறந்தவர் க. வீரமுத்து. அவர் சென்னையில் மின் வாரியத்தில் பொறிஞராகப் பணியாற்றிய போது, மா.பெ.பொ.க., தி.மு.க., தி.க. முதலான அமைப்புகளில் ஈடுபாடு உள்ளவராகக் கடைசி வரை விளங்கினார்.

அவர் சுயமரியாதைக்காரர். அவர் கடந்த ஓராண்டாக நோய்வாய்ப்பட்டு, 23.2.2018-இல் மறைந்தார். அவருடைய நினைவேந்தல் படத்திறப்பு நிகழ்ச்சி டாக்டர் பொற்கோ தலைமையில் 11.3.2018இல் நடைபெற்றது.

க. வீரமுத்து மறைவையொட்டி முதலாம் ஆண்டு நினைவு நாள் 23.2.2019-இல் வருவதை முன்வைத்து, அவருடைய துணைவியார் காவிரி அம்மாள் அவர்களும், வீரமுத்து-காவிரி ஆகியோரின் மகளும், மாவட்ட நீதிபதியுமான (District Judge) தென்மொழி அவர்களும், வீரமுத்து அவர்களின் தம்பியான க. இராமசாமி அவர்களும், அவருடைய துணைவியார் நிர்மலா அவர்களும், மா.பெ.பொ.க. பொதுச் செயலாளர் வே.ஆனைமுத்து அவர்களை 19.2.2019 அன்று தாம்பரம் ஆனை. பன்னீர்செல்வம் இல்லத்தில் நேரில் சந்தித்து, க. வீரமுத்து அவர்களின் முதலாம் ஆண்டு நினைவைப் போற்றும் வகையில், ‘‘சிந்தனையாளன்’’ வளர்ச்சி நிதியாக ரூ.5,000 (ஐந்தாயிரம்) வழங்கினர். வாழ்க க. வீரமுத்து புகழ்!

## விளைச்சல் வீழ்ந்தது

தமிழகத்தின் காவேரி டெல்டா சாகுபடி பரப்பளவு என்பது 23 இலட்சம் ஹெக்டேர் பரப்பளவு ஆகும். இது நமது நீர் மேலாண்மை குறைபாடுகளால் ஆண்டுக்கு ஆண்டு படிப்படியாகக் குறைந்து, இது 2018-2019ஆம் ஆண்டில் 8.61 இலட்சம் ஹெக்டேராக சுருங்கிவிட்டது. சம்பா, குறுவை, தாளடி என முப்போகம் விளைச்சல் கண்டு வந்த தமிழகம் தற்போது ஒரு போகம் சாகுபடி செய்வதற்கே தள்ளாடுகிறது.

சாகுபடி பொய்த்து வருவதால், விவசாயிகள் விரக்தியின் எல்லைக்கே சென்று தற்கொலைகள் செய்து சாகும்படியான அவல நிலை ஏற்பட்டு உள்ளது.

தமிழகம் உணவு உற்பத்தியில் உலகிற்கே முன்மாதிரியாக திகழ்ந்த மாநிலமாகும். ஆனால், இன்றோ நாம் நம்முடைய அடிப்படை உணவுத் தேவைக்கே மற்ற மாநிலங்களிடம் இருந்துதான் கொள்முதல் செய்கிறோம் என்பது நினைத்துப் பார்க்கவே முடியாத வீழ்ச்சியாகும்.

## காஞ்சிபுரத்தில் செம்மொழித் தமிழச்சங்கம் தொடக்க விழா



காஞ்சிபுரத்தில் செம்மொழித் தமிழ்ச்சங்கம் தொடக்க விழா 'எஸ்.பி.கே. பார்க் இன்'இல் 24.2.19 ஞாயிறு காலை 10.30 மணிக்குத் தொடங்கியது. கூ.வ. எழிலரசு தலைமையுரை ஆற்றினார். முத்து அருணன் வரவேற்பு ரையாற்றினார்.

மருத்துவர் விமுனாமூர்த்தி நோக்க உரையாற்றினார். பேராசிரியர் இரா. மதிவாணன் தொடங்கி வைத்து உரை யாற்றினார். ச.ம.உ. சி.வி.எம்.பி. எழிலரசன், கே.பி. குமணன், முனைவர் அ. சக்ரவர்த்தி, முனைவர் மு. நிஜ்மா ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர். சு. உமா சங்கர் நன்றியுரைடன் விழா இனிதே முடிவுற்றது.

## மடல் பகுதி

பேரன்பு கொண்ட தோழர் ப. வடிவேலு அவர்களுக்கு வணக்கம்.

நலம். ஆசிரியர் முதல் அனைவரின் நலன் அவாவு கின்றேன்.

எனது நண்பர் மரு. சூடாமணி, எம்.எஸ். அவர்கள் தி.மு.க. இயக்கத்தில் செயற்குழு உறப்பினர். முன்னாள் நகரவைத் தலைவர், சேலம் நகர், முன்னாள் மாநகரத் தந்தை, சேலம் மாநகர்.

சென்ற ஞாயிறு (3-2-2019) அன்று என்னைக் காண என் இல்லம் வந்துற்றார். அவரிடம் என்னிடமிருந்து ஜனவரி சிந்தனையாளன் இதழைப் படிக்கத் தந்தேன். ஆசிரியர் ஆனைமுத்து என்பதை அறிந்ததும் தனக்கும் மாதந்தோறும் சிந்தனையாளன் படித்திட வேண்டும் என்று தன் விருப் பத்தைத் தெரிவித்தார். அவருக்கு இந்த பிப்ரவரி இதழி லிருந்து தவறாமல் அவரது முகவரிக்கு அனுப்பி வைத்து விட்டு எனக்குத் தொலைப்பேசி மூலம் அறிவிக்க வேண்டு கிறேன். உரூபாய் 500/- காசோலை இணைத்துள்ளேன் (எண்.920790).

- **மரு.க.சோமாஸ் கந்தன்**
M.D. கோயம்புத்தூர்

## திருமதி. கெஜலட்சுமி மறைவு



ஒடுக்கப்பட்டோர் பேரவையின் திருவல்லிக்கேணி பகுதித் தோழரும் பஞ்சசக்தி மாத ஏட்டின் ஆசிரியரு மான கோ.விசுவநாதன் அவர்களின் மனைவி திருமதி. கெஜலட்சுமி தாம் பரம் அரசு நெஞ்சக நோய் மருத்துவ மனையில் உடல்நலக்குறைவால் தம் 50ஆம் வயதில் 14.2.2019 வியாழக் கிழமை நள்ளிரவு 00.20 மணிக்கு மறைவுற்றார். ஒடுக்கப்பட்டோர் பேரவையின் தோழர்கள் ம.பரணிதரன், தி.ஞா.அருள்ஒளி, மவுலானா நகர் இரா.சுந்தரராசன், பொதுச் செயலாளர் கலசம் ஆகியோர் திருவல்லிக்கேணியில் உள்ள அவருடைய இல்லம் சென்று அன்னாரின் உடலுக்கு இறுதி மரியாதை செலுத்தினர். - செய்தி : **கலசம்**

### கீழ்வெண்மணிப் போராளி

## அமல்ராஜ் மறைவு



ஒடுக்கப்பட்ட சமூகத்தில் பிறந்தவர். வசந்தத்தின் இடி முழக்கமாய் எழுந்த நக்சல்பாரி அரசியலின் வர்க்கக் கோபத் தை கனலாய் தணலாய் நெஞ் சில் ஏந்திய அஞ்சா நெஞ்சன் எங்கள் தோழர் முத்து-மனோ கரன் என்ற பெயர்களைத் தாங்கிய தோழர் அமல்ராஜ் இராஜபாளையம் தேவதானத் தில் பிறந்தவர். சிபிஐ எம் எல் விடுதலை அரசியலை ஏற்றுக் கொண்டு கட்சியின் அழித்தொழிப்பு வேலைத் திட்டத்தை சிரமேற்கொண்டு செயல்படுத்தியவர். 1996 வரை ஆழ்ந்த அகன்ற அரசியல் நோக்கு கொண்டவர். சேத்தூர் ஜமீன்தார், ஆணைத்தாண்டவபுரம் கணக்கு பிள்ளை, பூவனூர் மணியக்காரர், என்று பண்ணை ஆதிக்கங்களை கணக்குத் தீர்த்தவர். கடைசியாக வெண்மணித் தீயில் கருக்கப்பட்ட எம் பாட்டாளி வர்க்க பட்டியல் சமூகக் கூலி ஏழைகளுக்கு இந்திய ஆளும் வர்க்கத்தின் நீதிமன்றம் ஞாயம் மறுத்தபோது தானே தலைமை ஏற்று மக்கள் நீதிமன்றத்தில் இரிஞ்சியூர் கோபால கிருஷ்ண நாயுடு வுக்கு மரண தண்டனையை நிறைவேற்றிய மக்கள் நீதியரசர் நமக்குப் பாடமாக இருந்தவர் இதோ இன்று 27.02.2019 புதன் கிழமை மாலை படமாகிப் போனார். தோழருக்கு தமிழக மக்கள் புரட்சிக் கழகம் தனது செவ்வணக்கத்தையும் புகழ் அஞ்சலியையும் தெரிவித்துக் கொள்கிறது. 74 வயதுவரை நிறைவாழ்வு வாழ்ந்த தோழரின் வாழ்வும் வரலாறும் தமிழ்நாட்டு வர்க்கப் போராட்ட வரலாற்றில் நின்று நீடித்து நிலைக்கும் இது உறுதி!.

- செய்தி : **அரங்க.குணசேகரன்** முகநூல் பதிவு

# தீண்டாமையே இந்துமதம்

- தந்தை பெரியார்

அகில இந்திய தீண்டாமை விலக்குச் சங்கத்தின் சென்னைக் கிளை யின் ஆதரவில் சென்ற 17 - 3 - 32 வியாழனன்று, காலஞ்சென்ற சுவாமி சிரத்தானந்தர் அவர்களின் உருவப் படத்தை வைக்கும் பொருட்டு, சர். ஏ. பி. பாத்ரோ அவர்கள் தலைமையில் சென்னைக் கோகலே மண்டபத்தில் ஒரு பொதுக் கூட்டம் கூடிற்று. கூட்ட ஆரம்பத்தில், திரு. பாத்ரோ அவர்கள், தீண்டாதாருக்கு இந்து சமூகம் செய்துள்ள தீமைகள் கொஞ்சம் அல்ல. அதை அகற்றுவதற்குப் பல சீர்திருத்தக்காரர்கள் பாடுபட்டு வந்திருந்தும், இன்று வரையிலும் இக்கொடுமை அழியாமல் இந்தியாவில் நிலைத்து வருவது வருந்தத் தக்கதாகும். ஒரு சமூகத்தாரைத் தொடவும் கூடாதென மிருகங்களைக் காட்டிலும் இழிவாக நடத்துவதை விடக் கொடுமையான விஷயம் வேறொன்றுமில்லை. புத்தர் போன்ற பெரியார்களின் உபதேசங்கள் இந்நாட்டில் தோன்றியிருந்தும், இன்னும் இத்தீண்டாமைக் கொடுமை ஒழியா மலிருப்பதற்குக் காரணம் இந்து சமூகத்தில் உள்ள மூட நம்பிக்கைகளும், மூடப் பழக்க வழக்கங்களுமேயாகும் என்று பேசியிருக்கிறார். இதைக் கொண்டு, நமது நாட்டில் தீண்டாமை நிலைத்திருப்பதற்குக் காரணம் இந்து மதமும், அதைக் கைப்பற்றியிருக்கும் மக்களிடம் உள்ள மூட நம்பிக்கைகளும், மூடப் பழக்க வழக்கங்களுமே யென்பதை அறியலாம். ஆனால் அதே சமயத்தில் சேலம் திரு. சி. விஜய ராகவாச்சாரியார் அவர்கள் பேசும் போது,

“இப்பொழுது நாம் யோசிக்க வேண்டிய விஷயம் தீண்டாமையை எப்படி விலக்கலாம் என்பதைப் பற்றியேயாகும். தீண்டாமை எப்படி வந்தது என்பதைப் பற்றி யோசிப்பதோ, அல்லது இந்து மதத்தின் மேல் குறைகூறிக் கொண்டிருப்பதோ தீண்டாமையை விலக்குவதற்குரிய வழியாகாது. இந்து மதந்தான் தீண்டாமை தொல்லையைப் புகுத்தி விட்டது என்று சொல்லவே முடியாது. இந்து சமூகம் தீண்டாமை நிலைத்திருப்பதை ஒப்புக்கொள்ள வேயில்லை என்று துணிந்து கூறுவேன்”.

என்று இந்து மதத்தைப் புகழ்ந்தும், தீண்டாமையை ஒழிக்க வேண்டும் என்பதை ஒப்புக் கொண்டும் பேசியிருக்கிறார். ஆகவே இவ்விருவர்களின் கருத்துக்களையும் கவனித்தால் தீண்டாமைத் தொல்லைக்கு இந்து மதம் காரணம் என்று திரு. பாத்ரோ கருதுவதாகவும், இந்துமதம் தீண்டாமையை ஒப்புக் கொள்ளவில்லை. ஆகையால் இந்து மதத்தைக் குறை கூறுவது தவறு என்று திரு. விஜயராகவாச்சாரியார் கருதுவதாகவும் அறியலாம். ஆனால் எது உண்மையான அபிப்பிராயம் என்பதைப் பற்றி நாம் சிறிது ஆராய்வோம். இன்று தீண்டாத மக்களை உயர்ந்த சாதிக்காரர்கள் என்பவர்கள் வசிக்கும் தெருவில் நடக்கக் கூடாது என்று தடுப்பதற்கும், தீண்டாதார்களை, உயர்ந்த சாதியினர் என்பவர்கள் தண்ணீர் எடுக்கும் குளம், கிணறு முதலிய வைகளில் தண்ணீர் எடுக்கக் கூடாது என்று தடுப்பதற்கும், அவர்களைப் பொதுப் பள்ளிக் கூடங்களில் சேர்ந்து படிக்கக் கூடாது என்று தடுப்பதற்கும் காரணம் இந்து மதமும், அதில் உள்ள மூடப்பழக்க வழக்கங்களும் அல்லவா என்று கேட்கிறோம்.

இன்று மலையாள நாட்டைச் சேர்ந்த குருவாயூரில், தீண்டாத மக்கள் கோயில் பிரவேசத்திற்காகச் செய்யும் சத்தியாக்கிரகத்தை எதிர்த்து நிற்கின்ற வர்கள், உயர்ந்த சாதியென்று சொல்லிக் கொண்டிருக்கும் வைதீக இந்துக்கள் தானே. இதைப் போலவே பம்பாய் மாகாணத்தில் உள்ள நாசிக் என்னும் ஊரில் தீண்டாதார்கள் கோயில் பிரவேச உரிமையின் பொருட்டுச் செய்யும் சத்தியாக்கிரகத்தை எதிர்த்து நிற்பவர்களும் உயர்ந்த சாதி யென்று சொல்லிக் கொண்டிருக்கும் வைதீக இந்துக்கள் தானே. இந்த உயர்ந்த சாதிக்காரர்களான வைதீக இந்துக்கள் இவ்வாறு தீண்டாதவர்களின் உரிமைகளுக்கு எதிரி டையாய் இருப்பதற்கு, இந்து மதத்தையும் இந்து மத சாஸ்திரங்களையும் தவிர வேறு ஏதாவது காரணம் உண்டா? என்றுதான் கேட்கிறோம். பார்ப்பனர்கள் வருணாச்சிரம தருமத்தின் பேராலும், சனாதன தருமத்தின் பேராலும், கூட்டங்கள் கூட்டுவதற்கும், மகாநாடுகள் நடத்துவதற் கும், அந்தக் கூட்டங்களிலும் மகாநாடுகளிலும் தீண்டாதவர்கள் ஆலயங் களுக்குள் செல்ல வேண்டுமென்று கேட்பதும் அதற்காக முயற்சி செய்வதும் இந்து மதத்திற்கு விரோதமான தென்றும், தீண்டாதார்க்குக் கோவில்களுக்குள் செல்லவும், உயர்ந்த சாதி இந்துக்களுடன் சமத்துவமாகப் பழகவும் உரிமை கொடுத்து விட்டால் இந்துமதம் அழிந்து விடுமென்றும் தீர்மானங்கள் செய்வதற்குக் காரணம் இந்து மதமும் இந்துமத சாஸ்திரங்களும் அல்லவா என்று தான் கேட்கின்றோம்.

பாமர மக்களால், மகாத்மாவாக மதிக்கப்படும் திரு. காந்தி அவர்கள் தீண்டாமையின் கொடுமையைப் பற்றியும், அதை ஒழிக்க வேண்டியதன் அவசியத்தைப் பற்றியும், பேசியும் எழுதியும் வருகின்றார். ஆனாலும் தீண்டாமை ஒழிய வேண்டும்; ஆனால் வருணாச்சிரம தருமம் நிலைத்திருக்க வேண்டும் என்றும், பிறப்பினால் ஒவ்வொருவரிடமும் குண வேறுபாடு உண்டு என்றும், ஆத்மாவில்தான் எல்லாரும் சமத்துவமே ஒழிய உடம்பில் சமத்துவமில்லை என்றும் சொல்லிக் கொண்டு தான் தீண்டா மையை ஒழிக்க வழி தேடுகிறார். இவ்வாறு அவர் சொல்லுவதற்குக் காரணம் அவர் படித்த இந்து மத சாஸ்திரங்களும், அவர் நம்பும் இந்து மதமும் அல்லவா என்றுதான் கேட்கிறோம்.

இனி இந்துமத நூல்களில் வருணாச்சிரம தருமத்தைப் பற்றிக் கூறப்படாத சாஸ்திரங்கள் எவையேனும் உண்டென்றும் எவராலேனும் சொல்ல முடியுமா? திரு. காந்தியினாலும், மற்றும் இந்து மத வைதீகப் பண்டிதர் களாலும் மற்றும் சீர்திருத்த வாதிகளாலும் கூடப் புகழ்ந்து பேசப்படும் கீதை யில்தான் வருணாச்சிரம தருமத்தைப் பற்றிக் கூறப்படவில்லை என்று சொல்ல முடியுமா?

**- குடி அரசு தலையங்கம் 27.3.1932**

# பாவாணர் பிறந்தநாள் விழா-திருவள்ளுவர் விழா



தமிழகத்தில், அயல் மாநிலங்களில், அயல்நாடுகளில் வாழும் தமிழர்கள் திருவள்ளுவர் பெயரில், திருக்குறள் பெயரில், குறள்நெறியாளர் பெயரில் மன்றங்கள், நிறுவனங்கள், அமைப்புகள் உருவாக்கி நன்கு செயல்படுகின்றனர். நூற்றுக்கு மேற்பட்ட அமைப்புகள் ஒருவரை ஒருவர் அறியவும் ஒன்றுபட்டுச் சிறிய சிறிய செயல் திட்டங்களை ஆட்சியாளர்களிடமும் மக்களிடமும் கொண்டு செல்லும் பணித்திட்டங்களை உலகத் திருக்குறள் கூட்டமைப்பு வகுத்தும் தொகுத்தும் வழங்கிக் களப்பணியில் இறங்கியுள்ளது. இந்த வளர்ச்சி வெற்றியீட்டிட வேண்டும். இதற்காக முறையான அறக்கட்டளை பதிவாகியுள்ளது. மேலும் மாவட்டங்கள் தோறும் குறள் வளர்ச்சிப் பொறுப்பாளர்கள் தேர்வு செய்யப்பட்டுப் பொதுக்குழுவில் இடம்பெற்று மூன்று திங்களுக்கொருமுறை கூடிப்பேசி தீர்மானத்தை இயற்றி அதன்படிச் செயல்பட்டு வருகின்றனர். அதில் ஒன்றாகக் குறள்நெறிக் கரணப் (சடங்குகள்) பயிற்சிப் பட்டறைகள் நடைபெற்றுக் குறள்நெறிக் காரண ஆசான்கள் தமிழகத்தில் உருவாகி வருகின்றனர். எதிர்காலத்தில் திருக்குறள் நெறிக்கு எதிரானவர்கள் மனமாற்றமடையச் செயல்திட்டங்கள் உருவாகி வருகின்றன. நான்கு திசையிலும் பரப்புரை ஏற்பாடுகள் செய்ய எண்ணியுள் ளோம். குறள்நெறிப் பணிகளைக் கூட்டு முயற்சியில் செய்திட அடிப்படைத்தேவைப் பணிகள், அறிக்கை அழைப்பிதழ், பரப்புரைச் சுவரொட்டிகள் காலமெல்லாம் அனைவருக்கும் கிடைத்திடப் பரப்புரை உந்துகள் வாங்கிடப் பணம் தேவை. இப்பணியில் உங்கள் மாவட்டத்தில் உள்ள குறள்நெறிச் சான்றோர்கள் உங்க ளையும், உங்கள் ஊரில் உள்ள நிறுவனங்களையும், அமைப்புகளையும் கண்டறிந்து பதிவு செய்துள்ளனர். இம்மடல் பெற்றபின் தங்களின் கருத்துகளைத் தெரிவியுங்கள். மடலிலும் வழிகாட்டுங்கள். கீழ்க்கண்ட அளவுகோலில் அறக்கட்டளைக்குப் பணம் திரட்ட முடிவு செய்து மாவட்டங்களுக்குப் பயணம் செய்யவிருக் கிறோம். இந்தக் திட்டத்தில் உரு ஐம்பது இலக்கம் (உரு.50,00,00) வைப்பு நிதியாக வைத்தால்தான் நல்ல பல திட்டங்களைத் தீட்டிச் செயல்பட முடியும். நடைமுறைச் செலவு, உயிரோட்டமாகச் செய்ய வேண்டிய செலவுக்கு வட்டிப் பணம் தேவைப்படுகின்றது. சிறுதுளி பெரு வெள்ளம் என்பதைக் கருத்தில் கொண்டு செயல்பட விருக்கிறோம். வருமானவரிச் சலுகையை அறக்கட்டளை மூலம் பெறமுடியும். உரு.1000 முதல் எவ்வளவு இயலுமோ அவ்வளவு வழங்கித் தகுதிச் சான்றிதழ் பட்டம் பெறலாம்.

உரு 1000 - குறளன்பர்

உரு 2000 - குறள் வழிக்காட்டி

உரு 3000 - குறள் பற்றாளர்

உரு 4000 - குறள் செம்மல்

உரு 5000 - இதற்கு மேல் குறள் நெறியாளர்

திருக்குறள் பேருள்ளங்களின் நன்கொடையாளர் களின் ஒப்புதல்.

1. பெயர்
2. முகவரி
3. கைப்பேசி எண் (மின்னஞ்சல்)
4. அறக்கட்டளைக்கு செலுத்த விரும்பும் பணம் : உரு.
5. வருமானவரிச் சலுகை
6. தங்கள் வங்கி கணக்கு எண்
7. வங்கியின் பெயர் --------------------------
   ஊர் ------------------------------------------
8. காசோலை வழி வங்கி வரைவோலை வழி பணவிடை வழி நேர்வழி அனுப்பி வைக்க ஒப்புதல் அளிக்கிறேன்.

இடம் : இப்படிக்கு,

நாள் :

## அதியன் தோற்றம்



திருவாரூர் மாவட்டம், திருத் துறைப்பூண்டி வட்டம், கீழப்பெரு மழை சோ. அண்ணாதுரை - இராகிணி இணையர்க்கு 11 செப்டம்பர், 2018 அன்று ஆண் குழந்தை பிறந்தது. குழந்தைக்கு அதியன் என்று பெயர் சூட்டினர். குழந்தை பிறந்ததன் மகிழ்வாக சிந்தனையாளன் வளர்ச்சி நிதி ரூ. 2000/- அளித்துள்ளனர். இத்தம்பதியினர் 26 சனவரி 2015 அன்று மார்க்சிய பெரியாரிய பொதுவுடைமைக் கட்சியின் பொதுச்செயலாளர் அறிஞர் வே. ஆனைமுத்து அவர்கள் தலைமையில் சுயமரியாதைத் திருமணம் செய்து கொண்டனர்.

# ஒவ்வொரு வாக்கும் முக்கியம்

சட்டமன்ற உறுப்பினரையோ, மக்களவை உறுப்பினரையோ தேர்ந்தெடுக்கும் பொழுது நேரம் ஒதுக்கிச் சிந்தித்து, வாக்குகளை பணத்திற்கோ, இனாம் பொருட்களுக்கோ, ஆசை வார்த்தைகளுக்கோ விற்கக் கூடாது. மக்கள் நலனுக்குப் பாடுபடும் தன்னலமற்ற, எளிதில் சந்திக்கக் கூடிய ஒருவரையே தேர்ந்தெடுப்பது முக்கியம்.

சொன்னதைத்தான் செய்வோம்; செய்வதைத்தான் சொல்வோம் என்று அறிக்கையில் சொன்னது அதில் 20 விழுக்காடு கூட செயல்படுத்தப்படவில்லை. வக்கனையாகப் பேசியும் அறிக்கைவிட்டும் மக்களைச் சந்திக்கக்கூட பணம் கேட்கும் கேவலமானவர்களைத் தேர்ந்தெடுக்காதீர்கள். நம்மை ஆண்ட மற்றும் ஆளும் கட்சிகள் நமக்கு அடிப்படைத் தேவையான, கல்விக்கு வேலை வாய்ப்புக்கு கவலைப்படவில்லை. மொத்த அதிகாரத்தையும் மைய அரசுக்கு விட்டுவிட்டுத் தரகு வேலை செய்யும் கட்சியையும், தாய்மொழிக்குப் பாதுகாப்புத் தராத கொள்கையற்ற அரசியல் கூட்டணியையும் நம்மை கொள்ளையடிக்கும் கூட்டத்தையும் தோற்கடியுங்கள்.

இலவசமாகக் கல்வியும், குடிநீரும், மருத்துவமும் அளிப்பதில் உத்திரவாதம் தருவோரையும் உயர் கல்வியிலும் வேலை வாய்ப்பிலும் விகிதாச்சாரப்படி இடப்பங்கீடும் உணவு பொருள்களுக்கும், ஆயுள் காப்பீட்டு சேமிப்புக்கும் மக்கள் நலனுக்குச் செய்யப்படும் சேவைக்கும், வரியில்லாமல் ஆட்சி செய்வோம் என்றும் நீர்நிலைகளையும் நிலத்தடி நீரையும் இயற்கை வளங்களை (காடுகளையும் மலைகளையும்)யும் உழவுத் தொழிலையும் காப்போம் என்றும் மதுவை ஒழிப்போம் என்றும் உறுதி கூறும் உறுப்பினர்களைத் தேர்ந்தெடுப்போம்.

போட்டியாளர்களில் நல்லவர்கள் இல்லை என்றால் வாக்களிக்க விருப்பமில்லை என்ற பதிவுக்கு வாக்கைப் பதியுங்கள். விருப்பமில்லாப் பதிவில் அதிகப் பதிவு இருந்தால் தேர்தல் ஆணையம் போட்டியிட்ட அனைவரையும் ஐந்து தேர்தல்களுக்குப் போட்டியிடத் தகுதி நீக்கம் செய்தும், போட்டியிட்ட சின்னத்தையும் தடைசெய்து தேர்தல் ஆணையம் செயல்பட வேண்டும்.

தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்கள், தங்களின் சுயமரியாதையையும், சபை நாகரிகத்தையும் இழக்காமல், அரசு ஊழியர்களை மிரட்டித் தரகு வேலை செய்யாமல் தொண்டர்களைத் தொகுதியில் நலத் திட்டத்தைத்தவிர வேறு செயல்களுக்குப் பயன்படுத்தாமல், ஆடு மாடுகள் போல் அரசியல் சந்தையில் அய்ந்தறிவு குதிரையாகச் செயல்படாமல் பணியாற்றும் உறுப்பினர்களைப் போற்றுவோம்.

- உழவர் மகன் **ப. வடிவேலு**

## சிந்தனையாளன் வளர்ச்சி நிதி - மார்ச்-2019

| | | |
|---|---|---|
| **க.இராமசாமி** | சென்னை | 5000/- |
| **துரை சித்தார்த்தன்** | காட்டுமன்னார்கோயில் | 1000/- |
| முனைவர் **அ. ஆறுமுகம்** | திருமழபாடி | 500/- |
| **தமிழேந்தி** | அரக்கோணம் | 500/- |
| **இரா.பச்சமலை** | சென்னை | 500/- |
| பாவலர் **வையவன்** | திருவண்ணாமலை | 500/- |
| **தமிழ்நாடன்** | குவைத் | 500/- |
| **மோ.சி. சங்கர்** | வேலூர் | 200/- |
| **கி. இராமச்சந்திரன்-மேகலா** | வாலாசாபேட்டை | 200/- |
| **ப.வெங்கடேசன்-அரங்கமணிமொழி** | வாலாசாபேட்டை | 200/- |
| **வசந்தா மதியழகன்** | அரியலூர் | 200/- |
| **இளவரசன்,** தமிழ்க்களம் | அரியலூர் | 200/- |
| **சி. இலக்கியா** | சென்னை | 100/- |
| **அ. லயா** | கிழக்கு லண்டன் | 100/- |
| **சி. அகிலா** | சென்னை | 100/- |
| திருமதி. **சகுந்தலா குப்புசாமி** | சிறுநாத்தூர் | 100/- |
| **மா. சுப்பிரமணி - கஸ்தூரி** | தாம்பரம் | 100/- |
| **நா. மதனகவி** | வாணியம்பாடி | 100/- |
| **மு.செயபால்** வழக்குரைஞர் | திருவண்ணாமலை | 100/- |
| **க. நாகராசன்** | ஆவடி | 100/- |
| **கோ.நக்கீரன்** | சோளிங்கபுரம் | 100/- |
| **க.பிரபாகரன்** | தஞ்சாவூர் | 100/- |
| **இரா.காந்தி** | வடக்கு மாங்குடி | 100/- |

## மா.பெ.பொ.க. வளர்ச்சி நிதி - மார்ச்-2019

| | | |
|---|---|---|
| புலவர் **இரா.கலியமூர்த்தி** | சிறுகடம்பூர் | .... 100/- |
| **பொ.சுப்பிரமணியன்** | கீழ்பென்னாத்தூர் | .... 100/- |
| **முத்து அன்பழகன்** | சீர்காழி | .... 100/- |
| **அழகு அன்பழகன்** | சீர்காழி | .... 100/- |
| **அறிவுக்கடல் ராஜ்குமார்** | சிதம்பரம் | .... 100/- |
| **க. நாகராசன்** | ஆவடி | .... 100/- |

**மார்க்சியப் பெரியாரியப் பொதுவுடைமைக் கட்சிக்காக** வெளியிடுபவர், ஆசிரியர் **வே.ஆனைமுத்து,**
மனை எண்.277/2, சென்னை-திருவள்ளூர் நெடுஞ்சாலை, அம்பத்தூர், சென்னை - 600 050.
அச்சிட்டோர் : **பெரியார் அச்சிடுவோர் வெளியிடுவோர் குழுமம்,** சென்னை-50. ☎ : 9597526990

Printed by **V. ANAIMUTHU** and Published by V. Anaimuthu on behalf of Marxist Periyarist Communist Party, and printed at Periyar Printers & Publishers Place of Printing No.277/2, Chennai-Tiruvallur High Road, Ambattur, Chennai-50. Editor : **V. ANAIMUTHU**